# தேசம் தொலைத்த கதைகள்



ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



1789...1989

**Nous tenons a exprimer du fond du coeur nos sinceres remerciements, du fond du coeur, au peuple francais, qui a inculque au monde entier les ideaux de,**

## Liberte, d'Egalite et de Fraternite

**par la plus grande revolution que le monde ait connue depuis deux siecles.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் தாண்டிய நதிகள்

**(சிறுகதைத் தொகுதி)**

# Thesam Thandia Nathikal

**Un Roman Court Collection en Tamoul**

**et Collection en Francais**

Public Par :

Association Des Ecrivains
Tamouls Dans L'Europe

**30, Rue de Tourville,**
**93600, Aulnay Sous Bois**
**FRANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PremireEdition : *03-10-1989*
தொகுத்தோர் : ஐரோப்பியதமிழ் எழுத்தாளர்ஒன்றியம்
பதிப்பாசிரியர்: M. அரிய நாயகம்

Editcar : M. Arianayagam

Distribution Limitee aux Members

ஓவியம் : ஜமால், கரோ, அமலா, ராமு

Wrapper & Inside Printed at :
Neat Printers
Madras-600 002

Published by :
ASSOCIATION OF TAMIL WRITERS IN EUROPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ ?

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

—பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தொகுதியில்....

**சுறாக்கள் மனிதராகி விட்டால்**
**ஜெர்மன் மூலம்** Bertolt Brecht *தமிழில்:* **ந. சுசீந்திரன்**

**தாயகத்தாகம்**
—ஜெயா-சிறி (சுவிஸ்சலாந்து)

**நிகழ்வுகள்**
—கோவை-றைதன் (ஒல்லாந்து)

**சுளை அறியாத பலாமரங்கள்**
—நொயிஸ் சிவபாலன் (மே. ஜேர்மனி)

**மரணவணிகன்**
—சாரணியன் (மே. ஜேர்மனி)

**சுழற்சி**
—எம். ஆர். வசந்தி (பாரிஸ்)

**வேண்டாத வேட்டுக்கள்**
சாரணியன் (மே. ஜேர்மனி)

**விபரம் மறு கடிதத்தில்**
—சு. கருணாநிதி (பாரிஸ்)

**அதிர்வுகள்**
—சி. உதயகுமார் (பாரிஸ்)

**யார் அவர்கள்?**
—நல்லைக் கண்ணன் (பாரிஸ்)

**பெண்வாடை வீசாத பிரமச்சாரிகள்**
—K. S. T. சபாஸ் (சுவிஸ்சலாந்து)

**திருந்தாத உள்ளங்கள்**
—சிறீ (BERN) (சுவிஸ்சலாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**கலைமாமணி டாக்டர் வாசவன்**
*தலைவர், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்*

'ஈழம்' என்பது வேழம்.

அவ்வீர வேழத்தை நோக்கி சிங்கள வேல்கள் பாய்ந்து கொண்டு இருக்கின்றன. அந்த வேல்களை முறிக்கும் துப்பாக்கித் தோட்டாக்களே இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள்.

சிறுகதைக்குப் பல வடிவங்களும், கூறுகளும், பரிமாணங்களும் சொல்லப்படுகின்றன. சொல்பவர்கள் எல்லாம் அனேகமாகச் சுகவாசிகளாக இருக்கின்றனர்; அல்லது அக்கரையிலிருந்து பார்க்கும் அனாவசியங்களாக இருக்கின்றனர்.

'சிறுகதை' என்பது சுயம்பு. அது தானாகப் பிறக்கக் கூடியது. தனக்குத்தானே வடிவத்தை எடுத்துக் கொள்ளக் கூடியது. மேலும், 'சிறுகதை' என்பது செய்தியைக் கூறக் கூடிய செய்தித் தாள் அல்ல. அதற்கு நாளிதழ் போதும். 'சிறுகதை' என்பது இந்தக் கணத்துக்காக ஏதோ ஒன்றைச் சொல்வதற்காகத் தோன்றியது. அதைச் சொல்லி முடித்த பின் சிறுகதையின் கடமை முடிந்தது. சொல்ல வேண்டியதைத் திருத்தமாகவும், தீர்மானமாகவும் சொல்லி இருந்தால், காலம் அதைச் சுவீகரித்துக் கொண்டு, மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய பணியை ஏற்றுக் கொள்கிறது.

சிறுகதையின் பணியைக் காலம் எடுத்துக் கொள்ளலாமே தவிர, காலத்தின் பணியைச் சிறுகதை எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கூடாது. ஏனென்றால் காலத்தைக் கணக்கு எடுப்பவன் கனவுகளை விதைப்பவனே.

இன்றைக்காக, இந்தக் கணத்துக்காக உயிர் எடுத்து, குருதி பாய்ந்து, உணர்வுச் சிதறல்களை, சிறல்களைக் கொட்டுகிற ஒரு நிகழ்வும், நெகிழ்வுகளுமே சிறுகதை கருக் கொள்ளும் மணிவயிறுகள்.

உண்மையைத் தொட்டு எழுதுகின்ற எழுத்து மட்டுமே நாளைய வரலாறு ஆகிறது. இன்றையப் பொய் இன்று மாலை வரை கூட நிலைக்காது.

தமிழகத்தில் இன்று உண்மைக்குப் பஞ்சமாகி விட்டது. அதனால்தான் இவர்கள் இங்கே கற்பனைக் கயிற்றைத் திரித்துக் கதை பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. இங்கே எதிர்பார்ப் புக்கு ஒன்றும் இல்லை. இவர்கள் போரிடாமலே இவர் களுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. பெற்றோரை, உடன் பிறப்புகளை, கணவனை, மனைவியை, பெற்ற பிள்ளைகளை, உற்றார், உறவினர்களை இழக்காமலே, இவர்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது. உழைக்காமல் வெறும் நாவாலேயே பணத்தைக் காய்க்க வைக்கக் கற்றுக் கொண்டு விட்டார்கள். வீரத்தைப் புறநானூற்றில் புதைத்து விட்டு, கோழையாய் இருப்பதிலே கோடிச் சுகம் காண்பவர்களாகப் போய் விட்டார்கள். அதனால் ஒரு போலித்தனம் இலக்கியத்திலிருந்து இன்றைய மனிதர்கள் வரை பரவிக் கிடக்கிறது.

இந்தியர் விடுதலைக்காக கொடுத்த குரல் அதிகம்; விலை கொஞ்சம். வெள்ளைக்காரன் இந்தியாவைக் கழற்றி எறியக் காலம் பார்த்துக் கொண்டு இருந்தான். சில தண்ட வாளங்களைப் பெயர்த்து, அபூர்வமாக விரல் விட்டு எண்ணக் கூடிய சில உயிர்களைக் காவு கொடுத்துச் சத்தம் போட்டவுடனேயே வெள்ளைக்காரன் இந்தியாவை விட்டு வீசி விட்டுப் போய் விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியொரு பேறு ஈழத்தவர்க்குக் கிடைக்கவில்லை. அந்த மண்ணின் மைந்தர்கள் தம் மண்ணைக்கேட்கிறார்கள்; மானத்தைக் கேட்கிறார்கள். சொந்தக்காரன் மனுக் கொடுக்கிறான்;கொள்ளைக்காரன் கொடுக்க மறுக்கிறான்.

கேட்டுக் கிடைக்காததைச் சுட்டுக் கேட்கிறார்கள். தமிழ் வாடை வீசிய ஈழத்து மண்ணிலே இன்று பிண வாடை வீசுகிறது. தென்றல் வீசிய தெருக்களிலே இன்று இரத்த ஆறு ஓடுகிறது. செல்வந்தர்களாக வாழ்ந்தவர்கள் இன்று சீரழிந்து, அகதிகளாக உலக நாடுகளை நோக்கி ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய சொந்த பந்தங்கள் எல்லாம் சோகங்களாகிப் புலம்புகின்றன.

இன்றைய ஈழத்து இலக்கியம் இந்த உண்மை அதிர்வில் எரிமலையாக வெடித்துக் கொண்டு இருக்கிறது.

எனக்குத் தரப்பட்ட இந்தச் சிறுகதைத் தொகுப்பிலும் ஈழத்து எரிமலைகள் ஏராளமாக வெடிக்கின்றன.

ஓ! நேயத்தைத் தேடும் நெஞ்சங்களுக்குத்தான் எத்தனை எத்தனை காயங்கள்!

இந்தக் காயங்களெல்லாம் இங்கே கதைகளாகி இருக்கின்றன. நாளைய ஈழத்துச் சுதந்திர வரலாற்றுக்குக் குறிப்புகளைக் கொடுக்கின்ற கொள்கை வீரர்களின் குமுறல்கள், வீணாக வடிந்து விடக் கூடியவையல்ல; வாழ்ந்து தீரக் கூடியவை.

நான் இதில் படித்தது கொஞ்சம்; ஆனால் படிந்தது அதிகம்.

ஒன்றா[redacted]முடியாதவர்கள் எழுத்தாளர்கள். ஏனென்றால் சின்னச் சின்னத் தீவுகளாகப் பிரிந்துகிடப்பதிலேயே பிரியம் உள்ளவர்கள் அவர்கள். கேட்டால், 'சுதந்திரம்' என்பார்கள்

சுதந்திரத்தைத் தேடுபவர்களுக்குத் தான் ஒன்றி இழைவதன் அருமையும், பெருமையும், அவசியமும் புரியுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டவர்களாக இருக்கிறார்கள் ஐரோப்பாவில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள். 'ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்' என்ற மன்றினை அமைத்து, பொய்யாய்ப் பழங்கதைகள் பேசாமல், மெய்யெழுத்தாக மட்டுமல்லாமல் ஆயுத எழுத்துக்களாகவுமாகி, இன்றைய ஈழத்தின் கண்ணீர்க் கதைகளைக் கூறுகிறார்கள். கூறுவது காற்றோடு போகாமல் இருக்க, அச்சுக் கல்வெட்டிலும் செதுக்குகிறார்கள். அவர்கள் போர் வெல்க! கண்ணீர்காய்க'

எழுத்தாளர் சங்கத்தின் தலைவனாக இருக்கக் கூடிய எனக்குத்தான் தெரியும், 'எழுத்தாளர்களை எல்லாம் ஒன்று சேர்ப்பது எவ்வளவு கடினம்?' என்பது. அந்தக் கடினப் பணியை, பவனி வரும் பல்லக்காக்கிக் கொண்டு இருக்கும் திரு. அரியநாயகம் அவர்களை, 'இனம் புரிந்து பாராட்டி மகிழ்கிறேன்

அன்புடன்,

வாசவன்

1—10—1989

1/11, சத்தியமூர்த்தி நகர்,
நந்தனம்,
சென்னை-600 035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கு வெளியே...

உச்சி வெய்யில், தகதகக்கின்ற அனல் வெய்யில் இதனிடையே நடந்து போகிற ஒரு மனிதன். அந்தப் பெரு மணல் வெளியை தாண்டிச் செல்வதிலேயே கண்ணுங்கருத்த மாகியியிருக்கிறது அவனது மனம். அந்த மனமும்கூட துடைத்துவிட்ட வானத்தில் ஓடுகிற முகில் துண்டினை, கணப்பொழுதிலே துள்ளியோடுகின்ற வெள்ளை முயற் குட்டியாய் கண்டு புன்னகை செய்து விடுகிறது. வானின் இடியைக் கண்டு அஞ்சிய மனிதனிலிருந்து வானையே தனது வீதியாய் ஆக்கிவிட்ட இன்றைய மனிதன் வரை அவன் மனதிலே இந்த இயல்பு குன்றாமல் குறையாமலே இருந்து வந்திருக்கிறது. அழுகையிலும் அவலத்திலும் மட்டுமல்லாது சிரிப்பிலும் களிப்பிலும் அவனது மனம் கதையாய், கவிதையாய் ஓவியமாய், நுண்கலைகளாய் சிலிர்த்து மலர்ந்திருக்கிறது. காலந்தோறும் அவன் இவ்விதமே தன்னை இவற்றிலே பதிவு செய்து கொண்டான். இவையே அவனது கலாசார, பண்பாட்டுச் செல்வங்களாய் உருக்கொண்டன.

இதே கதை எல்லாத் தேசங்களிலுனம் பொதுக்கதை. கடந்த சுமார் பத்தாண்டு காலம், ஈழத்தமிழ் மக்களின் வாழ்விலே கண்ணீரையும், கருமையையும் விதைத்த காலம். இன ஒடுக்குமுறை அவர்களிலே பலரை பூமிப்பந்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அகதிகளாய் சிதறியோட வைத்தது. அங்கெல்லாம் அவர்கள் விம்மி விம்மி அழுத குரல் கேட்டு காற்றுக்கும் காது அடைத்துப் போய் விட்டது. வானத்திற்கும் கண்கள் குருடாகி விட்டது. கடலுக்கு கண்ணீரும் வற்றி வரண்டு போய் விட்டது. இன்னலுடன் அடைக்கலம் தேடிய இந்த மனிதரெல்லாம் நவீன திரிசங்குகள் ஆகிப்போயினர். இவர்களின் மௌனத்திலும், சத்தத்திலும், சிரிப்பிலும், அழுகையிலும் அடிநாதமாகப் போயிற்று கவலையும் சோகமும்.

இவை மறக்கவும், மறைக்கவும் முடியாத கவலைகள்; சோகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யதார்த்தமானவை. ஏனெனில் வேரில்லாத ஒவ்வொரு மனிதனும் இந்தக் கவலைக்கும், துயரத்துக்கும் சொந்தக்காரனாக ஆகியே தீர வேண்டியுள்ளது.

பூமிப்பந்தில் சிதறியுள்ள ஒவ்வொரு ஈழத்தமிழனும் இந்தக் கவலையும், சோகத்தையும் தன்னுள்ளே நிறைந்திருக்கக் காண்பான். பனைவடலியும், செம்மண்தரையும், பரவைக் கடலும், செம்புத் தண்ணீரும், கிடுகுவேலிகளும், மணல் ஒழுங்கைகளும் அவன் போகுமிடமெல்லாம் நிழலாக அவனைத் தொடர்ந்து துரத்தும். தன்னிடம் வா என்று அணைத்துக் கொள்ளும். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன அல்லவா?

ஆனாலும் சூழ்நிலைகள், வேரில்லாத மனிதனையும் வேரூன்றச் செய்து விடுகின்றன, அகப்படும் இடத்திலெல்லாம். ஈழத்தமிழர் எங்கெல்லாம் சிதறி இருக்கிறார்களோ அங்கெல்லாம் கலை இலக்கிய முயற்சிகளும் வேர் கொண்டு, முளைவிட்டு, தளிர்கள் தள்ளுவதைப் பார்க்க முடிகின்றது. இந்தத் தளிர்கள் உயிர்ப்புள்ளவை. ஏக்கங் கொண்டவை. கனவுகளைக் கால்களாய் வைத்திருப்பவை. எல்லாவற்றையும் விட நம்பிக்கை தருபவை.

இதனாலேயே ஈழத்து எழுத்துக்கள். இன்று சர்வதேசப் பின்னணியில் தடம் பதித்து உருவாகின்றன. தமது துயரையும் சர்வதேசத்துக்குரிய துயராகப் பெருமூச்சு விடுகின்றன. இப்படியே நமது சமகால வரலாற்றையும் பதிவு செய்து கொண்டு விடுகின்றன. புதிய பிரச்சினைகளை வேகத்தோடு அலசுகின்றன.

★ ★ ★

இலக்கியம் எதன் பொருட்டு என்ற கேள்வி இன்னமும் கேட்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

இலக்கு உள்ளது இலக்கியம் என்பது பழைய விடை.

மக்களிடமிருந்து பெற்றும், கற்றும்—பின்னர் அதை செழுமைப்படுத்தியும் அவர்களின் மேன்மைப்பாட்டிற்காக அதை அவர்களுக்கே திருப்பிக் கொடுப்போமென்பது இன்னொரு பதில்.

சமூக ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை ஆகிய மானிடத்தின் மீதான தளைகளை அறுத்தெறிய குரல் கொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற எல்லா எழுத்துக்களும் உயர்ந்தவை. உண்மையானவை' இவைதான் இன்று வேண்டப்படுபவை. இதைத் தவிர மற்றவை எல்லாம் பொழுதை வீணடிக்கின்ற கவைக்குதவாத வெற்றுவாதங்கள் எனவே நான் எண்ணுகிறேன்.

துரதிருஷ்ட வசமாக இந்த வெற்று வாதங்களே, தமிழின் விமர்சனங்களாய் எங்கும் நிறைந்திருக்கின்றன. பொறுப்போடும் நேயபூர்வத்தோடும் வழங்கப்படுகிற விமர்சனங்கள் படைப்பாளியை நேராக்கி அவனது படைப்புகளை செழுமை கொள்ள வைக்கும். பொறுப்பற்ற, அறிவீனமான, வாயப்பாட்டுத்தனமான விமர்சனங்களை புறந்தள்ளுகிற நிலைமையை, ஆக்க பூர்வமான படைப்புகள் உருவாக்கியே தீரும். அதற்கு நாமும் வகை செய்யவேண்டும்.

பிறநாடுகளில்—குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற நமது தமிழர்களுக்கு நேரடியாகவே ஐரோப்பிய இலக்கியங்களை அறிந்து கொள்கிற வாய்ப்புண்டு. இதனால் தமிழ்ப்படைப்பிலக்கியத்தை சர்வதேசத் தரத்திற்கு கொண்டு போகின்ற முயற்சியை அவர்கள் மேற்கொள்ள முடியும். அதுமட்டுமல்ல ஐரோப்பிய இலக்கியத்தையும் முழுமையான வீச்சோடு அவர்களால் தமிழிற்கு தரவும் இயலும்.

பாரிஸில் அமைந்துள்ள ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், இத்தகைய முயற்சியில் இறங்கியுள்ளதை அவர்களது செயற்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. ஐரோப்பிய மொழிக்கதைகளை தமிழிற்கும், தமிழை ஐரோப்பிய மொழிக்கும் கொண்டு செல்ல அவர்கள் எடுக்கின்ற எத்தனங்கள், தமிழ்கூறும் உலகையே பெருமகிழ்வு கொள்ள வைக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

தமிழ் பேசும் மற்ற நாடுகளில் உள்ள தமிழர்களை விட, ஈழத் தமிழர்கள் உலகநாடுகளில் பெருமளவு வாழ்கிறார்கள். அந்த நாடுகளின் பின்னணியை களனாக வைத்து, தமது பிரச்சினைகளை பொருத்தி சர்வதேசத் தரத்திற்கு ஈடான கதைகளை அவர்களால் தரமுடியும். அந்தப் பிரயத்தனமும், ஆவலும் இந்தத் தொகுதியில் உள்ள பல கதைகளிலும் தெளிவாகவே நமக்குப் புலனாகின்றன. உரத்துக்கேட்கின்றன,

இந்தத் தொகுதியிலுள்ள சிறுகதைகள் எல்லாம் ஒரே தரத்தின அல்ல என்பது உண்மையே ஆயினும், இவை யாவற்றிலுமே ஒரு பொதுத்தன்மை இழையோடுகின்றது என்பதை எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பொதுத்தன்மைதான் என்ன?

தாய்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து அந்நிய பூமிகளில் வாழ்கிறபோது ஏற்படுகிற கலாசாரரீதியான முரண்களை, அதன் பொருளாதார சமுதாய சிக்கல்களோடு இந்தத் தொகுதியிலுள்ள படைப்புகள் ஆய்வு செய்கின்றன. இந்தக் கண்ணோட்டம், முழுத் தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கும் புதிய ஒன்றாகும். அவ்விதத்திலே இந்தத தொகுதி தனித்துவமான பெருமைக்குரியது என்று துணிந்து கூறலாம்,

இந்தத் தொகுதியில் எழுதியுள்ள படைப்பாளிகளுக்கு ஒரு வார்த்தை:

எழுதுவதும் ஒரு எதிர்ப்புக்குரலே. சுரண்டலும், ஒடுக்கு முறைகளும். பேதங்களும், இனஒதுக்கு முறைகளும் நிறைந்த உலகிற்கு எதிராக நீங்கள் நில்லுங்கள். போராட்டமே வாழ்வாகிவிட்ட மண்ணின் மைந்தர்களான எமக்கு. இப்படி நிற்றல் இயல்பான செயலென்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள். என்றோ ஒரு நாள் நமது கனவுகள் மெய்ப்படும். அவ்வேளையிலே நீங்களும், நாமெல்லோரும் எமது மக்களால் நினைவு கொள்ளப்படுவோம்.

இந்தத் தொகுதியை வாசித்து முடிந்ததும் மனது கனத்து வேதனையடைகிறது. அதுவே இந்தத் தொகுதியின் வெற்றி என்பதையும் அப்போதே நீங்கள் உணர முடியும. அன்றிலிருந்து இன்றுவரை துண்டு துண்டாக உடைந்து வாழ்வதையே தமது பண்பாகக் கொண்டு வாழ்கிற தமிழர்களாகிய நாம், ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தை இங்கிருந்து பார்த்து பொறாமை கொள்ளலாம், ஏனெனில் சிறந்த பணிகளை ஒருமித்து செய்கிற அவர்களையும், அவர்களின் செயற்குழுவையும்— அவர்களின் உற்சாகமும், பண்பாடும், இனிய சுபாவமும் கொண்ட தலைவர் திரு, அரியநாயகம் மனுவேல் பிள்ளையையும் பார்க்கிறபோது நமக்கு நிச்சயம் பெருமையும், பொறாமையுமே உண்டாகும், கலையுணர்வும், படைப்பாற்றலும், வசீகரகுணங்களும் கொண்ட திரு அரிய நாயகத்தின் முயற்சிகள் அடையும் வெற்றி, தமிழைச் சேரும்; அதைச் செழுமைப்படுத்தும் என நான் திடமாக நம்புகிறேன்,

—செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எழுதுகிறேன்

எனது அன்புக்குரியவர்களே!
வணக்கம்.

சுதந்திரம்—சமத்துவம்—சகோதரத்துவம் ஆகிய முப்பெரும் முக்கலைகளை உலகிற்கு வழங்கிய பிரெஞ்சுப் புரட்சியின் 200-வது ஆண்டின் நிறைவை இவ்வாண்டு ஆடி மாதத்தில் பிரான்சு நாட்டினர் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். இச்சிறப்பாண்டின் நாமும் பங்கு கொண்டதில் பெரும் மகிழ்ச்சியே.

'தேசம் தாண்டிய நதிக'ளாக ஐரோப்பிய நாடுகளில் ஓடிக்கொண்டிருக்கும் எமக்கு இந்த தத்துவங்கள் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

—எம் சொந்த மண்ணில் எம்மைப் பாழ்படுத்தி, கூறுப் போட்டு, பலவீனர்களாக்கி இன்று திசை தெரியாது ஓட வைத்துக் கொண்டிருக்கும் எம் குறைபாடுகள் மீண்டும் ஐரோப்பிய நாடுகளில் நம்மிடையே நாகரீகமாக தலை தூக்க முனைகின்றன.

சகல அடக்கு முறைகளிலும் இருந்து எம்மை விடுவிக்க முயலும் நாம் நம்மை நாமே முதலில் விடுவித்துக் கொள்ள வேண்டும். தத்துவங்கள், கோட்பாடுகள், கருத்துக்கள் வெறும் பேச்சுகளில் இருக்காது. அவை எம் செயல்களில் பரிமளிக்க வேண்டும்.

எழுத்தாளர்கள் எழுச்சி பெறும் தம் எண்ணங்களை எழுத்திலே வெளிக் கொண்டு வரவேண்டும். பேனா முனைகளினால் எந்த ஒரு ஊடகத்தினூடாகவும்; மக்களிடையே ஊடுருவ வேண்டும். மக்களை விடுவிக்க முயல வேண்டும். வேறு எதற்கும் இல்லாத உன்னத நோக்கினை கலை, இலக்கியம் ஆகியன கொண்டுள்ளன. சமூக வழி காட்டலில் இவற்றின் பங்கு மிக மகத்தானதாகும்.

உண்மையான இலக்கியம் மக்களின் மகிழ்ச்சியின் கண்ணாடியாக, அவர்களின் உணர்ச்சிகளுக்கும், விருப்பத்திற்கும், கருத்துக்களுக்கும் ஊற்றாகத் திகழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை அடிப்படையில் தார்மீக ஒளியில் அவர்களைச் செம்மைப் படுத்த வேண்டும். உலகின் முன்னணி இலக்கிய படைப்பாளர்கள் சகல அடக்குமுறையிலும் நின்று மக்களை முன்னெடுத்துச் செல்வதில் எல்லாக் காலங்களிலும் மிக ஆர்வமுடையவர்களாக இருந்து வந்துள்ளனர் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

—எந்த ஒரு எழுத்தாளனின் படைப்பிலும், அவன் எழுதுகின்ற சமகால நிகழ்வுகளை வெளிப்படவே செய்கின்றன. இதனால் வரப்போகின்ற சந்ததியினர் இன்றைய காலத்தின் சமூக பண்பாட்டினையும் அறிய வாய்ப்புண்டாகிறது. இவ் அரிய வாய்ப்பினைத் தருகின்ற இலக்கியப் படைப்பினை வளர்த்து விடுகின்ற கடமை அவற்றினை விமர்சிப்போருக்கும் உண்டு.

எந்தத் துறையுமே வளர்வதற்கு விமர்சனம் அவசியம். எனவே ஐ. த. எ. ஒன்றியம் தொடங்கியிருக்கும் இலக்கியப் பணிக்கு படைப்பாளிகளின் இலக்கிய ஆக்கங்களை மட்டுமின்றி நல்ல விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம், அவை எம்மை வளர்த்துவிடும். நோக்குடன் அமைவதாயின் மிக அன்போடு வரவேற்கிறோம். குறிப்பாக இளம் ஆக்க இலக்கிய சிருஸ்டிகர்த்தாக்களை ஊக்குவிப்பதும் கைகொடுத்துதவுவதும், முதிய எழுத்தாளர்களின் பாரிய கடமையாகும்.

—அவர்கள் ஆக்கங்களை ஆராய்ந்து, விமர்சித்து ஊக்கமளிக்கவேண்டும். மாறாக அவர்கள் மனம் சோர்ந்து போகும் படியாக விமர்சிப்பது அவர்களின் இலக்கியப் படைப்பிற்கு தடைப்போடுவதாகவே அமையும். பழி வாங்கும் நோக்கமல்லாத பாரபட்சமற்ற பயனுள்ள விமர்சனங்கள் எதுவானாலும் நாம் இருகரம் கூப்பி வரவேற்கத்தயராக உள்ளோம்.

'தேசம் தாண்டிய நதிகள்' எமது நான்காவது சிறுகதைத் தொகுப்பு. தவள்ந்து கொண்டிருந்த குழந்தை இப்போது எழுந்து நடக்கத் தொடங்கியிருக்கிறது. அதற்குக் கைகொடுத்து வழிகாட்டிச் செல்ல வேண்டியது உங்கள் பொறுப்பு.

கடந்த வெளியீடுகளில் நாம் குறிப்பிட்டுள்ளபடி ஐரோப்பிய நாடுகளில் வெளிவரும் பல மாத இதழ்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து சில சிறுகதைகளை எடுத்து இந்தத் தொகுப்பில் தொகுத்துள்ளோம். மேற்கு ஜேர்மனில் இருந்து 'வீணி லேகன்' அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'அறுவை' என்னும் இதழ்களிலிருந்து 'சுறாக்கள் மனிதராகி விட்டால்', 'சுளை அறியாத பலாமரங்கள்', 'மரண வணிகன்', 'வேண்டாத வேட்டுக்கள்' என்ற நான்கு சிறு கதைகள் இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன.

பாரிசிலிருந்து வெளியாகும் 'சிந்து' என்னும் மாத சஞ்சிகையிலிருந்து 'அதிர்வுகள்' என்னும் சிறுகதை இத் தொகுப்பில் இணைகிறது. இக்கதையை தந்துதவிய பத்திரிகை ஆசிரியருக்கும், எழுத்தாளருக்கும் எமது நன்றிகள். ஆங்கிலக் கதையொன்றினைத் தழுவி சுவிஸ் நாட்டிலிருந்து 'ஜெயசிறி' அவர்கள் அதன் சுவை குன்றாது தந்துள்ளார். மொத்தம் பன்னிரண்டு கதைகள் தொகுக்கப் பட்டுள்ளன.

பரந்து வாழும் எழுத்தாளர்களை ஒன்றிணைக்கும் எம் பணியின் முயற்சியில் ஐரோப்பிய நாடுகளில் நாம் கிளை களை அமைத்து வருகிறோம். இதன் பயனாக இதுவரை வந்த மூன்று தொகுப்புகளும் பாரிஸ் நகரிலியே அறிமுகப் படுத்தப்பட்டு ஆய்வு செய்து வெளியிடப்பட்டன.

ஐ. த. எ. ஒன்றியத்தின் சுவிஸ் கிளையின் தலைவர் எஸ். சிறிகாந்த ராஜா செயலாளர் கே. எஸ். டி. சபாஸ் ஆகியோரின் விருப்பத்திற்கமைய 'தேசம் தாண்டிய நதிகள்' எமது நான்காவது சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டு அறிமுக வைபவம் இம்முறை சுவிஸ் நாட்டில் நடைபெறு கிறது.

ஐ. த. எ. ஒன்றியத்தின் தலைமை அமைப்பிலும் புதிய உறுப்பினர் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுள்ளார்கள். இதன் பயனாக அதன் செயல்பாடுகளிலும் புதிய வேகம் ஏற்பட்டுள்ளது.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் நாயகர் 'தனி நாயகம்' அடிகளின் நினைவாக உலகளாவிய தமிழ் சிறு கதைப் போட்டியினை வருடாந்தம் நடத்துவதாக ஒன்றியம் அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டில் பல பத்திரிகைகளும் ஐ, த. எ. ஒன்றி யத்தின் பணியினைப் பாராட்டியுள்ளன.

ஐரோப்பாவில் மட்டுமின்றி உலகத்தில் உள்ள அனைத்துத் தமிழ் எழுத்தாளர்களும் பெருமைப்படக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமாக ஐ. த. எ. ஒன்றியத்தின் பணி தொடர வேண்டும் என பல தமிழக அறிஞர்களும் பத்திரிகையாளர்களும் கேட்டுக் கொண்டதற்கமைய எம்து ஒன்றியம் தன் இலட்சியப் பணியை தொடரும் என்பதனை தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

இத்தகய எம் பணிக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற எழுத்தாளர்கள்—இலக்கிய நண்பர்கள் வாசகர்கள் அனைவரினதும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் மிக வாஞ்சையோடு எதிர்பார்த்து நிற்கிறோம்.

—இறுதியாக, 'தேசம் தாண்டிய நதிகள்' இப்போது உங்கள் கரங்களில் ஓட, உழைத்த ஒன்றியத்தின் நூல் வெளியீட்டுக் குழுவினர் அ. செல்வராஜ், (செயலாளர்) அவே. ஜெயக்குமார் (பொருளாளர்) நல்லைக் கண்ணன், சு. கருணாநிதி, எம். கொண்ஸ்ரன் ஆகியோருடன் ஐ. த. எ. ஒன்றியத்தின்மீது பெரும் பற்றும் வளர்ச்சியில் ஆர்வமும் கொண்டு தன்னையும் அதில் ஒருவனாக்கி கடந்த நான்கு ஆண்டுகளாக அயராது தன் ஒத்துழைப்பை தந்திருக்கும் தமிழகத்தின் எனது நண்பர் கவிஞர் கு. கீதப்பிரியன் அவர்களுக்கும் மற்றும் கவிஞர்கள் கள்ளிக்குடி சுவாமி சண்முகம், கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியம் ஆகியோருக்கும் கரம் கூப்பி எனது நன்றிக் கடனைக் கூறி நிற்கிறேன்.

"காலம் பிந்திய நிலையிலும் கடின வேலையின் மத்தியிலும் ஐரோப்பிய எழுத்தாளருக்காக எனது முன்னுரை அளிப்பதில் நான் மிக மகிழ்ச்சி கொள்கிறேன்" என்று சொல்லி அணிந்துரை தந்துதவிய தமிழகத்தின் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் டாக்டர் வாசவன் அவர்களுக்கும் எழுத்தாளர் செ. யோகநாதன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

—இன்னும் பல வகையில் உதவிய ஓவியர்கள் ஜமால், அமலா, கரோ, ராமு இவர்களுக்கும் இந்நூலினை அழகுடன் பதிப்பித்த அச்சகத்தார் 'நீட் பிரிண்டஸ்'க்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

அன்புடன்,

M. அரியநாயகம்

(தலைவர், பதிப்பாசிரியர் ஐ. த. எ. ஒன்றியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுறாக்கள் மனிதராகி விட்டால்-

## WENN DIE HAIFISCHE MENSCHEN WAREN

மூலம் (ஜெர்மன்) : BERTOLT BRECHT
தமிழில் : ந. சுசீந்திரன்

"சுறாக்கள் மனிதராகிவிட்டால்...?" 'கொய்னர்' மீது கேள்வி தொடுத்தாள் அவரது வீட்டு சொந்தக்காரியின் சிறிய மகள்.

"அவை சிறிய மீன்களை ஆதரிக்குமா...?" தொடர்ந்தது அவளது கேள்வி.

"நிச்சயமாக......!"

இது 'கொய்ன'ரின் பதில்.

இச்சுறாக்கள் மனிதராகிவிட்டால்...!

சிறு மீன்களுக்காக கடலிலே நிர்வாகத் தொட்டிகள் கட்டப்படும்......

தொட்டியின் உள்ளே தாராளமாகத் தாவர, மாமிச உணவுகள்......

தொட்டிகளின் நீரை நிதமும் சுத்தமாக வைத்திருக்கவும் சுகாதார சேவைக்காகவும்; சீரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.. ...

உதாரணமாக......

தே—2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டையிற் காயமுற்ற சின்ன மீனொன்றுக்கு காயத்தைச் சுற்றிக் கட்டுப் போடப்பட்டு ..

சுறாக்களின் காலத்துக்கு முந்திய இறப்புத் தவிர்க்கப்படும்.

..............

கவலையோடிருக்கும் சிறுமீன்களுக்கு உற்சாகமூட்டுவதற்கென இடையிடையே நீர்ப்பெருவிழாக்கள் ... நடைபெறும்...

துடிப்பான சிறு மீன்கள் சோம்பலானவைகளைவிட சுவையானவை அல்லவா?...!

..............

பெரு நிர்வாகத் தொட்டிகளினுள்ளே......

நிச்சயமாகப் பாடசாலைகள் இருக்கும்...

அப்பாடசாலைகளில், சுறாக்களின் "வாய்க்குள் எப்படி நீந்துவதென, சிறு மீன்களுக்கு நீச்சல் கற்றுத் தரப்படும்.

..............

சோம்பிப் படுத்திருக்கும் பெருஞ்சுறாக்களைக் கண்டு பிடிக்க,

புவியியல்...

அவசியமாகலாம்.

ஆனால் சிறுமீன்களுக்குப் பிரதானம் பண்பாட்டுப் பயிற்சியே!

..............

"சிறு மீன்களின் சிறப்பான எதிர்காலத்தைக் கருதியே இச்சுறாக்கள் தலையைப் போட்டு உடைக்கின்றன"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சுறாக்களின் கூற்றை எல்லோரும் நம்ப வேண்டும் என்று......

சிறியதொன்று முன்வந்து அக்கூற்றை முன்னெடுத்துச் சென்று, மகிழ்வுடன் தியாகம் செய்தால்—பெரிதாகவும்...அழகாகவும் ஆகலாம் என்பதற்கு வகுப்புக்கள் நடைபெறும்.

கீழ்ப்படிவு...

இவர்களாற் கற்கப்பட்டால் மட்டுமே எதிர்காலம் உறுதி செய்யப்படும் என்பது இவர்களுக்குப் போதிக்கப்பட்டு...

எல்லாவற்றுக்கும் மேலாக...

தாழ்வான பொருள் முதல் வாத, சுயநல வாத மாக்சிஸ மறுப்பினை இவர்கள் தலைமேற் கொள்ள வேண்டும்.

............

யாராவதொருவர் இம்மறுப்பினில் முரண்படுவாரெனில்... சீக்கிரம் சுறாக்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

..............

சுறாக்கள் மானிடராகில் அவர்களுக்கிடையில் நிச்சயம் போர்கள்......

அதாவது...

அந்நிய மீன்களையும் வேற்று மீன்தொட்டிகளையும் நிர்வகிக்கவே சண்டைகள் மூளும்.

போர்கள் யாவும் அவரவருக்குச் சொந்தமான சிறு மீன்களை வைத்தே நடாத்தப்படும்.

வேறு சுறாக்களின் சிறுமீன்களுக்கும் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் சிறு மீன்களுக்கும், இடையில் மிகப்பெரிய வித்தியாசம் உண்டெனப் போதிக்கப்படும்.

சிறுமீன்கள் ஊமைகள் என்பது தெரிந்ததே!

ஆனாலும் அவை பலவித மொழிகளில் ஊமையாயிருக்கின்றன.

இதனால் அவை ஒன்றை ஒன்று என்று புரிந்து கொள்வது சாத்தியமில்லை என...

சுறாக்கள் பெரும் பர பரப்பை ஏற்படுத்துகின்றன.

எதிரிகளும், வேற்றுமொழி ஊமைகளுமான இரண்டொரு நெத்தலிகளைக் கொலை செய்து விட்ட, நெத்தலிகள்......

நீர்ப்பு(பொ)ற் பதக்கம் சூட்டப்பட்டு, 'மாவீரன்' என்று புகழப்படுவர்.

............

சுறாக்கள் மனிதராகிவிட்டால்...!

அங்கே கலைகள் தவிர்க்க முடியாததே!

............

அழகிய ஓவியங்கள்......!

அவற்றிலே மனங்கவர் நிறங்களிற் சுறாக்களின் பற்கள்...!

அவற்றின் வாய்கள் கூட, காற்று வாங்குவதற்காக... செல்வதற்கு ஈர்க்கும் தூயமணிப் பூங்காவாகச்சித்தரிக்கப் பட்டிருக்கும்......

கடலுக்கடியில் அரங்குகள் அமைத்து, வீரதீர செயல்களில் ஆர்வமுடைய சிறிய மீன்களுக்கு .,

சுறாக்களின் தொண்டைக்குள் நீச்சலடிக்கும் சாகசச் செயல்கள் காட்டப்படும் இன்னிசை விருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...............

இசை விருந்தின் தாளலயத்தில்...

குஞ்சுமீன்கள் கற்பனை உலகில் தவழ்ந்து......

இதமான சிந்தனைகள் குவிந்து...

தமை மறந்து...

பாடியபடியே சுறாக்களின் பெருவாய்க்குள் வெள்ளமாக உட்புகுவர்.

............

அங்கே!

மதமொன்று இருக்கும்.

சிறிய மீன்களின் நிஜ (உண்மை) வாழ்வானது முதலிற் சுறாக்களின் வயிற்றிலேயே ஆரம்பமாகின்றதெனப் போதிக்கப்படும்.

அத்தோடு...

இன்றுவரையுள்ள; சமத்துவம் கைவிடப்பட்டு, சிலருக்குப் பதவிகள் வழங்கப்பட்டு......

மற்றவர்களின் கடமைகளை நிர்ணயிக்க விடப்படுவர்.

...... . ...

சற்றுப் பருத்தவர்கள், சிறியோரைத் தின்ன அனுமதி வழங்கப்படும்,

இது...!

சுறாக்களுக்குப் பெருந்துண்டு...!

விழுங்கச் சுலபமான வழியே...!

பெருத்தோர் பதவிகள் வகிக்கும் சிறுமீன்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகவும், அதிகாரிகளாகவும், நீர்த்தொட்டி அமைப்புக்களின் பொறியியலாராகவும், ஏனைய சிறிய மீன்களுக்கிடையே.........

ஒழுங்கை நிலைநாட்டுவர்.

ஆம்!

சுறாக்கள் மனிதராகிவிட்டால்...!

...... ........

கடலிலேயும்...

முதலோர் கலாச்சாரமே உருவாகும்.

.................. ..!

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தாகம்

ஜெயா-சிறி

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கானல் நீரைத் தவிர ஒன்றையும் அங்கே காணமுடிவதில்லை. ஆனால் அந்தக் கானல் நீரையே பருகி, தங்கள் தாகத்தைப் போக்கிக் கொள்ளத் தவிக்கும் ஆயிரமாயிரம் ஜீவன்கள் அங்கே. தென்றல் என்பது இவர்கள் வாழ்வில் இன்னும் வீசவில்லை. அதனால் அதைப்பற்றித் தெரிய இவர்களுக்கு நியாயம் இல்லை. அங்கே வீசுகின்ற அந்தத் தூசிபடிந்த காற்றுகூட இவர்களுக்குச் சொந்தமில்லை. ஆனால் அதைச் சுவாசிக்கின்ற உரிமையை மட்டும் இன்று வரை எவரும் பறிக்க முன்வரவில்லை. அது இயற்கையின் படைப்பு என்பதனால் தானோ என்னவோ.

பரந்த அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் ஆங்காங்கே தெரிகின்ற சிவத்த மலைகள், காற்றால் அள்ளிக் கொட்டப்பட்டு வெய்யிலுக்கு இறுகிப்போன மண் குன்றுகள். தொடர்ந்து மழை பெய்தாலும் தாகம் தணியாத அந்தப் பூமியின் மலையடிவாரங்களில் குடிசைகளில் வாழ நிர்பந்திக்கப்பட்ட ஒரு சமூகத்தின் சோகமான வாழ்க்கை. வேதனையும், விரக்தியும், சோகமும், பறிக்கப்பட்ட உரிமையை மீட்கப்புறப்பட்ட இவர்களுக்கு ஏற்பட்ட மனவைராக்கியமும், வீரமும் எவராலும் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமிருந்து பறிக்க முடியாத சொத்துக்கள். ஏகாதிபத்திய ஆசை கொண்ட ஐரோப்பியர்கள் அங்கேயும் சென்றதனால் இவர்களுக்கு ஏற்பட்ட மரணவிழைவுகள் இவை. மனம் போல் தங்கள் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருந்த இவர்கள் வெள்ளைக்காரர்களின் வெற்றுத் துப்பாக்கிகளுக்குக் கூடப் பயந்தார்கள். அம்பையும் வில்லையும் தவிர வேறு ஆயுதங்களைக் கண்டறியாததால் ஏற்பட்ட குழப்பம் இவர்களுக்கு. நீண்டு பரந்த இந்த வல்லரசுக்கே சொந்தப் பிள்ளைகளான இவர்கள் தாய்நாட்டிலேயே அகதிகளாக்கப் பட்டுவிட்ட நியாயமற்ற நியதி அது. மாலைநேரச் சூரியக்கதிர்பட்டு செந்தணலெனச் சிவந்திருந்த மலையடிவாரங்களின் செம்பொன்னிறம் மணல்மேலும் அந்த மணல் குன்றுகள் மேலும் படர்ந்து அதற்கப்பாலும் அந் நிறம் இவர்களது முகங்களிலே தெறிப்பதனால்தானோ செவ்விந்தியர்கள் என்ற பெயர் இவர்களுக்கு வந்தது. மொறிலியோ தொடக்கம் மெக்சிக்கோ வரை தலையைச் சுற்றி இறக்கையை இணைத்துக் கட்டிய கட்டுடனும், வலக்கையில் ஈட்டியை உயரத் தூக்கிக் கொண்டு 'ஊ' என்ற உரத்தகுரலுடன் ஆளுயரத்திற்குப் புழுதி எழுப்பிக் கொண்டு, குதூகலத்துடனும் வீரத்துடனும் குதிரைகளின் குளம்பொலி ஊரையெழுப்ப சவாரி செய்த தங்கள் மூதாதையரின் விடுதலை வாழ்க்கையை மீளப் பெறும் இலக்குடன் இயங்கும் எண்ணங்கள் இவர்களுடையவை.

செங்கதிரோனின் தாக்கத்தைத்தவிர்க்க பகல் முழுவதும் குடிசைக்குள்ளேயே தங்கியிருக்கின்ற இவர்கள், அந்திப்பொழுதுகளில் மலையடிவாரங்களில் ஒன்றாகச் சேர்வார்கள். அப்பொழுது அவர்களது மனங்கள் குளத்திலே குளித்துவிட்டு சூட்டைத் தணித்துக் கொண்ட ஒரு நிறைவு பெறும். ஏழ்மையின் சின்னங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக இயற்கையோடு எதிர்நீச்சல் போடும் இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் நிறுத்தப்படாத சில பாரம்பரிய நியாயங்கள் மூலம் இவர்களுக்குக் கிடைக்கின்ற அற்ப சந்தோசங்களில் இதுவும் ஒன்று. தங்கள் நியாயங்கள் தண்டிக்கப்பட்டதால் இவர்கள் சோர்ந்து போகவில்லை. ஆம். இவர்கள் பதுங்கி வாழ்கிறார்கள். பயத்தினால் அல்ல. பாய்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டு. எதிரிகளைப் பார்த்துப் பார்த்துச் சிவந்த இவர்கள் கண்கள் தங்கள் சிறுவர்களைப் பார்க்கவும் சிவக்கிறது. இவர்கள் போகும் பாதை மிகவும் கரடு முரடாகவும், கற்களும்முட்களும் நிரம்பினதாயும் இருந்தாலும்அதற்கு அப்பால் தெரிகின்ற பசும் தரையில் தங்கள் சிறுவர்கள் விளையாட்டுத்திடலை அமைப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு வாழ்கிறார்கள்.

அந்த அந்திப் பொழுதில் மலையடிவாரத்தில் கூடியிருந்த ஒவ்வொருவரின் முகங்களும் அவர்களின் மன எண்ணங்களை அளந்து காட்டிக்கொண்டிருந்தன. முதியவர்கள் தங்கள் கடந்தகால வாழ்க்கையைப் பாடமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் அனுபவங்களும், எதிர்காலத்திற்கான சிந்தனைகளும் உடல் வலுவைவிடப் பலமிருந்தவைகளாயிருந்தன. இளைஞர்கள் திடீரென்று தாக்க வரும் எதிரிகளைக்கூட தோற்கடித்து விடுவதற்கான உஷார் நிலையில் இருந்தார்கள். அந்தத் தாயும் அவள் மகனும் வெகு தொலைவுக்கு தங்கள் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்திப் பொழுதாகியும் திரும்பி வராத தன் கணவனை எதிர்பார்த்து அவள் அந்தப் பாவை வெளியில் தன் பார்வையை விட்டிருந்தாள். அந்தச் சிறுவனோ தூரத்தே தெரிந்த மலைகளில் காலம் போட்டிருந்த கோலத்தில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். தடுக்க முடியாத காற்றைத் தடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்த முற்பட்ட மலைகளின் அரிக்கப்பட்ட அமைப்புகள் கால ஓட்டத்தில் இவர்களுக்கு ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் காட்டி நின்றன. அந்தி வெளிச்சத்தில் அந்த மலைச்சாரலில் ஒரு முகத்தின் அமைப்பு செதுக்கப்பட்டிருப்பதை அந்தச் சிறுவன் கண்டு கொண்டான். தினமும் பார்த்துப் பழகிய அந்த மலைச்சாரலில் தெரிந்த அந்த மனித முகத்தின் அமைப்பை-தான், இதுவரையில் கண்டு கொள்ளாதது ஆச்சரியமாகவிருந்தது. இந்தச் செங்குத்துச் சாரலில் ஒரு மனித முகத்தை யார் எப்படி உருவாக்கினார்கள் என்ற கேள்வி அவனுள்ளத்தில் உந்தியதாலும், இதைப்பற்றி மேலும் அறிந்துகொள்ளும் ஆவலினாலும் அந்த மனிதமுகத்தைப் பற்றி அவன் தன் தாயிடம் வினவினான்.

அவள் தன் சிறுவனுக்கு அந்த முகத்தைப் பற்றி அறிந்தவற்றை சொல்லத் தொடங்கினாள். "இந்த கல் முகத்தை சிறுவயதாக இருக்கும்போது நானும் கண்டு கொண்டேன். இந்த முகம் காலமாற்றத்தினால் மலைகளில் ஏற்பட்ட தாக்கத்தினால் ஒரு நீண்ட காலப் பகுதியில் ஏற்பட்டது. இந்த நீண்டு பரந்த அமெரிக்கா முழுவதுமே முன்னொரு காலத்தில் நமது மூதாதையர்களுக்குச் சொந்தமாக இருந்தது. எங்கள் மக்களில் யாருக்கு அதிக பொருட்பலம், படைபலம், அறிவு ஆற்றல், திறமையிருந்ததோ அவரே எங்களை வழி நடத்திக் காப்பவராகவும் மற்ற அனைவரும் எங்கள் சமூகத்தைக் கட்டிக் காக்க தலைவர் எடுக்கும் முயற்சிக்குத் தங்களாலான சகல உதவிகளையும் செய்பவர்களாயும் இருந்தார்கள். இவ்வாறு மக்களை வழி நடத்துபவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளெனக் கருதப்பட்டார்கள். இந்தக் காலத்தில் தான் ஐரோப்பிய நாகரிகம் வளர்ச்சி பெற்று தங்கள் களஞ்சியங்களை நிரப்ப சடல் வாணிபம் தொடங்கப்பட்டது. போர்த்துக்கீச கொலம்பஸ் மாலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்குப் பின் அனேக வாரிசுகள் இங்கே வரத்தொடங்கினார்கள்.எங்கள் தலைவர்களை பலவீனப்படுத்த எங்கள் மக்களையே பயன்படுத்தினார்கள். ஐரோப்பியர்களால் வழங்கப்பட்ட பணம், சில சலுகைகளுக்காக நம்மவர்களே எங்களுக்கெதிராக எதிரிகளுக்கு உதவினார்கள். சமூக விரோத காட்டிக் கொடுத்தல்களாலும், அந்நியர்களின் நவீன ஆயுதங்களாலும் உயிருள்ளவரை போராடிய நமது வீரர்கள் அருகிக்கொண்டே போனார்கள். போராட ஆயுதம் எதுவுமற்ற நிலையில் நிராயுதபாணிகளாக்கப்பட்ட நமது மக்கள் காடுகளையும் மலையடிவாரங்களையும் குகைகளையும் தேடிப்பதுங்கி வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. நமது மக்கள் இவ்வாறு திக்குத்திக்காக வாழ்ந்தாலும் அந்நியர்களைத் தாக்கி வெளியேற்றவே சந்தர்ப்பத்தைப் பார்த்தபடி இருக்கிறார்கள். இவ்வாறு உரிமைகளை இழந்துவிட்ட எங்களில் இந்தக் கல்லுமுகத்தின் முக அமைப்பைப் பெற்ற ஒருவன் பிறப்பான் என்றும், அவனே எங்களை மீட்க இறைவனால் அனுப்பப்பட்டவனென்றும், அவன் மூலமாகத்தான் நாம் மீண்டும் எழுச்சி பெற்று வீரம் மிகுந்த இளைஞர்கள் அவனுடன் சேர்ந்து எதிரிகளை வெளியேற்றி நமது நாட்டை மீளப் பெறுவார்களென்றும் நாங்கள் நம்பி எதிர்பார்க்கின்றோம்''

தாயின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனின் முகம் அந்தக் கல் முகத்தைப் பார்த்தப்படி சிவந்திருந்தது. அந்த முகத்தில் பதிந்திருந்த பார்வையை அகற்றாமல் ''அப்படியானால் இன்றுவரை ஒருவரும் நமது உரிமைகளுக்காபப் போராடவில்லையா?'' என்று சிறுவன் கேட்டான்.

''ஆம், இன்று வரையில் பலபேர் நமது சமுதாய உரிமைகளை மீட்பதற்காகப் போராடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலப்பல புதியவழிகளில் எதிரிகளை எதிர்த்து அனேக தடவைகளில் வெற்றியும் கண்டார்கள். நமது இன மக்களும் நம்மாலான சகல வழிகளிலும் நமது ஒத்துழைப்பை இந்தப் போராளிகளுக்குக் கொடுத்துதவினோம். இவர்களால் தான் நமது பறிக்கப்பட்ட உரிமைகள் மீளவும் நமக்குக் கிடைக்கும் என்று நம்பினோம் ஆனாலும் காலப்போக்கில் இவர்களும் சுயநலத்திற்காகவும் அரசியல் தந்திரங்களுக்காகவும் சந்தர்ப்பத்திற்கேற்ப தாங்கள் எடுத்துக்கொண்ட இலட்சியங்களையும் உறுதிகளையும் கைவிட நேர்ந்தது. அப்போது நாம் எதிர்பார்க்கின்ற இறைவனால் அனுப்பப்பட்ட நமது உரிமையை மீட்டுத் தருகின்ற மீட்பர்கள் இவர்களில்லை என்று அறிந்து வருத்தப்பட்டோம். இதுவரையில் நமது கடந்துவிட்ட காலங்களைத் திரும்பிப் பார்க்கும் போது அந்நியர்கள் அவர்களின் ஆக்கிரமிப்பு நோக்கத்தால் நம்மிடமிருந்து பறித்த உரிமைகளை விட நாமே நமது சுயநலம். போட்டி, பொறாமை, சமூகங்களுக்கிடையிலான பூசல்கள், நமது பிழையான போராட்ட முறைகள் மூலம் இழந்துவிட்ட உரிமைகள் அனேகம். இன்று பல பெரியவர்கள் நாம் நமது பலவீனங்களால் நமக்குள்ளேயே இழந்துவிட்ட உரிமைகளை மீளப் பெற்ற பின்பு தான் அந்நியர்களால் பறிக்கப்பட்டவற்றை பெறத்தகுதியாவோம் என்று கருதுகிறார்கள்.

"அப்படியானால் எப்போது இந்த இறைவனால் அனுப்பப்பட்ட விடுதலை வீரன் பிறப்பான்" என்று சிறுவன் தன் ஆவலையடக்க முடியாமல் கேட்டான்.

"நாம் விடுதலைக்குத் தகுதியுடையவர்களாகும் போது" என்று சொல்லிய தாய், தன் சிறுவனின் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள். தான் சொன்ன பதிலால் சிறுவன் திருப்திப்படவில்லை என்பதை அவனது முகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி காட்டியது. "ஆம், மகனே நாமே நம்மிடையே ஏற்படுத்திய பிரச்சினைகள் அனேகம். சமூகங்களுக்கெதிராக சமூகமும், குடும்பத்திற்கெதிராக குடும்பமாகவும் எழும்பி அழித்துவிட்ட விடுதலைகள் அதிகம். நாம் எப்பொழுது இவ்வாறான பிரச்சினைகள் நீங்கி நல்ல பழக்க வழக்கமுடையவர்களாகவும், நம் இனத்தின் சிறந்த கலாச்சார ஒழுக்கங்களை பேணிப் பாதுகாப்பவர்களாயும் வளர்ந்து நமக்கிடையே இழந்துவிட்ட உரிமைகளை மீளப் பெற்றதின் பின்புதான் மூன்றாவது அன்னிய எதிரி எங்களிடமிருந்து பறித்த உரிமைகளைப் பெறப் போராட நாம் ஒன்று சேரமுடியும். அப்படியான ஒற்றுமைப் போராட்டத்தின் மூலம் பெறும் உரிமையையும் விடுதலையும் தான் நமக்கு நிலைக்கும். இந்த ஒன்றித்த இலட்சிய நிலை உருவாவதுதான் நாம் விடுதலைக்கு தகுதியானவர்களாவது என்பது. இவ்வாறு நாம் ஏற்றவர்களாகும் போது இங்கே எங்கள் முன்னால் தெரிகின்ற இந்தச் செந்நிற மலையில் இயற்கையால் வரையப்பட்ட இந்தப் பெரிய கல் முகத்தின் முக அமைப்பைக் கொண்ட விடுதலை வீரன் இறைவனால் அனுப்பப்படுவான் என்று எதிர்பார்க்கின்றோம். இன்று வரை அப்படி ஒருவனும் தோன்றாதது மிகப்பெரும் சோதனையும் தோல்வியும் தான் எனினும் வெகு விரைவில் இந்த மீட்பன் வருவான் என்றே எதிர்பார்க்கின்றேன்'' என்றாள். அவள் குரலில் வருத்தமும் ஏமாற்றமும் தொனித்ததைக் கேட்ட சிறுவன் தன் தாயின் முகத்தை கவலையுடன் ஏறிட்டான். தாயின் கண்களிலே தெரிந்த சிவத்த ஒளி அவள் மனதினுள்ளே எரிந்த அந்த இலட்சிய எதிர்பார்ப்பு வேள்வியின் சுவாலையாகத் தெரிந்தது. "ஆம் என் அம்மா சொன்னது கதையல்ல ஓர் தீர்க்க தரிசனம். இது எதிர்பார்த்து வீண் போகும் எண்ணமல்ல. நிச்சயமாக நிறைவேறுகிற இலட்சியம்'' என்று அச்சிறுவன் நம்பிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று வரை பிறக்காவிட்டாலும் என்னுடைய காலத்திலாவது அந்த வீரன் இறைவனால் அனுப்பப் படுவானா?" என்ற சிறுவனின் எண்ணம் கேள்வியாகி, தாயின் பதிலை எதிர்பார்த்து நின்றது. மகனின் இந்தக் கேள்வி தாயின் நெஞ்சத்தில் பாய்ந்தது. அவள் ஒரு கணம் தடுமாறிவிட்டாள்; "என்ன பதிலை நான் சொல்லப் போகிறேன்? எந்தப் பதிலை என் மகன் என்னிடமிருந்து எதிர்பார்கின்றான்?" என்ற சிந்தனை யில் அவள் மகனின் முகத்தை ஏறிட்டாள். வீராவேச மாய் செஞ்சிவப்பாய் ஊற்றெடுத்து ஓடிக் கொண்டிருந்த இரத்த ஓட்டத்தின் வேகத்தை அவன் கன்னங்கள் காட்டி நின்றன. அவன் தோள்கள் புடைத்து கண்கள் ஒளிமிகுந்து காணப்பட்டன. தீர்க்கமான சிந்தனை யின்றி அளிக்கப்படுகின்ற எந்தப் பதிலும் தன் இள வேங்கையின் இலட்சிய வீர எதிர்காலத்தை அழித்து விடுமென்று அறிந்து கொண்டாள். ஆம் அவள் தன் மகனின் வீர எதிர்கால நினைவுகளை அழிக்க விரும்ப வில்லை. "நிட்சயமாகவே உன் காலத்தில் நாமெல் லாம் எதிர்பார்க்கின்ற இந்த வீரன் இறைவனால் அனுப்பப்படுவான்" என்றாள். இப்பதிலைக் கேட்ட சிறுவனின் எண்ணங்கள் களிப்பு மிகுதியால் துள்ளிக் குதித்தன. "ஆம் மகனே இந்த வீரனுக்குதவியாக நீயும் எங்கள் இனவிடுதலைக்காக இணைந்து போராட வேண்டும்" என்று தன் ஆவலை வெளியிட்டாள். "ஆம் அம்மா நிச்சயமாக இந்த வீரனுக்கு நல்ல முறையில் உதவ வேண்டும் என்பதனால் தான் அவன் எனது காலத்தில் வரவேண்டும் என்று நம்புகின்றேன்" என்றான்.

இந்த எண்ணங்களில் மூழ்கியிருந்தவர்களை தங்க ளுடன் மலையடிவாரத்தில் கூடியிருந்த மற்றவர் களின் ஆரவார ஒலிகள் மீட்டன. இந்த அவசரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவாரித்தலுக்கு தூரத்தே மலையடிவாரத்தில் தெரிந்த புழுதி மண்டலம் தான் காரணமென்பதை அவள் அறிந்து கொண்டாள். அந்தப் பெரிய புழுதி மண்டலம் பலபேர் குதிரைகளில் தங்களுக்கெதிராக வருவதைக் காட்டியது. கொஞ்சம் கொஞ்சமாக இவர்களை அணுகி வந்தது. இளைஞர்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு குதிரைகளில் ஏறி எதிர்த்தாக்கத்திற்குத் தயாரானார்கள். பெண்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு ஒளிந்தோடினார்கள்.

அவளும் தன் இளஞ்சிறுவனை அழைத்துக் கொண்டு மறைவிடம் தேடி ஓடினாள். அனிச்சத்தின் பூப் பட்டாலே நோகுகின்ற பரம்பரையில் பிறந்த அந்தப் பூங்கொடியாளுக்கு எதிரே கிடந்த நெருஞ்சி முள் காலில் தைத்தது கூடத் தெரியாத அளவுக்கு மனம் மரத்துப் போய் விட்டிருந்தது.

(Nathaniel Hawthorne என்பவரின் The Great Stone Face என்ற ஆங்கிலக் கதையில் கருமூலத்திலிருந்து எழுதப்பட்டது.)

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

## கோவை-றைதன்

தூரத்தில் தெரிந்த பஸ்சின் வெளிச்சப் பொட்டு ராஜாராமின் மனத்திலும் ஓர் வெளிச்சத்தை ஏற்படுத்தியது. இந்த கடைசி பஸ்சிலாவது அவனது சிநேகிதன் கருணா வந்திடுவானென எதிர்பார்த்திருந்தவனுக்கு பஸ்தரிப்பையும் கடந்து 'பஸ்' செல்கையில் அவனுக்கு சலனத்தையே ஏற்படுத்தியது.

ராஜாராம் பனையில் சாத்தியிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி செல்லத் தொடங்கினான். தூரத்தே கரு...கரு என இருட்டில் உயரமாய் தெரியும் பனை மரங்களும், காற்றினால் ஓலைகள் ஏற்படுத்திய சல சலப்பும் அவனுள் இலேசாய் பயத்தை ஏற்படுத்த அந்த குறுக்கு ஒழுங்கையினூடு வேகமாய் சைக்கிள் பெடலை மிதித்தான்.

கருணாவின் அம்மாவிடம் விரைவாக விசயத்தை கூறிவிட்டு வீடு செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பொதுவாக இருள்பரவ சனநடமாட்டமே அற்று வீதிகள் வெறிச்சோடிக்கிடக்கும் ராஜாராமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவும் அவனை எதிர் பார்த்தபடி பயத்துடன் இருப்பாள். ராஜாராமைத் தவிர அவளுக்கு வேறு துணை இல்லை. நாட்டில் நடப்பவைகள் எந்நேரமும் அவளுக்கு பயத்தையே ஏற்படுத்தும், ராஜாராம் வெளியே சென்றால் வரும் வரைக்கும் தாகத்துக்கு தண்ணீர் கூட குடிக்காமல் அவனை எதிர்பார்த்தபடி யிருப்பாள்.

கருணா வீட்டு படலையில் ராஜாராம் சைக்கிள் மணியை அடிக்க கருணாவின் தாய் வந்தாள். "கருணாவை கடைசி பஸ் வரைக்கும் நிண்டு பார்த்த னான். ஆனால் அவன் வரேல்லை. என்ன நடந்த தெண்டு தெரியேல்லை. இந்த நேரத்திலை எங்கையும் போய் விசாரிக் கேலாது. நீங்கள் தைரியமாய் இருங்கோ. விடியக்காலை வாறன். அம்மாவும் என்னைத் தேடுவா" என்று கூறி விட்டு ராஜாராம் தனது வீட்டை நோக்கிச் சென்றான்.

ராஜாராமின் அம்மா அவனை எதிர்பார்த்தபடியே தான் இருந்தாள்.

"எங்கை போனனி இவ்வளவு நேரமும்"...

கருணா வேலைக்குப் போனவன் பின்னேரத்துக் குள்ளை வருவனெண்டு எதிர்பார்த்தன். வடிமையாய் இப்பிடி நேரம் செல்லாது. என்ன நடந்ததெண்டு தெரியேல்லை.

சில வேளை ஆமிக்காரங்கள் பிடிச்சிருப்பாங்களோ!...

அவள் ஏக்கத்தோடு கேட்டாள்.

"நாளைக்குத் தான் விசாரிச்சுப்பார்க்கவேணும்"

நீ எங்கையும் போய் விசாரிக்காதை. வயசான ஆட் களாய் போய் விசாரிக்கட்டும்- உன்னை மாதிரி இளம் ஆம்பிளையளுக்கு ஆபத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பயத்துடன் கூறினாள்.

ராஜாராம் எதுவுமே பேசவில்லை. அவள்தான் என்ன செய்வாள். அவளிற்கு ராஜாராம் ஒரேமகன். கணவன் 83ம் ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் கொழும்பில் கொல்லப்பட்டு எரிகின்ற வாகனத்தில் அவரது உடம்பை யும் சேர்த்துகாடையர்கள் எரித்தனர்.

இப்போது அவன்தான் அவளிற்கு எல்லாமே...

ஊரில் உள்ள இளைஞர்களில் பலர் நாட்டிலிருந்து வெளியேறிய போது அவள் அவனைதன் கூடவே வைத்தி ருந்தாள்.

ராஜாராம் தாயார் கொடுத்த சோற்றை விழுங்கி விட்டு பாயை விரித்துப் படுத்தான்.

அவனிற்கு நித்திரை வரவில்லை.

அவனது சிநேகிதன் கருணாவிற்கு ஏதாவது...போன மாதம் பக்கத்து வீட்டு சிவயோகக் கான்ரை தம்பியும் வேலைக்கெண்டு ரவுணுக்கு போனவன் திரும்பி வரேல்லை. ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் ஆமிக் காரன்கள் அவனை சுட்டு கிணற்றுக்குள் வீசி போட்டாங் களெண்டு தெரிய வந்தது.

என்ன அநியாயம் . அக்கிரமம்...

இந்த நாட்டில் உயிர் வாழுறதுக்கே உத்தரவாதம் இல்லை. எந்த நேரம் என்னவும் நடக்கலாம்.

ஓர் உயிரின் மதிப்பை தெரியாதவர்களல்ல எவரும்...ஆனால் இப்போ உயிர்களை அழிப்பதன் முலம் உலகத்தில் அநியாயம் அழிந்து விடும் என்று அப்பாவி உயிர்களை பலிக்கடாவாக்கி அழிக்கிறார்கள்.

ஒவ்வொருவரது வாழ்வும் ஒவ்வொருவருக்கும் இந்த நாட்டில் கேள்விக்குறியாய் விடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்தான்

ராஜாராம் அவனது நண்பன் கருணாவைத் தவிர அவரது நெருங்கிய நண்பர்கள் நால்வர் நாட்டைவிட்டே வெளியேறி விட்டனர்.

அவர்களது வெளியேற்றம் தற்செயலாய் நடந்ததல்ல...! சிவதாஸ், மணி, தனபால், செல்வம், கருணா... ராஜாராமின் நெருங்கிய சிநேகித வட்டம்.

பள்ளி வயதில் சிவதாஸ் ஊரில் உள்ள வளவுகளுக்குள் புகுந்து இளநீர் திருட்டு முதல்...விளாங்காய் திருட்டு வரை முதலிடம் வகிப்பவன்.

மணி ஊரில் உள்ள சின்னஞ் சிறுசுகளை வெருட்டி வசிப்பதில் கெட்டிக்காரன்.

செல்வமும், கருணாவும் ஒவ்வொருவரது காதலுக்கும் தூது போய் கடைசியில் அவர்களாலேயே அனைவரது காதலும் அந்தரத்தில் நின்று அம்போவாகி விட்டது!...

ராஜாராம் அவர்களது செயல்களுக்கு ஆமாபோட்டு அவர்கள் பின்னால் செல்லுவான்.

பழையகால நினைவுகளை நினைக்க எவ்வளவு மனச் சந்தோஷம். இப்போ வீதியில் நின்று ஒருவருடன் நலம் விசாரிப்பதற்கு கூட முதலில் துணிவை வரவழைக்க வேண்டும்.

முன்பு அவர்கள் அமர்ந்து பேசிய கல்லில் இப்போ இலேசாய் பச்சைப் படர்ந்துள்ளது.

ராஜாராமின் சிநேகித வட்டத்தில் முதலில்வெளியேறியவன் சிவதாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனிற்கு படிக்கப் போகிறேன் என்று கூறிவிட்டு சென்றவன். அவர்களிற்கு ஓரிரு கடிதம் போட்டதோடு சரி! செல்வமும் தனபாலும் நாட்டில் அன்றாடம்நடக்கின்ற பிரச்சினைகளால் வாழ்வதில் சிரமம் என்று வெளியேறி பிரான்சிற்கு சென்று விட்டனர்.

மணி போன வருடம் தான் போவதற்கு விருப்பமில்லாமல் இருந்தவனை, அவனது பெற்றோர் வற்புறுத்தி ஜெர்மனிக்கு அனுப்பி விட்டனர். இடையில் இயக்கங்கள் என்று திரிந்தவன் பின்பு இயக்கத்திலிருந்து வெளியேறியன் இங்கிருந்தால் ஆபத்து என நினைத்து அவனும் நாட்டை விட்டு வெளியேறியிருப்பான்.

கருணா கல்வித்திணைக்களத்தில் வேலை செய்வதால் வெளியேறும் உத்தேசம் இல்லை.

ராஜாராம் அவனது தாயார் விரும்பியிருந்தால் வெளியேறியிருப்பான். எனினும் அவனும் இது எங்கண்ட மண்; இந்த மண்ணை விட்டு நான்வெளியேறி பெரிசாய் எதையும் சாதிக்கப்போறதில்லை. பாதுகாப்பும், பணமும் இருந்தால் வாழ்வு நிறைவாய் இருக்குமோ? என்ற நினைப்போடு இம்மண்ணை விட்டு வெளியேற விரும்பவில்லை.

இப்போது வெளியேறியநண்பர்கள்,ராஜாராமிற்கோ, கருணாவிற்கோ கடிதம் கூட போடுவதில்லை. தனபாலிற்கு போன வருடம் ஊரிலிருந்து நிறைய சீதனத்துடன் பெண் பேசி பிரான்சிற்கு பறந்தது. கடந்த மாதம் குழந்தையும் பிறந்துள்ளதாக கேள்விப்பட்டான்.

இப்போ ராஜாராமை கண்டால் சிரித்து விட்டுப் போவார்களோ சந்தேகம்தான். பழைய கால நினைவுகளை எங்கே திரும்பிப் பார்க்கப் போகிறார்கள்?!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி நாடுகளிலிருந்து திரும்பி வந்த ஊரில் உள்ள ஒரு சிலர் தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களாகவும், தங்களுக்கு பிரச்சினையேயில்லை என்று பெருமையடிப்பதை அவன் கண்டிருக்கிறான்

இவர்களும் திரும்பி வரும்போது அப்படித்தான் இருப் பார்களோ?...

நட்பு என்பது சந்தர்ப்பத்திற்கு ஏற்றால்போல் தேவைகளை ஒட்டித்தான் ஏற்படுமோ?...

இவர்களும் அதே வரிசையில்...

இப்போது கருணாவும், ராஜாராமும் முன்பைவிட நடக்கின்ற பிரச்சினைகளில் அதற்கான காரணங்களை ஆராய முயன்றிருக்கிறார்கள். தீர்வைப் பற்றி யோசித் திருக்கிறார்கள். இப்போது ஒரு குழப்பமானநிலைமை?...

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் ஆன மாதிரி...

துப்பாக்கியிருந்து விட்டால் தன்னைவிட உசத்தி எவரும் இல்லை என்ற நினைப்பில் எதையும் செய்வார் கள்.

மனிதத்தையும், மனித நேசத்தையும் துப்பாக்கி குண்டுகளால் துளைத்துப் பார்க்கிறார்கள்.

ஆனால் யதார்த்தத்தை புரியாமல், நல்லது எது கெட்டது எது என தெரியாமல் நடக்கின்ற நிகழ்வுகளில் எவ்வளவு உயிர்கள் அநியாயமாய் பலியாகின்றன

ஒரு மாற்றம் ஒன்று தேவை,...

மனிதனை மனிதனாக வாழவைக்கும் மாற்றம். அது நடக்க வேண்டும். ஆனால்... எப்போது?... இது அவர் களை சிந்திக்க வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ அவனுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்ற சஞ்சலத்தினால் நீண்ட நேரம் அவனால் நித்திரை கொள்ள முடியாமலிருக்க, பொழுதும் புலர்ந்து கொண்டிருந்தது.

ராஜாராம் காலையில் கருணாவின் வீட்டை நோக்கி சென்றான். கருணாவின் தாயார் ஏற்கனவே தனது மாமனார் சிவபாதத்தாரை இராணுவ முகாமில் விசாரித்துப் பார்க்கச் சொல்லி அனுப்பிவிட்டார்.

சிவபாதத்தார் இராணுவ முகாமில் விசாரித்துப் பார்த்ததில் கருணாவை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருப்பதாயும், விசாரணை முடியுமட்டும் கருணாவின் பெற்றோரோ, உறவினரோ, இராணுவ முகாமிற்கு வரவேண்டாம் என்றும் கூறி அனுப்பியிருந்தார்கள்.

ராஜாராம் இதை கேள்விப்பட்டு மிகவும் மனக்கலக்கம் அடைந்தான். கருணாவை சந்திக்கின்ற அளவுக்கு...தனது தொழிலுக்கு சென்றவன் கைது செய்யப்பட்டுள்ளான் எப்படியும் அவனை விசாரித்துவிட்டு வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் என்ற நம்பிக்கையில் அவனது வீட்டை நோக்கி நடந்தான்.

நான்கு நாட்கள் நகர்ந்தன. நேரம் மதியத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. கருணாவின் பக்கத்து வீட்டு செல்லம்மா ஆச்சி ராஜாராம் வீட்டு படலையை திறந்து கொண்டு பதற்றத்துடன் வந்து கொண்டிருந்தாள்.

''என்ன ஆச்சி...என்னணை அவசரப்பட்டுவாறியள்

ராஜாராம் செல்லம்மா ஆச்சியை பார்த்து கேட்டான்.

"மோனே...கருணாவை விழுவான்கள்'' ...

இடையில் ஏக்கத்தோடு நிறுத்திவிட்டு ராஜாராமை கண்கலங்க பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளக்கமாய் சொல்லுங்கோவன்"...

கருணா எங்களை விட்டுட்டு போட்டான்"...

ஆச்சி சொன்னது ராஜாராமிற்கு கேட்டதோ இல்லையோ இதயம் ஓர்முறை நின்று இயங்கத் தொடங்கியது.

செல்லம்மா ஆச்சி போனதே அவனுக்கு தெரியாது.

எவ்வளவு நேரம் அப்படி நின்றானோ தெரியவில்லை.

ராஜாராம் சுயநினைவுக்கு வந்தான். சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாக கருணாவின் வீட்டை நோக்கி சென்றான். கருணாவின் வீட்டை நெருங்க ... நெருங்க அழுகுரல்களின் ஓசை தெளிவாக கேட்டுக் கொண்டிருந்தது.

'அய்யோ என்ரை ராசாவே...'

மலையான மலையை பாவியள் கொண்டுட்டாங்களே...!

கருணாவே என் கண்மணியே...

ஏகப்பட்ட குரல்களின் ஒலியை ராஜாராம் கேட்டுக்கொண்டே கருணாவின் வீட்டிற்குள் நூளைந்தான்.

ராஜாராமை கண்டதும் கருணாவின் குடும்பத்தாரும் இன்னும் சிலரும் அவனை சூழ்ந்து கொண்டு அழ ஆரம்பித்துவிட்டனர்.

ராஜாராம் வெள்ளைத்துணியால் முகம் மட்டும் தெரிந்திருந்த அந்த வெற்றுடம்பை பார்த்தான்.

முகத்தில் வழமையாய் காணும் மெல்லிய சிரிப்பு ... கூர்ந்து கவனிக்கும் கண்கள் ... அனைத்தும் அஸ்தமனமாகி காய்ந்து போய் அவனது முகம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் முட்டிய விழிநீரை துடைத்து விட்டு அவன் மௌனமாய் வெளியில் வந்தான். கருணாவிற்கு நடந்தவைகளை அறிய முயன்றான்.

அன்று கருணாவின் தாயாரை இராணுவமுகாமிற்கு வரச்சொல்லி இராணுவத்தினர் வீட்டிற்கு வந்து சொல்லி விட்டு சென்றனர். தாயார் முகாமிற்கு சென்ற போது கருணா சுகவீனமாகி இறந்து விட்டான் என்ற மரண அத்தாட்சி சான்றிதழுடன், கருணாவின் சடலத்தை தாயாரிடம் கொடுத்திருக்கின்றனர். ஆனால் கருணாவின் உடம்பில் காயங்களும் தழும்புகளும் நிறையவே காணப் பட்டுள்ளன.

அவனது உண்மையான மரணத்திற்கான காரணம் மறைக்கப்பட்டுள்ளது.

நீதி கேட்க எவருக்கும் துணிவு இல்லை.

நியாயத்தை ஒவ்வொருவரும் தமக்குள்ளேயே கேட்டுக் கொண்டிருந்தனர். சாதாரண மனிதனாய் வாழ்ந்தவன் சாகடிக்கப்பட்டான்... எதற்காக?... இப்படி எத்தனை கொலைகள்... நாளாந்தம் எந்த கொலையும் நியாயப்படுத்தப்படுகின்றன. உண்மைகள் திரிக்கப்படுகின்றன. இது இந்த மண்ணில் சகஜமாய் நடக்கின்ற ஓர் நிகழ்வாகவே தொடர்கின்றன.

ராஜாராம் கருணாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பாரமான மனத்துடன் அவனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்தான்.

நேற்று ஒன்றாய் அவனோடு பழகியவன் இன்று இல்லை. மரணித்தவன் திரும்பி வரமாட்டனா... அவனது மனம் அவனைக் கேட்டது.

அவனுக்கென்று இருந்த ஒரே நட்பும் போய் விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

கருணாவின் இழப்பு ராஜாராமிற்கு ஓர் வெறுமையை உண்டு பண்ணியது. நியாயமற்ற இழப்புகள், அழிவுகள், வெளியேற்றம்கள் தொடர்கின்ற இம்மண்ணை நினைக்கும் போது ஏக்கம் கலந்த வேதனையே வெளிப்பட்டது.

யாரால்? எவரால் இப்படி அநியாயங்கள் தொடர்கின்றன என்பதை அவனால் ஓரளவு ஊகிக்க முடிந்தது. அநியாயமான நிகழ்வுகளை பார்த்துக் கொண்டிருக்க எந்த மனிதாபிமானமுள்ள ஜீவனாலும் முடியாது. இது சாதாரணமாய் வாழ்ந்து கொண்டிருந்த ராஜாராமிற்கு ஓர் தாக்கத்தை உண்டு பண்ணியது.

...தம்பி...ராஜாராமை அழைத்தாள் தயார்.

என்னம்மா?...

இங்கை நடக்கிறதுகளை பார்த்தால் நீயும் நாட்டை விட்டு வெளியேறுறதுதான் நல்லது. கருணாவுக்கு ஏற்பட்ட நிலைமை உனக்கும் வரக்கூடாது. எங்கையாவது காசு மாறிக்கொண்டு வந்துதாறன். வெளிக்கிடு

ராஜாராம் தாயார் இப்படிகூறுவா என எதிர்ப்பார்த்திருந்தான். ஒவ்வொரு தாயாரும் தான் பெற்ற குழந்தைகள் தப்பிப் பிழைக்கவேண்டும் என்று நினைப்பதில் தவறில்லைத்தான். ஆனால் வாழ்ந்த, வளர்ந்த நாட்டை அநாதரவாய் விட்டுவிட்டு செல்வதா?......ராஜாராம் சிந்தித்தான்.

நாங்கள் ஒவ்வொருத்தரும் மௌனமாய் இருக்கிறதாலையும், சரியானது எது என்பதை அறிய முயற்சிக்காததாலையும், நானும் எனக்கு வேண்டியவர்களும் வாழ்ந்தால் போதும் மற்றவர்கள் எப்பிடியென்றாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கென்ன? என்ற மனோபாவத்திலை வாழுறதாலும், தப்பிப் பிழைக்கிறதுக்காக மண்ணை விட்டு வெளியேறுற தாலையும்தான் இவ்வளவு அநியாயங்களை நாங்கள் காணவேண்டியிருக்கு.

கூடாது. இதை நாங்கள் ஒவ்வொருத்தரும் சிந்திக்கிறதாலைதான் இப்படிப்பட்ட நிகழ்வுகளை தடுத்து நிறுத்தி ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ராஜாராமின் சிந்தனைகள் எங்கோ விரிந்து பரவு கின்றன......

அம்மா... நான் எங்கையும் போக விரும்பவில்லை. நீங்களும் ... இந்த மண்ணும் ... மக்களும்தான் என்னுடைய வாழ்க்கையாகிறதைத்தான் நான் விரும்புறன், என்று கூறியபடி ராஜாராம் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே செல்கின்றான்.

ராஜாராமின் தாயார் வானத்தில் சுதந்திரமாய் பறந்து செல்லும் பறவைகளை பார்த்தபடி யோசனையில் ஆழ்கின்றாள்.

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுளை அறியாத பலாமரங்கள்

ஞொயிஸ் சிவபாலன்

இழந்த கண்ணில், ஒளி வந்த போது, உலகை இருள் கவ்விக் கொண்டதான வேதனை...

முள்ளில் படுக்கை இட்டு இரவு பூராவும் மூடாதிருந்த கண்களுக்குள்ளே .. ஊரிகள் அணிவகுத்துச் செல்வது போன்ற உருட்டல்.

விடிந்துவிட்ட போதும், அவளைப் பொறுத்தவரை இது வரை இல்லை!

இன்றும் அவள் அலுவலகம் செல்லும் நேரம் தாண்டி விட்டது...

படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே இல்லை.

மனத்தில் இனந்தெரியாத ஒரு படபடப்பு. எதையோ போட்டுடைத்து விட்டதான அந்தப் பயவுணர்விலிருந்து அவளால் மீள முடியவில்லை.

சீ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இந்த விபரீதமான ஆசை எனக்கு...?

அப்படியே இருந்திருக்கலாமே !

இந்த அண்மைக்கால பிரச்சனைகளுக்குள் ஏன் ஆளாக்கப்பட்டேன் ?

எப்படியெல்லாம் கட்டுப்பாடுகளை விதித்திருந்தேன் இந்தப் பாழாய் போன உணர்வுகள் என்னை அடிக்கடி பரிகாசம் செய்தனவே...!

இவைகளைக் கட்டுப்படுத்தி வாழ்கிறோம் என்று சொல்பவர்கள், உண்மைதான் சொல்கிறார்களா ?

ஏதோ ஒரு விடயத்துடன் தொடர்பாக அவளது சிந்தனை ஒவ்வொன்றும் 'யக்பின்'களாகக் கொழுவப் பட்டன.

நேற்றைய நிகழ்வுகளோடு... அந்த அண்மைக் காலத் தின் ஆறுதல்கள் அவளது மனத்திரையில் படமாக விரிந்தது.

'ரமணன்'...

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் அதே அலு வலகத்தில் பார்த்த உருவம் ..

சிரிப்புக்கு.. சிரிப்பு.

உதவிகளுக்கு..."தாங்ஸ்"......

இவ்வளவோடு ஒரு சக ஊழியன் என்ற மட்டத்தில் நின்று விட்டது.

அலுவலகத்திலிருந்து பஸ் ஒழுங்கு செய்து வீட்டிற்கு வந்து துக்கம் விசாரித்த போதும்......

வந்தவர்களில் அவன் ஒருவன்.

மீண்டும் அலுவலகம் போகத் தொடங்கியபோது சற்று கூடுதலாகப் பரிதாபப்பட்டவர்களிலும் ஒருவனா கினான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான நன்றியுணர்வை மட்டும் அவள் பார் வைகள் தந்திருக்கலாம் !

ஆனால் !

எந்த வார்த்தைகளும்... . ம் .. ம்.

இருந்த போதும்......

அவனுடைய உதவிகளையோ பரிதாபத்தையோ விலக்கிவிட அவள் மனம் எத்தனிக்கவில்லை.

இனம் தெரியாத ஒரு பற்றுணர்வு.....

இந்த உலகத்தின் மீது......

அவனைப் பற்றிப் பிறர் பேசும் போது அவளுக்கும் ரசனை ஏற்படும்.

ஆனால்...!

அவள் பேசியதே கிடையாது.

சாப்பாட்டு வேளைகளில், எத்தனை தடவை அவளு டைய அலுவலகத் தோழிகளின்முந்தானைகள் கண்ணீரை ஒற்றி எடுத்திருக்கும்.

இருந்த போதும்! 'ரமண'னின் வெறும் பார்வை ஒன்றே கண்ணீரை ஆவியாக்கிவிடுவதை உணர முடிகிறது. இருந்தாலும்......

உள்வாங்கிக் கொள்வதற்குத் தகுதியில்லாத உணர்வு களாகிவிட்டிருந்தன.

வலிந்து உதாசீனம் செய்து விட்டாள்.

சுமார்......

...இரண்டு மாதங்களின் முன் ஒரு நாள்......

...

அந்த நாள் கூட அவளுடைய நாட்குறிப்பில்.. ...

வழக்கத்திற்கு மாறாக 'ரமணன்' தன்னுடைய பாதையில் எதிரே வருகிறான்......

தே—4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரமணனே' தான்.

அவளுடைய வேகம் அதிகரிக்கிறது...

கால்கள் மறுக்கின்றன...இதயம் இயல்பைவிட இயக்கத்தை அதிகரிக்கின்றது;

விலகிப் போய்விட எண்ணியும்......

நிமிர்ந்து பார்க்கிறாள்.

அனுசரணைமிக்க அவனது பார்வையில்... அன்று ஆயிரம் மடங்குகள் அதிகரித்துக் காணப்பட்டது.

பார்வையை எதிர்கொள்ள முடியாமல்......

...'கௌரி' தன் தலையைத் தாழ்த்திக் கொள்கிறாள்.

....

கரிய 'ஜீன்ஸ்' ஸில் ஒளிந்து நிற்கும் அவனது கால்களை மேய்கிறது அவள் பார்வை.

''குட் ஈவினிங்''...

மௌனம் கலைகிறது;

''குட் ஈவினிங்'' பதிலுக்கு அவளும் சொல்லிவிட்டாள்.

''உங்களிடம் ஒரு உதவி......''

அவள் நகர்ந்து விடுவாளோ என்ற அவசரத்தில் ரமணன்' பேச்சை ஆரம்பித்து விட்டான்.

'என்ன உதவி சொல்லுங்கோ'

என்பதுபோல அவளுடைய முகம், தன்னை நேராக்கிக் கொண்டது,

''சுருக்கெழுத்தில ஒரு லெட்டர்... அதை தமிழில் இயல்பான எழுத்திலேயே ரைப்பண்ணித் தரவேணும்.

......SO ! இரட்டைச் சிரமம்......''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்கு அலுவலகத்திலே செய்து தாறன்"

நீளும் போல இருந்த பேச்சுக்கு நிறுத்தற் குறியிட்டு விட்டு நகர்கிறாள்.

"தாங்ஸ்" கூறிக் கொண்டு தன்னை சுதாகரித்தபடி 'ரமண்'...

... ... ...

பார்வையோடும் புன்னகையோடும் மட்டும் நின்று விட்ட தொடர்புபடிதாண்டி விட்டிருந்தது.

அன்று பேசியதைப் பற்றிய பய உணர்வும் பேச்சை இடையே முறித்துவிட்ட ஏக்கமும் என்னவென்றில்லாத அமைதியீனமும்......அவளை ஆட் கொண்டன. எனக்குள் ஏதோ! என்னவென்றில்லாமல்.

என்னுடைய கட்டுப்பாட்டையும் மீறி,......

'ரமணன்' என்னைக்.........

ஒரு போதும் இருக்க முடியாது.

வாட்ட சாட்டமான உடல், வாகாயமைந்து விட்ட முகம்......

சீதணச் சந்தையில் கணிசமான மதிப்பிருக்கும், புத்தம் புதிய மலர்களின் போட்டிற்குரியவன்;

என்னை எப்படி விரும்புவான் ?

சுருக்கெழுத்திலிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்து விடுவோமா?

சுருக்கி வைத்திருந்த அவளது ஆவல் விரிகிறது.

'கான் பாக்கில்' கை சென்றபோது...

"கௌரி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் அழைப்பு அவளை வந்தடைந்தது.

அலுவலகம் முடிந்து வந்து வழமையாகச் செய்யும் பணிகளில் ஏற்பட்ட தாமத்தை அறிவிக்கும இறுக்கம்!

அந்த அழைப்பிற் தொனித்தது.

எழுந்து சென்றாள் எல்லாவற்றையும் அவசர அவசரமாக முடித்துவிட்டு படுக்கைக்கு வந்தாள்.

எதையும் இதுவரை வரைந்து கொள்ளாத ஒரு வெள்ளைத்தாள்......

அதை மாசு படுத்த ஒரு பேனா...

இவைகளைக் கையிலெடுத்துக் கொண்டு

இறுக்கி இருந்ததான தன் நெஞ்சைத் தலையணையில் சாய்த்துக் கொண்டு சுருக்கெழுத்தை முன்னே வைக்கிறாள்.

அவளுடைய கண்களையே அவளால் நம்பமுடியவில்லை.

திடீர் என்ற மின்சார அதிர்வு...

..........

"கௌரி!"

என்றழைத்தது அந்தக் கடித ஆரம்பம்.

"உன்னுடைய பாதிப்பு உலகில் புதியதல்ல, ஆனால் உன்னுடைய அமைதியும், தூய்மையும், அடக்கமும் உலகில் இல்லாதவை...

இழப்பையே எண்ணிக் கொண்டு... உன்னை நீ தாழ்த்திக் கொள்வதை நான் முழுமையாக வெறுக்கிறேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது உனக்கு வேண்டாம் என்கிறாயோ அது வேண்டும் என்கிறேன்..."

சுற்றும் முற்றும் பார்த்து விட்டு

மேலும் ஆர்வமாகப் படிக்கிறாள்...

கையிலிருந்த பேனாவுக்கு வேலையில்லாத காரணத்தால்...

அது தானாகவே நழுவிக்கொள்கிறது.

......

"கௌரி நீ திருமணம் செய்து, சந்தோஷமாக வாழ வேண்டும்...

இது உன்னால் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் என் மனதிற்குப் பிடித்துவிட்டவளான உன்னை... ஏற்றுக் கொள்வதை நான் பாக்கியமாகவே கருதுவேன்...!"

ஆம்...!

என்ற வார்த்தையை மட்டும் உன்னிடமிருந்து எதிர் பார்க்கிறேன்.

"அப்பா-அம்மா, மற்றும் அனைத்து ஒழுங்குகளும் என்னுடையவை..."

—'ரமண்'

......

தலையணையின் ஓரம் ஈரமாகியிருந்தது.

கண்ணீரின் காரணம் அவளுக்கே தெரியவில்லை.

நாக்கு வளைக்கும் நலா புறத்துப் பெண்மணிகளும்...

அலுவலகத்தின் முதுமை ஊழியர்களும் இடையிடையே அப்பா அம்மாவும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்திரையில் வந்து மிரட்டிவிட்டுச் சென்றனர்.

வருபவர்களையெல்லாம் மார்பில் பிடித்துத்தள்ளிக் கொண்டிருந்த அவளது மனோதிடம்... மேலோங்கி நின்றது.

இயல்பான உடல் உணர்வுகளை ஏன் நீ எரித்துக் கொள்ளவேண்டும் என்றது?

கடிதத்தை மறுபடியும் மறுபடியும்...

கண்கள் மூடிக்கொள்ள மறுத்தன.

மறுநாள் காலை...

புதுவிதமான மலர்வு அவள் முகத்தில்...இருந்தும் காய்ந்துபோனது போலத் தெரிந்த தன் கண்களைத் திரும்பவும் மெரு கூட்டிப்பார்க்க முனைகிறாள்.

தங்கை 'சுகுணா'வின் பாவனையிலிருந்த சாயப் பென்சில்கள், மைகள்...

அன்று அவை அவசியமாகவே பட்டன.

இரண்டாண்டுகள் தீண்டாத அவைகளை... இன்று தீண்டும்போது...?

தயங்கித் தயங்கி முடிவெடுக்கவே நேரமாகி விட்டது.

"கௌரி"

அம்மாவின் அழைப்பில் பஸ்ஸுக்கு நேரமாகிவிட்ட அறிவிப்பும்...வழமையைவிட வேறுபாடான தன்மையினை உணர்ந்து கொண்டதான தொனிப்பும் கலந்து கிடந்தன.

எந்த முடிவுமில்லாமல் அலுவலகத்துக்குள் நுழைந்து விட்டாள்.

கவிழ்ந்த தலை நிமிராமல் காகிதங்களும், கார்பனும் தட்டச்சுப் பொறியில் தடுமாற விடப்படுகின்றன.

காலடி ஓசைகள் எல்லாம் 'ரமண'னாக இருக்குமோ என்ற அங்கலாய்ப்போடு அவதானித்தாள்.

அன்று மாலை வரை அவன், அவளைச் சந்திக்கவே இல்லை.

"என்னுடைய எந்தத் தீர்மானமும் அம்மா—அப்பாவின் முடிவுகளை அனுசரித்தே இருக்கும்"

நீண்ட வெள்ளைக் காகிதத்தின் நடுவில் இந்த இரண்டு வரிகள்...

தட்டச்சின் உருளையிலிருந்து காகிதம் விடுபட்டபோது...அடிமைத்தனம் அறுபட்டதான உணர்வோடு அவளிடம் ஒரு மகிழ்வு.

முடிவு எதுவானாலும் சமாளிக்கும் தைரியத்தை வலிந்து வரவழைத்துக் கொண்டவனாக...

'ரமணன்'

அலுவலகம் முடியும் வேளை அவளுடைய மேசை அருகே செல்கிறான்.

அவள் ..தன்னுடைய எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல்...

'டைப்' பண்ணிய அந்தத் தாளை மட்டும் மேசை மீது வைத்துவிட்டு... எழுந்து நின்றாள்.

மேசை மீதிருந்த காகிதங்கள் எல்லாம் இரவுத் தங்கலுக்காக 'லாச்சிகளு'க்குள் சென்றுவிட இது மட்டும் தனித்து மேசை மீது இருந்ததும்.

'இதோ இருக்கிறது' என்பது போல அவளது பார்வை காட்டியதும் சேர... கடிதத்தை 'ரமணன்' உடனே எடுத்து விடுகிறான்.

எந்த வார்த்தைகளும் இன்றி அவளும் வீடு வந்து விடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய உடலில் ஒரு தெம்பு பிறக்கின்றது. சுறுசுறுப்பும் சற்று அதிகமாகிவிட்டிருந்தது.

யதார்த்த உலகில் ஆசா-பாசங்களுக்கு அணை போடுவது என்பது கஷ்டமான பணிதான் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்கிறாள்.

அறையில்...

வீட்டில்...

வீட்டின் சுற்றுப்புறங்களில் எல்லாம்... அப்படி அப்படியே போடப்பட்டிருக்கும் பொருட்கள் அன்று அவள் கண்களிற் சுமையாகத் தெரிந்தன.

வீட்டார் விசேடமாக எண்ணாத வகையில் அவைகளை இயலுமான அளவு ஒழுங்கிற்குள் கொண்டு வந்தாள்.

உடல் அசதிகள் எல்லாம் ஓடிவிட்டிருந்தன. இன்றும்...விழிகள் தூக்கத்தைத் தூரத்திலேயே நிற்க வைத்திருந்தன.

சன்னலோரமாக வரும் போதெல்லாம் "உன்னை எனக்கேன்" என ஒதுக்கித் தள்ளிய அந்த நிலா ஒளி... இன்று காட்டிற் காயாமற் பூஞ்சோலையிற் காய்வது போன்ற உணர்வு. அந்தப் பௌர்ணமியை அன்று முழுமையாக ரசித்துவிட்டாள்.

'சூரியனை'ச் சேவைக்கு அழைத்துவிட்டு 'நிலா' ஓய்வுக்குப் போய்விட்டது.

அன்று ஒரு சனிக்கிழமை—அலுவலகம் இல்லாத ஒரு நாள்.

சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் குளியலறையிலிருந்து வெளியே வந்துவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமை போல இறுகப் பின்னாமல் தலைமுடிக்கு சற்று விடுதலை கொடுக்கப்பட்டு...கழுத்திற்குக் கீழே இறுக்கமற்ற ஒரு கட்டு...

தன்னுடைய அந்த சுருள் கேசத்தையே ரசித்தபடி... நாசூக்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்...

சுமார் பதினொரு மணி இருக்கும்.

யாரோ வருவதை அறிவித்துவிட்டுப் பின்புறமாக ஓடிய நாய் மீண்டும் சுருண்டு கொண்டது.

'ரமணன்'...

இவ்வளவு அவசரமாக எதிர்பார்க்கவில்லை...

எதைச் செய்வது, எதை சொல்வது, கொடுப்பது என்பதெல்லாம் குழப்பம். கை கால் ஓடவில்லை.

பரீட்சை மண்டபத்தில் முதல்நாள் உட்காரும் போதுள்ள அந்தப்பய உணர்வினைப் போல பன்மடங்கு அதிகமான ஒரு உணர்வு.

அவள் வெளியே வரவே இல்லை.

"வாங்கோ தம்பி" அம்மா வரவேற்பதும்.

மூக்குக்கண்ணாடியைத் தாழ்த்தி அப்பா குறிப்பறிவதும், அவளால் அங்கிருந்தபடியே அவதானிக்க முடிந்தன.

தன்னைத்தானே அறிமுகம் செய்து கொள்ள வேண்டிய சங்கடமான நிலையிலிருந்து...

வந்து விடயத்திற்கு வந்துவிட்டதான சம்பாஷணையின் வளர்ச்சியோடு சேர்ந்து 'கௌரி'யின் காதுகளும் கூர்மையாகிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதோ விதிவசம் அவள் காதலிச்சோ அல்லது விரும்பியோ இல்லை. நாங்களாகவே பாத்து...நல்ல குணமான பையன், எல்லாம் நிறைஞ்சவன், 'சவுதி'யில 'சேவையரா' இருந்தவன் இரண்டுமாத லீவில வந்த போது செய்து வைச்சம்...

ம்...இப்பிடி நடக்கும் எண்டு யார்தான் கண்டது...?

அவர் இறந்ததில இருந்து அவளுடைய நடவடிக்கை களுக்கு முன்னால இப்பிடியான ஒரு யோசனை வர முடியவேயில்லை.

இப்பவும் அறையில் அவருடைய படமும் நினைவு மாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாள்..."

இப்படி ஒரு குட்டிப் பிரசங்கம் அப்பாவிடமிருந்து வந்தது.

"எதற்கும் கௌரியிடம் ஒரு வார்த்தை கேட்டு விடுங்க..."

இடையே 'ரமணன்' பேசினான்.

"எப்பிடித்தம்பி...?" அவளுடைய நடவடிக்கைகளில், அந்த விருப்பை அவதானித்திருக்காத அவளது தந்தை 'ராமநாதனுக்கு' இது பெரும் மனப்போராட்டமாகப் போய்விட்டது.

"இங்க பாருங்கோ தம்பி என்ர அம்மாவும் என்னை வயித்தில வைச்சிருந்த வேளையிலேயே வெள்ளை யுடுத்தினவ......

என்னோடையே சீவிச்சுப்போட்டு போய் சேர்ந் திட்டா...

ஏதோ என்ர பிள்ளை ஒண்டுக்கும் இப்பிடி ஆகிப் போச்சு......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் விட்டது. எண்டு நினைச்சு ஒருதனுக் காகவே வாழ்ந்திட்டுச் சாகிறதுதான் தம்பி நல்லது...

கந்தோருக்குப் போற பிள்ளையெண்டதால கலர்ப் புடவை கட்டுறதுக்கே ஊர் சொல்ற கதைகள்...

...

"...ம் கந்தோரில காதலாம் எண்டால்...பேசவே வேணும். இளமையில இதுகள் ஒண்டும் பார்க்கமாட் டேன் என்பார்கள்......

நாள் போகப் போகப் பழையதுகளைக் கிளறி வேதனைப் படு"

தாயாரின் பிரசங்கத்தைத் தடுத்து நிறுத்திவிட்ட ரமணன்'

"நான் அந்த ரகம் இல்லை"

என்றான்.

"உங்களுடைய முடிவுகளுக்கு மாற்றமாக கௌரியின் மனவிருப்பு அமைந்து இருந்தால்...?"

மீண்டும் ரமணன்,

'சேட்' பையுள் கைகளை வைத்து கடிதத்தை எடுக்க முனையும் போது...

"ப்ளீஸ் வேண்டாம்" என்று இரங்கும் அவளது முகம் 'சன்னல்' வழியே தன்னைக் காட்டி மறைந்தது.

"தம்பி, எங்களுடைய பிள்ளையை எங்களுக்குத் தெரியாமலும் இல்லை. ஊருக்கு பதில் சொல்லவும் எங்களால முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிக் கொண்டு இதற்குமேல் கதைப்பதில் தமக்கு விருப்பம் இல்லை என்பதைப் போல நடந்து கொண்டனர்.

இறுதிச் சொட்டுத் தேனீரையும் உறிஞ்சி விட்டு எழுந்த ரமணன் விடைபெற்றான்.

அவளது உள்ளத்தின் ஆசைகளும் மீண்டும் விடை பெற்றன.

அந்த இளம் உளம் இருளிற் குமுறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணவணிகன்

## சாரணியன்

பூவரச மரங்கள் நெற்பிரஸைகளின் பாதுகாப்பிற்கென அணிவகுத்து நிற்கும் அந்த மேட்டுத் தெருவில் திடீர் என வந்த "கொறோலா" கார் "சிலோ" வாகியது. ஆம்.

இந்தக் கிராமத்துக்கே ஏகபோகம் பராட்டும் தார்வீதி அது.

இ. போ. ச. பஸ் தவிர வேறு வாகனங்கள் அருமை பெருமையாகவே செல்லும் அந்த வீதி அமைந்துள்ள "சேரன் புலவின்" பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகே அமைந்துள்ள அந்த வீடுதான் "ராம்" உடையது.

இரும்புக் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே சென்று விட்ட அந்தக் "கார்" கூட என்ன "கார்" என்று இனம் காண முடியாத சில இளவட்டங்கள்......

மாடு ஓட்டுகின்ற கேட்டிகளைக் கையிற்பிடித்தபடி, மேனியில் மேலங்கிகள் எதுவுமில்லாமல், கட்டைக் காற் சட்டைகளின் தெறித்துவாரத்தினூடாக ஒரு தலைப்பை செருகி இறுக்கியபடி பின்புறத்தில் துண்டுவைத்தும், துண்டு வைக்காததுமான துவாரங்களால் அலங்கரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட அந்தக் காற்சட்டைகளைக் காட்டியபடி கேற்றின் கம்பிகளுக்கு ஒன்றாக.........

காரிலிருந்து இறங்குபவன் "ராமன்" தான் என்று கூட அவர்களால் இனம் காணமுடியவில்லை.

அவசர அவசரமாக புதிதாக அந்த மாளிகை கட்டியதும்......வீடுகளிலெல்லாம்......"கதிராசி" யின்ன மகன் புற நாட்டில என்று கதைப்பதும் மட்டும் தெரிந்திருந்தது.

"அடேய் அங்க...பாரடா வெள்ளைக்காரியடா"

எல்லோருடைய பார்வையும் "டோரிஸ்" மீது குவிந்தன.

காரின் பின்புறமாக வந்த "ராமன்" இறக்கி வைத்த சூட்கேஸ் மீது "டோரிஸ்" தன் கைகளைப் பதிக்கிறாள்.

..............

"லீப்லிங்...நையின்...லாஸ் மிஸ் மிற்நேமன்" என்றபடி இரண்டு சூட்கேஸ்களையும் கையிலெடுத்துக் கொண்ட "ராமன்" விறாந்தைப் படிகளிற் தன் கால்களைப் பதித்தான்.

"ராமனை"த் தொடருகின்ற "டோரிஸ்"ஸின் மனதில் எதையோ கேட்டுவிட வேண்டுமென்ற குறுகுறுப்பு.

"ராம்" உங்கள் கிராமம் ஏன் இவ்வளவு மோசமாக இருக்கின்றது?

"சுதந்திரம் முன்னேற்றம், ஏன் மின்சாரம் கூட எங்கள் கிராமத்தை எட்டிப்பார்க்கவில்லை..."

தேசப்பற்றும் அறிவும் நிறைந்த அவனுடைய வார்த்தைகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டோரி"க்குப் புதியவையல்ல...

பதில் அவளுக்குப் பிடித்திருந்தது.

முந்தானையை இழுத்து சொருகியபடி வளைந்து நெளிந்து தன் சிரிப்பை "டோரி"க்கும் மகனுக்கும் மாறி மாறி வழங்கிக் கொண்டிருந்த "கதிராசி"யின் கண்கள் கேற்றைப் பார்த்தபடி... விறாந்தை சுவரின் ஓரமாக சாய்ந்து நிற்கிறாள்.

அனுப்பிய பணத்திற்கு அவன் எதிர்பார்த்தபடி வீடு அமையவில்லை என்றாலும்...ஓட்டுக் கூரையே காணாத அந்த ஓட்டைக் குடில்கள் நிறைந்த அந்தச் சூழலின் நடுவே ஒரே ஒரு மாடி வீடு என்ற கர்வத்துடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

சூட்கேசிலிருந்து "சம்பூ", "துவாய்", "சோப்" இவை களை எடுத்த "ராமன்" "அம்மா ஙேய்"...

இந்த அழைப்புக்காகவே காத்து நின்றவள் போல "கதிராசி" அறைவாசலுக்குச் செல்கிறாள்.

"இதுகளைக் கொண்டுபோய் "பாத்"றூமில வையணை"

கொடுத்த சாமான்கள் குளியலறைப் பொருட்கள் தான் எனத் தெரிந்து கொண்ட "கதிராசி" அவைகளை அங்கே வைத்துவிட்டு தூவாயையும் விரித்து "சவர் பேசின்" விளிம்பில் போட்டுவிட்டு வெளியே வரு கிறாள்.

"கதிராசிக்கோ" தலைகால் ஓடவில்லை... என்ன செய்யிறது? எதைச் சமைக்கிறது?...எதைப் பேசிறது?... எதுவுமே தெரியவில்லை!

"உந்தப் பாழ்பட்ட மனிசன் போனது இன்னும் காணயில்லை...அந்த ஆள் வந்தாலாவது..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் நினைத்துக் கொண்ட "கதிராசி"

"புள்ள முகம் கைகாலக் கழுவுமோனை"

"தமிழ் தெரியாமலே இருக்கும்" என்ற நினைவில் அவள் சொல்லிவிட்டாள்.

அவள் சொன்னது விளங்கவில்லை என்றாலும் தனக்காக ஏதோ என்று விளங்கிக்கொண்டு...தன் சிரிப்பைப் பதிலாக்கிய "டோரிஸ்" "ராமனு"டன் பாத்றூம் போகிறாள்.

என்ன தான் இருந்தாலும் ... அந்தக் களிமண் அவர்களின் பாதுகாப்பில் தூங்கி எழுகின்ற அதிகாலைப் பொழுதும், கரித்துண்டைப் பற்களில் அழுத்தி உரசும் இன்பமும் பறிபோனதைக் காட்டிக் கொள்ள முடியவில்லை என்றாலும் நினைக்காமலிருக்கவும் முடியவில்லை...

ராமனின் பெருமூச்சில் அது-உணரப்பட்டது.

அயல் அட்டைகள் எல்லாம் உஷார் அடைந்து விட்டன.

குறுக்குக் கட்டுகளைச் சரிசெய்து கொண்டு 'தாமாசி'யும், பொன்னியும் "கதிராசி" வீட்டிற்கு வந்து விடுகின்றனர்.

"என்னனை சின்னன்மோன் வந்திட்டான் போல"

"எட்டு வருசத்துக்குப் பிறகு புள்ள வந்திருக்கான... அந்த வெள்ளக்காரப் புள்ளையும்... அவனோட படிச்சதாம்..."

தொடர்ந்து பேச்சு கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் "கதிராசி" இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமண எப்பனுக்குப் பொறுங்கோ...அதுகளுக்கு ஏதும் செய்து வைச்சுப் போட்டு வாறன்..."

திரும்ப முயன்ற "கதிராசி"...

"எங்கபோனனியள்... தம்பி வந்து எவ்வளவு நேர மாச்சுது...?"

கைப் பை ஒன்றில் காய்கறிச் சாமான்களோடு 'சங்கரி"யர் நுளைகிறார்.

"அப்பு"...

"ராமு"... நல்லா இருக்கிறியாப்பா? என்று ஆனந்தக் கண்ணீர் உருகி உடலெல்லாம் பாசம் வழிய மகனைக் கட்டி அணைத்தார்.

வெள்ளைக்காரி பக்கத்தில வந்ததால... வந்தவுடனேயே...இதைத் தான் செய்வதற்கு வெட்கப்பட்டு விட்டுவிட்ட வேக்காளம் தங்கிவிட்ட "கதிராசியின்' நெஞ்சு சூடாகியது.

"ராமன்" பக்கத்தில் நின்ற "டோரிஸ்"ஸைச் குறிப்பாகப் பார்க்கிறான்.

அவனுடைய பார்வையைப் புரிந்து கொண்டவளாக..."டோரிஸ்" மாமனாரின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

.........

விறாந்தைத் தலைப்பில் இருக்கும் "பொன்னி" "இராமாசி" உட்பட வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வேலி ஒரப் பார்வையாளர்களுக்கெல்லாம் தூக்கி வாரிப் போட்டது.

"என்னடி பொன்னி பொடியன் சும்மா வர இல்லையடி சங்கரியருக்கு மருமகளோடதான் வந்திருக்கிறான்"...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராமாசி"யின் வழமையான விடுப்பு ஆரம்பமானது.

"அந்த நேரம் இவன் என்ர இளையவனோட "நாவக்குழி"ப் பள்ளியில நாலுமட்டும் போய் வந்தவனணை...ம்...இப்ப என்னடா எண்டாப் புற நாட்டில படிச்சவனாம் எண்டுஇவள் "சின்னன்" சொல்லுகிறாள்"

தொடர்ந்த "ராமாசி"யை இடைமறித்த 'பொன்னி"......

"அதெல்லாம் தலைச்சுழியணை... உவன் வெளிநாடு போவனெண்டே நினைச்சனாங்கள்...?"

உவன் பெடியன் அப்பவே நல்ல பிரயாசியணை வருசம் வருசம் உந்த "சரக்கண்டியில" இருந்து "சாம்பல் தீவு" வரையும் ஒரு பூவரசும் விடாம வெட்டி அவனே கழிச்சு ..அவனே கட்டி ஏத்திக் கொண்டுபோய் வித்துப் போட்டுவந்திடுவானணை."

"இவன் போறதுக்கு முதல் வரியம் உவன் சிவத்தானிட 'ரக்டரில' குழைக்கட்டோட பிரண்டு... புள்ளையைக் குழை மூடிப் போட்டுது.

"அவடத்து சனமெல்லாம் "கூவோ", "குளங்கரையோ" எண்டு கத்திக் கொண்டு ஓட... பொடியன் சும்மா கம்புமாதிரி எழும்பி வெளிய வந்தவனணை"...

அப்பிடி நல்ல தலைச்சுழியும்... ம்... அந்த வள்ளி அம்மாளிட அருளும் தான்.

"அப்பிடியான பொடியனணை அங்கின புற நாட்டிலையும் சும்மாவே இருந்திருப்பான்...?"

"ம்... புறநாட்டுக்குப் போறவயள் அங்க... சவக்கிடங்கு வெட்டுறதும், கோப்ப கழுவுறதும் தானே... என்ன படிப்பு படிச்சு கிழிக்கிறவயள்...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நெளிப்போடு சூடாகி வந்த சொற்கள் "ராமாசி'' யுடையவை.

"படிக்காமலேயணை வெள்ளக்காறிச்சிய முடிச்சவன்..."

"ம்...என்ன பெரிய வெள்க்காறிச்சி...? ஆரு விட்டதக் கூட்டிவந்தானோ...?"

"எணேய் 'பொன்னி' ஆச்சி ..!"

தாழிப்பு வாசனையும் தடல்புடலான சமையல் சாதங்களும் நடந்து கொண்டிருக்கும் "குசினி" அறை வாசலிலிருந்து வந்த குரல் அது...!

"தார் தகரத்தில் விட்டு எடுத்த தடி ஒன்றின் மினு மினுப்போடு...இனிமேல் நகை போடுவதற்கு இடமேது! என்று எண்ணக்கூடியதான ஒரு உருவம்...

அந்த வாசலில்...

அவள் யாருமல்ல...

"ராம்"ன் தங்கை "வதனி"...

இவளையும் "ராமன்" "டோரிஸ்"ற்கு அறிமுகம் செய்து வைக்கிறான்.

......

ஏதோ சிந்தனை வயப்பட்டு ஒரு முடிவுக்குள் வந்தவராக "சங்கரி"யர் இப்போதுதான் "டோரிஸ்"சைப் பார்க்கிறார்.

பொன்நிறமான கூந்தல், நீலவண்ண விழிகள், அறிவுப்பரப்பென அகன்ற நெற்றி, பிடித்து வைத்தாற் போல கூரானமூக்கு, ரோஜா இதழ்கன்னங்கள்வெள்ளைப் பின்னணியில் சற்றுக் கூடுதலாக சிவந்து தெரியும் உதடுகள் ஏற்ற தடிப்பமும்' எடுப்பான தோற்றமும் அந்த சலவைக்கற் சிலையைத் தெரிந்தெடுத்ததன் மகனுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு "பலே" சொல்லிவிடலாம் என்று எண்ணிய போதும்...

சனியன் இங்க வந்து செய்திருந்தான் எண்டால் ஒரு நாலு, ஐந்து அமர்த்தி இருக்கலாமே" என்ற எண்ணமும் கூடவே இழையோடியது.

"வீட்டுக்கு மட்டும் பதினாறு லட்சம் ரூபா, அதோட அவளவையிட நகையள். வெளியில பொறுப்புக்கு நிற்கிற காசுகள்...அவளும் ஏதோ காசுக்காறிதான் போல...இல்லையெண்டா செய்யிற...ராமனே"

"சங்கரியர்" தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார்.

தென்னங்கீற்றுகள் சாமரம் வீச...செவ்வண்ணப் பூ மரங்கள் வரவேற்க "கட்டுநாயக்க" விமானநிலையத்தில் இறங்கியதும், நுவரெலியா, சீதா எலிய, கண்டி ஆகிய இடங்களின் இயற்கை வனப்பினைக் கடந்த மூன்று தினங்கள் பருகியதும்...

"இலங்கை இந்துமா கடலின் சுவர்க்கம்" என்று எத்தனை தடவையும் சொல்லலாம் போல "டோரிஸ்"ற்குத் தோன்றியது.

பற்று அதிகமாக அதிகமாக, தானும் அவர்களில் ஒருத்தியாக ஆகிவிடவேண்டும் என்ற எண்ணம் அவளிடம் மேலோங்கியது.

வழமையாக எதையாவது பிச்சுப்பிடுங்கிக் கேட்டபடி இருப்பதே "டோரிஸ்"ன் "ஸ்பெஷாலிட்டி"

இப்படித்தான் "ராமனை" "ராம்"வண்டியில் சந்தித்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய "ஜக்கெட்டில் குத்தி இருந்த சின்னத்தை, "என்ன இது...?" என்று கேட்டதோடு ஆரம்பித்த அறிமுகம், தொடர்ந்த சிநேகம், வளர்ந்த உறவு, வாழ்க்கைக்கே துணை தருகிறேன் என்ற அளவுக்கு ஆகி விட்டது.

"சைலோணில" போய் ஐயர் அழைச்சு கூறைகட்டி, தாலி கட்டி, உங்க கலாச்சாரப்படியே செய்வோம் என்று அவளாகவே சொல்லுமளவுக்கு "ராமனி"டம் மட்டுமல்ல அவனுடைய கலாச்சாரப் பாரம்பரியங்களிலும் கூடப் பற்றாகவே மாறிவிட்டாள்.

தன்னோடு சுற்றித் திரிவதைக் கூடப் பெரிதுப்படுத் தாமல், "பிரான்ஸ்", "கொலன்ட்", "சுவிஸ்", "டென் மார்க்" எல்லாம் அடிக்கடி போவதும்...அங்கே தன் இன மக்களுக்கு அரசியல் வேலை செய்வதாகத் தீவிர உணர் வோடு அவன் சொல்வதும்...

வீட்டிற்கு வரும் வாலிபர்களோடு ஏதோ பேச அவர் களும் மிகக் கவனமாகக் கேட்டிருப்பதும்...

"ராமனை" ஒரு தியாகியாக "டோரிஸ்" மனதில் உருவாக்கி விட்டிருந்தது.

"ராம்"முக்கும் அவனூடாக அவனுடைய சமூகத் துக்கும் உதவ வேண்டுமென முடிவெடுத்த "டோரிஸ்" பல திட்டங்களோடு இலங்கை வந்தவள்.

அந்த இருபது நாட்களிலேயே முக்கிய தேவைகளைத் தமிழில் கேட்குமளவுக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டாள்...

ஆனால்...

அந்தக் கால இடையில் இரண்டொரு தடவை பயணத் திகதி ஒன்றை "ராமன்" அவளுக்கு நினைவூட்டிக் கொண்டே இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய மனமோ இலங்கையையும் ஏழ்மையை யும் பற்றியது. "ராம்" ஜேர்மனி போய் விடுவோம் என்கிறான்.

"தன் மக்களிடம் அக்கறை காட்டுவதான அந்த சொல்லோடு, இந்த செயல் ஒத்துப்போகவில்லையே!

"டோரிஸ்" யோசிக்க ஆரம்பித்தாள்.

இதுவரை ஆராச்சிக்குட்படுத்தாத சில புதிர்களைத் தன் மூளையுள் செலுத்தினாள்...

அகதியாக ஜேர்மனிக்குள் வந்தவன் வசதியாக வாழ்ந்ததும், "கார்" (B.M.W) வைத்திருந்ததும்...

வானமே கூரை என வாழும் ஓட்டைக் குடில்களின் நடுவே இறுமாப்போடு உயர்ந்து நிற்கும் மாடிவீடு...

கொழும்பில் வந்து இறங்கியவுடன் புதிய கார்... தங்கிய விடுதிகள்...

பிஸ்னஸ் ஒன்று ஆரம்பிக்கவென்று பத்து லட்சரூபா இன்னும் இருப்பதாக சொன்ன வார்த்தை...

"வதனி"யையும் "கதிராசி" யையும் சோடித்துள்ள தங்க நகைகள்...

அனைத்துமே ஏதோ ஒரு விடயத்தில் மையப் பட்டன...

"ஜேர்மனி" போகுமுன் ஏதோ மார்க்கமாக அனுப்ப வென்று அவன் கட்டி வைத்த பார்சல் ஒன்றை மெது வாக அவிழ்த்தாள்...

......

அவளால் தன்னையே நம்ப முடியவில்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய முட்டாள் தனத்தை நொந்துகொண்டு... கண்களை இறுக மூடியபோது...

மேற்கு நாடுகள் பூராவும் உள்ள சவக்காலைகள் அத்தனையும் அவள் கண்முன் தோன்றின. ஏறத்தாழ எட்டுக் கிலோ எடையான அந்தப் "பார்சலை" அப்படியே வைத்துவிட்டு...

எட்டே நிமிடம்.

தன்னுடையவைகளுடன் "கட்டு நாய்க்க" புறப்பட்டாள்.

காரணம் தெரியாமல் திகைத்த "ராம்" விமான நிலையம் வந்தபோது...

விலங்கிட்டுப் பொலிஸ் அழைத்துச் சென்றது.

பொலிஸ் சித்திரவதைக் கூண்டில் இவன் தூளாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறான்...

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ச்சி

எம்.ஆர்.வசந்தி

காலை வேளையின் மெல்லிய கோடுகள் மண்ணில் பட்டு அதன் தாக்கத்தை ஏற்படுத்தாத வேளை, மெல்ல நகர்ந்தவை சிவந்த மண்ணில் புதியவைக்கு பிரதி காட்டின. செங்கடலில் நீலத்தாமரைகள் அச்சுழலிற்கே வித்தியாசம் தான்.

வெறுங் கண்களிற்கு தாமரையுமில்லை, கடலுமில்லை, சாம்பல் நிறத்தாலான படைபடையான விரிந்த கோவா இலைகள் மெல்லிய ஒளிக்கீற்றில் முன்னிரவு பனித்துளியில் மின்னியது.

குனிந்து நடந்தவர்கள் வணங்கிய முதுகிற்கு ஒரு கை கொடுத்து சற்றுக் குனிந்து இந்த மண்ணிற்கு இது சேர்த்தியா...? மூக்கில் விரலை வைத்தனர். நேர் நடை கொண்டவை குனிந்த பார்வைக்கு சிரமப்பட்டு புதியவை நம் கையில் என்று மேலும் அண்ணாந்து பார்வை. நாகரீகத்தின் தலைப்பகுதிக்குச் சொந்ததுல்லாத வாற்பகுதியின் நரம்பிழைகள் அல்லாடுமிடம். அரை நிக்கரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுகுமற்ற நிலையில் அரிவரிக்குச் செல்லும் போது மரவள்ளி, குரக்கன், சாமைக்குள் ஓடிப்பிடித்து விளையாடியதிலிருந்து முழக்காற் சட்டை போட்டு காற்றாட சிறு நடை பயிலும் வரை நானும் இந்த அல்லாடும் பகுதி தான்.

பள்ளிப் படிப்பின் போது எமது தாகத்தைத் தணித்த மெல்லிய தென்னைமரங்கள் சூத்திரக் கிணறுகளைச் சுற்றியபடி வாய்கால்களில் ஒரே வரிசையாக தென்னையும்,கமுகுமாய் ஒரே குளிர்ச்சிதான்.நடுத்தறையில் மட்டும் மரவள்ளி, குரக்கன். அவையெல்லாம் தோளுக்கு மேலே இரண்டு முழத்திற்கு கதிரைக் காவி நிற்கும். கை சிறங்கு கதிரைக் கசக்கி வாய்க்குள் போட்டு சப்பியதை வாயில கூட பால்நிறம் தெரியுதெண்டு எனக்கும் அகிலுவிற்கும் போட்டி. பிற்பாடு பிஞ்சுக் கிழங்குகள். உச்சி வெயிலிலிருந்து நிழல் தெரியத் தொடங்க ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரத்திலேறி பல்லில் இரத்தம் வடியமட்டிலும் இளநிக் காம்மை அறுத்தறுத்து மரவள்ளி தோப்பிற்குள், போட்டுட்டு மெல்ல இறங்குவம்.

இந்த இளநியெல்லாம் சும்மா லேசுப்பட்டகனமல்ல. தீவுக் கடகத்தில் இரண்டுதான் கொள்ளும். எங்கடை அன்னபூசை நடக்கிறவரை தோட்டக்காரப் பயல் ஒருத்தனுக்கும் எங்கடை தலைக்கறுப்புத் தெரியாது. பிறகு நாங்கள் கோம்பையெல்லாம் பழங்கிணத்துக்கை போட்டுடுவம், பிறகு மரத்தடியில் புத்தகத்தை வைத்து காற்று வாங்கும் படலம்.

பல்லுவாத்தியும், கொக்கு வாத்தியும் நாலாம் வாய்ப்பாடு கேட்டு தோலுரி வாங்கி, அழுது, மரத்துக்கு காலால் உதைய எங்கட நித்திரை போய்விடும்.

எல்லாற்றை கைத்தழும்புகளையும் ஆள்மாறி, ஆள்மாறிக்காட்டி ஒத்தடம் போட்டு, காற்சட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத்து மண்ணை பள்ளத்து தண்ணியில் கழுவி, சூத்திரத் தடியில் பார்த்துக் கொண்டிருந்த கறுப்பு மாட்டிற்கு அந்தாண்டை கிடந்த ஓட்டைவாளிக்கு பொச்சு அடைஞ்சு தண்ணி வார்துப் போட்டு மெல்ல மெல்ல பொழுது சாய வீட்டுக்குப்போக கணக்காயிருக்கும். அதிலு, முருகு நாங்களெல்லாம் பள்ளிக்குப் போகாட்டி யும் தோட்டத்திற்கு வந்திடுவம்.

வீட்டிலை கேட்டால்; முதலாம் வாத்தியாருக்கு கழுரு நட்டதும், கூட்டல் கணக்குச் செய்ய முட்டுக் காலில் நிண்டதும் வாய்ப்பாடாய் வந்திடும். அப்பெல லாம் எங்க வீட்டு 'விதாளை' (அண்ணை) கொழும்பில் தான் இருப்பு. கொம்பனி வேலைதான். முந்தியெல்லாம் அண்ணனின்கேள்விப் பாடாய் படுத்தும் அம்மாவையெல் லாம் வழியாய் சரிக்கட்டிடலாம். தாழ்வாரத்திற்கு ப் பின்னாலை இரண்டு புறாக்குஞ்சுக் கோழியும், சாவலும் எல்லாவிடமும் திரிந்து கொண்டிருக்கும் இடைக்கிட முட்டையிடும். ஆனாலும் இங்கிலிஸ் மாஸ்ற்றர் ஸ்பெலிங்குக்கு போடுற வட்டமளவு இருக்கும். அவ்வளவும் விஷயம்தான். உள்ளுக்கு சூரிய காந்தி கலரில மஞ்சள் கரு ஒருதட்டு சோத்தை ஃய நெய்சோறாக்கிப் போடும். நெடுகலும் அம்மாவை மஞ்சள் சோறு செய்து தரச் சொல்லி ஆய்கிளைப்படுத்த "நெய்ச்சோறு இப்படித் தாண்டா ராசா" எண்டு சொல்லிச் சொல்லி ஒருதட்டுசோத்தையே தின்னப் பண்ணிப் போகும்.

டவுண் ஆக்களெல்லாம மருந்துத் தேவைக்கு எங்கட ஊருக்குத்தான் முட்டைக்கு வருவினம், அவ்வளவிக்கு பேர் போன இடம் இப்பவும் அந்தச் சொல்லை இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்தும் இவ்வளவு காலமும் காப்பாற்றி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீவுக்கு வந்த இரண்டு தரமும் தென்னந்தோப்பைப் பார்த்தாச்சு. எல்லாம் ஞாபகமில்லாமல் கிடக்குது. சமுத்திரமாய் இருந்த வயல் எல்லாம் சின்னதாய்ப் பிரித்து முள்ளுக் கம்பி அடைத்து அடுத்த காணிக்கு போவதற்கு வழிவாய்க்கால் தாண்டிப்போய் முள்ளுக் கம்பி 'டெனிஸ் சூசைப்' பிய்ச்சு போட்டுது. அப்பயெல் லாம் 'பாட்டா' போட்டு நடக்கேக்கை தோட்டக்கார னின் திட்டு.

கோவாவும் சோயா அவரையும் எல்லாவிடமும் நட்டுகிடக்குது. தென்னை வேரோடு பிடுங்கிக் கிடக்குது. தேங்காய்ப்பால் கொழும்பாயும், பாக்கு சுகாதாரத்திற்கு கந்தற்றதாயும், மரவள்ளி பழங்காலத்தாயும்; குரக்கன், சாமை அறுவடைக்கு ஆக்களின்றியும் இருந்தது எல்லாத்திற்கும் உயர்ந்த விளக்கத்திற்கிடமாய்இருந்தது. எங்கள் கிராமம். பெரிய இடத்துப் பொம்பிளைகளைக் கூட பிந்நேரத்தில் கூடையுடன் காணலாம். தெருவில் கழிவாயிருந்த கோவா, கரற் இலைகள் கூடையை நிறைக்கும். (பிரப்பன் கூடை)

அம்மனி சொன்னாவ கொழும்புக்கு போகக்கிடை யில ஊர்முட்டை வாங்கி பலகாரம் செய்ய வேண்டு மென்று. முந்தி எங்கடை வீட்டு பசுமாட்டிற்கு புல்லு கொண்டு வாற அழகரிட்டை கேட்டன்.

"என்ரை வீட்டுக் கோழியெல்லாம் போன அடை மழையோடு செத்துப் போச்சுது, பேரன் ஒருத்தன் பண்ணை வைச்சிருக்கிறான். தம்பி விரும்பினால் எவ்வ ளவும் வாங்கலாம். ஆனால் அடைச்சு வளர்க்கிறது அவ் வளவு திறமாயிராது."

"அண்ணி சொன்னவ நாட்டு முட்டைதான் வேணு மெண்டு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பொருத்தரும் அப்படி வளர்க்கிறேல்லை அப்படி வளர்த்தாலும் செத்துப்போகுது இந்த காங்கை வெயில்ல. வீடு வீடாய் இருபத்தைஞ்சுக்கு மேற்பட்டதாய் வளர்ப்பு கைத்தினி போட்டுத்தான்· நல்ல வரும்படி வீட்டோடை பிழைப்பு. ஏன் தம்பி இவ்வளவு கோவா இலையையும் அள்ளிக் கொண்டு போயினம் சொல்லும் பார்ப்பம்? இதை சின்னனாய் அரிஞ்சரிஞ்சு போட்டால் 'கரு' சிவப்பாய் வரும் பண்ணை முட்டையை ஊர் முட்டை எண்டு சொல்லி விக்கிறது. டவுண்ல காரில எல்லாம் வந்து ஊர்முட்டை, ஊர்முட்டை எண்டு வாங்குவினம். கனக்க இலை போட்டாலும் சளி பிடிக்கும். அதற்கும் ஒரு மருந்து இருக்குது. நான் என்னத்துக்கு இதுகளையெல்லாம் சொல்லிக் கொண்டு போறனெண்டால் பண்ணை முட்டை வாய்க்கிதமாய் இராது. முந்தியெல்லாம் சூரக்கனாலை வளர்ந்த உடம்பு தம்பி. இப்ப இதுகளை யார் கவனிக்கினம்! ஒரு விசயம் சொல்லுவன் கோவா யிலையை வறுத்துச் சாப்பிட்டால் நல்ல சத்துத்தான்"

"தம்பி உங்மடை குடும்பத்தோட பழகின தோசத்திற்காக சொல்லுறன். வெளியில மூச்சு விடப்படாது. எங்களுக்கேனன் மற்றவையின்ற அலுவல். ஏதோ பிழைச்சுக் கொள்ளட்டும். இஞ்ச வாற எல்லோரும் கோழி வளர்ப்பில்லை. சமையல் தேவைக்கும் அழுகின கோவா இலையிலை கொஞ்சமாய் தவர்த்தி எடுத்துக் கொள்வினம். ஆனால் வளர்பு எண்டு சொல்லுறது நாகரீகமாய்ப் போச்சுது"

இவ்வளவு நேரமாயும் இன்னும் ஆறுமணியாகவில்லை. அம்மா இறந்தும் பத்து வருசமாகி விட்டுது. இப்ப அண்ணரும், அண்ணியும் மகன் தினேஷ்சும் தான் எல்லாம் வழமையான விடுமுறைக்கு 'அகிலுவும்' வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். மறுநாளே திரும்ப வேண்டுமாம். அவனை மீண்டும் லீவு முடியும் வரை நிற்கச் சொல்வது எதுவித முக்கியத்துவமற்றதாய்ப் படுகிறது. இந்த இருபது வருட வாழ்வும் ஏதோ அர்த்தத்தை தேடுகிறது.

அண்ணனும் தினேஷின் மீது கண்டிப்பு இல்லை. அவனுக்கு வீடு, பாடசாலை என்றாகி விட்டது. அழகாய்ப் பூத்து நிற்கின்ற பேர் தெரியா பூக்களைசிறகுகளை வெட்டி 'வெளிகளக்' கொப்பியில் ஒட்டுவதற்கு நானும் உதவுகிறேன்.

எங்களை போல சில அரைக் காற்சட்டைகள் ஆனால் ஏறுவதற்கு உயரம்குறைவான தென்னைகளும், பிடுங்கிய இளநிகளை மறைப்பதற்கும், விளையாடுவதற்கும் ஒரு அடியிலும் குறைவான கோவா, பீற்றூட்டும் அவற்றை மறைக்க சக்தியற்றுக் கிடந்தது.

இந்த தடவை லீவிற்கு வந்தபோது புதியதாக அடித்த பெயினிற் ஒரே காங்கையாயிருக்கிறது. வெளியில் முத்திரிகைப் பந்தல் ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது. காற்றுக்கும் அசைவதாயில்லை. நான் பார்க்கும் காலங்களில் ஒலிந்த கோடாய் வளைந்து கிடக்கும். இலைகள் கிடையாது. நிழல் தேடி அடுத்த போகம் வரை நீண்ட காத்திருப்பு.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாத வேட்டுக்கள்

### சாரணியன்

"நாற்சாரப் பந்தலில
நல்ல மணமேடையில
மாமன் மகள் வீட்டு
மஞ்சளுக்குப் போகாமல்
என் ராசாவே......
இராவணரே
நீர் போன இடமறியேன்
ஐயோ...என் ராசாவே
நீர் போய் புகுந்த
காடறியேன் "

—குரலெழுப்பிக் கதறிக் கொண்டிருந்தாள் அன்னம் கைகளைத் தோளிற் போட்டு, அவளைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைப்பதற்கு ஒரு சிறு கும்பல்.

ஓய்ந்து போன இந்தக்கும்பல் தோள்களிலிருந்து நழுவி விழும், கைகளில் இருந்து விடுபட்ட அன்னம்,

"என்...ராசாவே!" என்று இறங்கு தொனியில் இழுத்தபடி...மூக்கு நீரை முந்தானைத் தலைப்பால்

தேற்றி விடுகிறாள். மேலெழுந்து தணியும் அவளுடைய மார்பு ஒரு வெப்பச் சூறாவளி ஒன்றை வீசிவிட்டுப் போகிறது...

சுமார் மூன்றுமணி நேரமாகக் கேட்டுக் கொண்டிருந்த இந்த அழுகைச் சத்தத்துடன் அயலவர் கூடி விட்டனர்.

"மணியம்...

அட பாவி...

இப்பிடிப் போக எப்பிடியடா மனம் வந்துது?... ஒரு பிள்ளை ஒரு பிள்ளை எண்டு ஊட்டி வளத்தாளடா... ஒருத்தருக்கும் சொல்லாம...

ஐயோ, அடி என் ஆசைப் பிறப்பே உன்ன எப்பிடியடி தேத்துவன்?"

சிந்தாமணிக் கிழவியின் ஒப்பாரிக்குச் சேதுப்பிள்ளை ஆச்சியும் சேர்ந்து பாடுகிறாள்.

"ஐயோ! ஒரு நோயை நொடிய வந்து படுத்தியா? ஒரு வானைக் காரை அடிச்சுதா?...

இப்பிடிக் கல்லு மலை மாதிரி இருந்தியேடா!... பாவியள் உன்னத் திண்டிட்டாங்களே!

அவங்க நல்லா இருப்பாகங்களா? நாசமாப் போனவங்க குடும்பம் தான் உய்யுமா?"

என்று திட்டித் தீர்த்துக்கொண்டு...

ஓய்வுக்கு வந்தவளான சேதுப்பிள்ளை

சேலைத்தலைப்பால் கண்ணையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு...கொண்டையிலிருந்த 'கேயர்' பின்னை வாயில் பிடித்தபடி கைகள் தலையைக் கோதிக் கொண்டிருக்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் சொல்லித்தானாமே நடந்ததாம்"

மென்மையான குரலில் அன்னத்தின் காதில் சேதுப் பிள்ளை போடும் அந்தச் சொற் கோவை ஒரு புறம் சோகத்தையும் மதிக்கும் விடுப்பு.

"ஆரு திண்டதோ நானறியேன்..."

உரத்த தொனியில் அன்னம் அலறியதும்... அவளுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

நாலாபுறமும் பார்த்துவிட்டுப் பேசாமலே இருந்து விட்டாள்.

உக்கிரமான அழுகை ஓய்வுக்கு வந்தவுடன்...

"எல்லாம் இந்தப் பாழாய்ப் போன பெண்டுகளால வர்றது அவளுக்குத்தான் என்ன யோசனை... அவனுடைய குலம் என்ன? கோத்திரம் என்ன ..உது நடக்காது எண்டு தெரிஞ்சும்...என்ன யோசனையில இவளவ பாய் விரிக்கிறதோ தெரியல்ல"

—இந்தத் தலையங்கத்தில் ஒரு குழுவினர்;

"அவள் ஏனணை சொல்லப் போறாள்? அவன் மாட்ட னெண்டு மறுத்துப் போட்டு எங்கயாலும் கட்டினவனே?"

—இந்தத் தலைப்பில் இன்னொரு குழு...

"சாதி என்னடி சாதி இந்தக் காலத்தில இதுகளெல்லாம் பாத்தா மதிக்கவும் மாட்டாங்க அதிருக்க.. அவளென்ன இளக்கமே... உவன் ஐயன் அவங்கட...பகுதியெல் லேனே அவளின்ர தேப்பன்."

இந்தத் தலைப்பில் இன்னுமொரு குழு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாயிட்ட அழுது தகப்பனிட்டக் காசு வாங்கிப் பள்ளிக்குடத்துக்கு மாதக் காசு கட்டினதே தவிர அந்தக் காசு எப்பிடி வந்தது. அப்பனின்ர கஷ்ட-நஷ்டம் என்ன எண்டு எதுவுமே தெரியாமல்...அப்பிடியே பள்ளிக் கூடத்தில் இருந்தாப்போல இயக்கங்களுக்குப் போன பொடியள்...உதுகள்

இப்ப குடும்பப் பிரச்சனைகள் தீர்க்கிற நீதிவான்களா வெளிக்கிட்டால்...?

ஓமோம் நமக்கென்னத்துக்கு இந்த வம்பெல்லாம்... செல்லத்துரை வாத்தியாரின் தொகுப்புரைக்குப் பின்னே ஒரு வெள்ளைவேட்டிக் குழு...

கிடுகுக் 'கேட்டின்'களின் பின்னால் தம்மைத் தெரியாமல் தாம் தெரிந்து கொள்ள இருக்கும் பசுந்தளிர்ப் பாவையர்கள்...

இந்தக் கொடிகளில் ஒன்றிரண்டு "ரஜனி"யின் பள்ளித் தோழிகள்.

"பாவம்டி...ரஜனியால இதைத் தாங்கவே முடியாதடி...இப்ப...ஊரில தெரியாத சனத்துக்கும் தெரிஞ்சுபோச்சு...அவளின்ர வாழ்க்கை இனி...?"

இப்படிச் சமவயதுப் புஸ்பங்கள் அவளுக்காக வாடின

திடீர் என ஒரு மயான அமைதி......

மரண வீட்டில் என்றுமே ஏற்பட முடியாத இந்தப் புதுமை...

எல்லோருடைய பார்வையும் வழியை விழுங்கி நின்றது.

பலரிடம் வியப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரிடம் மட்டும் வெறுப்பு!

யாரால் இது ஏற்பட்டது என்று இதுவரை தூற்றிக் கொண்டிருந்தார்களோ...அதே "ரஜனி"!

ஆம்...

அவளே தான்!

வேலிக் கொடிகளின் தலைகளும் மேலே வளர்ந்தன...

விசனக் காரரும் உஷார் நிலை அடைந்தனர்.

சோகத்தால் சுருண்டு போன உடல்! என்ன ஆகுமோ என அஞ்சும் முகம்! படி ஏற ஏவாத கால்கள், மடி மீது சுமை......

இவைகளோடு...ஒரு ரோஜா நாற்று அனல்மீது நடக்கிறது.

தாம் ஆராய்ந்து கொண்டிருந்த தலையங்கங்களை மறந்துவிட்டதாக எண்ணிய குழுக்கள்...

மீண்டும் குசு குசுத்தன.

ஆக்குரோசத்துடன் சிந்தாமணிக் கிழவிதான் எழுந்தாள்!

கண்ட கண்ட நாயை எல்லாம் ஆரடி இழவு வீட்டுக்கு வரச்சொன்னது? எடடி விளக்குமாத்தை ..மலையான மலையை முந்தானைக் கை மூடித் திண்டு போட்டு இன்னும் மிச்சம் இருக்கெண்டு வந்தவளாக்கும். இடத்தக் குடுத்தா மடத்தைப் பிடிக்கிற கீழ்சாதியள் தூ...வெக்கங் கெட்டதுகள்......

"சிந்தாமணி"க் கிழவியின் சீறல்...அன்னத்தைச் சீண்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமாட்டுப் பெட்டியில் சாய்த்திருந்த தன் தலையை 'விறுக்' என உயர்த்தினாள்.

அவளுடைய உதடுகளும் துடித்தன.

ஏதோ பேச வாயெடுத்தாள்;

"ரஜனி"யின் ஈர விழிகள்... அவை செலுத்தும் அநாதரவான பார்வை...இதோ என்னைத் தாங்கு என முன்னே தள்ளிக்கொண்டிருக்கும்...வராத வாரிசு...அலங்காரம் கலைந்து நின்ற அவள் கோலம்...

அன்னம் பேச்சிழந்து மௌனமானாள்.

அவள் மௌனமானாலென்ன... ஊர் மௌனமானதா?

"என்னவோ செல்லச் சன்னதியானைச் சாட்சி வைச்சு தாலி கட்டினவ...செலவு குடுக்கவும் இழவு குடுக்கவும் வந்திடாவாக்கும்!...

துக்கம் காக்கிறாளாம் துக்கம்...இங்க ஒரு ஆம்பிளையளும் இல்லையே இந்தப் பவிசுக்காறியப் பிடிச்சு வெளியில விட" என...

போர்க் கோழியின் சிலிர்ப்போடு சிந்தாமணிக் கிழவி...

ஓய்ந்துவிட்ட அழுகையோடு ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்த "அன்னம்" கைகளினால் தலையைக் கோதிப் பின்புறமாக இழுத்து ஒரு சுற்றுச் சுற்றிச் செருகியபடி... முந்தானைத் தலைப்பைத் தேடினாள்.

அவனது கண்கள் ரஜனியைக் கூர்ந்து பார்த்தன.

பார்வையில் போர்க் கோலம் தொனித்தது.

......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜனியைக் கூறு கூறாகக் கிழிக்கப் போகிறாள்... இலவசமாக ஒரு சினிமா பார்க்கும் மனோ நிலையை வரவழைத்துக் கொண்டு...

பரிமாறப் போகும் சூடான வார்த்தைகளுக்கென செவியைக் கூர்மையாக்கிக் கொண்டனர் எல்லோரும்...

அன்னத்தின் வார்த்தைகளுக்காக "ரஜனி" மயக்கம் போட்டு விழுந்து விடுவாளோ என்று கூட எதிர்பார்த்தது ஒரு கூட்டம்.

"நீங்க எல்லோரும்...என் புள்ளியிலையும் என்னிலையும் வச்சிருந்த அன்புக்கும் உறவுக்கும்... இப்ப என்ன சொல்றதெண்டே தெரியல்ல...

குத்துக் கல்லுமாதிரி இருந்த என் புள்ளையை குடுத்திட்டுத் தனிமரமா நிக்கிறது உங்களாலதான்... நீங்க ஒருத்தருமே என்ர கண்ணில முளிக்காதயுங்க...

நீங்க தான் என்ர பிள்ளையைத் திண்டது... அவளில்ல..."

......

அன்னம் வார்த்தைகளை முடிக்குமுன்னரே...கிராமத்தின் பெரியவர்...

"அன்னம் நீ என்ன சொல்றதெண்டு தெரிஞ்சுதான் சொல்றியா?... உன் மூளை குழம்பிக் கிளம்பிப் போச்சுதா?"

வியப்பு நிறைந்திருந்தது அவர் முகத்தில்.

"அப்பிடி ஒண்டுமே எனக்கு ஆகயில்ல... நீங்க எல்லாம் துக்கம் விசாரிக்க வந்தவங்க அந்த மட்டோட நில்லுங்க...அந்தப் புள்ள வந்தது பிடிக்காதவங்க... வெளியில போயிடுங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ வெளியில..."

..........

"நானாகச் சொன்னனெண்டால் நாடு என்னைத் தூத்துமெண்டு கூட்டிப் போய் எங்காலும் குடும்பம் நடத்தெண்டு சொல்ல நினைச்சிருந்தேன் சொல்ல இல்ல பாவியடா! என் ராசாவே .."

—மார்பிலும் தொடைகளிலும் அடித்துக்கொண்ட அன்னம்.

புதியதோர் உலகில் நுழைந்தவளாகத்... தன் மருமகளையும் அணைத்துக் கொண்டு முன்னே இருந்த சனக் கூட்டத்தை விழித்தபடி...

"கொலைகார ஊரவரும் கொள்கை இல்லாப் பொடியளுமாய்... என் ராசாவைத்திண்டியளே"...

என்ர ஐயா!

நீ வாஞ்சையில சேர்த்தவள்...

வாய் வயிறாய் விட்டதென்ன ..

நீ சாய்ந்து மண்ணில் வீழ்ந்ததுக்கு சம்மதமோ சொல்லனடா?"

......

ஊரவர் யாருமே போகவில்லை.

பெரியவரை மட்டும் காணவில்லை ..

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரம் பற்றிய கடிதத்தில்

அ. கருணாநிதி

வனிதா குசினிக்குள் நின்று கொண்டே படலையையும் படலைக்கு இடதுபக்கம் கிடுகுவேலியின் கறையான் தின்ற துவாரங்களினூடாகவும் தபாற்காரரின் வரவை நோட்டமிட்டுக் கொண்டேயிருந்தாள். மனம் ஏதோ ஒரு ஏக்கத்தில் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தது. வாடிக்கை மீன் வரும் என்று எதிர்பார்த்திருந்துவிட்டு சுணங்கித்தான் சமைக்கத்தொடங்கினாள். தோட்டத்திலிருந்து மத்தியானச் சாப்பாட்டிற்காக வரப்போகும் தகப்பனுக்காக அவசரமாகவே இயங்கிக் கொண்டிருந்தாள். 'மீன் என்று சொன்னால் ஒரு குழம்பும் கறியும் காணும் இண்டைக்கு நாலு கறி வைக்க வேண்டியிருக்கு' வாய்பொருமிக் கொண்டே இதற்குக் காரணமாயிருந்த கடற்படையைத் திட்டினாள்.

கிடுகுவேலிக்கு மேலால் ஆள் நடந்து வருவதுபோல தொப்பி தெரிந்தது. வேலியோரத்தில் நின்ற தென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து பழுத்ததேங்காய் ஒன்று வேலியில் விழுந்து சறுக்கி வளவுக்குள் விழுந்தது. தொப்பியைக்காணவும் அதே நேரம் தேங்காய் விழுந்த சத்தம் கேட்கவும் வனிதா ஒருகணம் திடுக்கிட்டாள். பயந்தாள், பதட்டப்பட்டாள். 'அம்மாவும் இல்ல ஆமிக்காரன் வாறான் போல இருக்கு' மறுநிமிடம் தபாற்காரரின் மணிச் சத்தம் கேட்டது. இராணுவமுகாமிலிருந்து விடுதலை பெற்றவளாக படலையை நோககி விரைந்தாள். தாக்கத்தினின்றும் மீளாமல் வியர்வையோடு விறுவிறுத்துக் கொண்டேயிருந்தது. இப்படியே போனால் பியோன் என்ன நினைப்பாரோ என்று படலையை அண்மித்ததும் மூர்ச்சை இழுத்துவிட்டு ஆசுவாசப்படுத்தி சுதாகரித்துக் கொண்டு ஒரு புன்னகையையும் வரவழைத்துக் கொண்டு படலையைத் திறந்து கொண்டே 'நீங்கள் ஒருநாளும் தொப்பியோட வாறதில்ல இண்டைக்குத் தொப்பியோட வர பயந்திட்டன்.' 'ஓ...இண்டைக்கு மழை தூறுது அதுதான்.'

கடிதத்தை நீட்டிக் கொண்டே 'பெரியண்ணன் போட்டிருக்கு போல இருக்கு முந்தி வ்பிறம் இல யேர்மன் அட்றஸ் இருக்கும் இப்ப சுவிஸ் அட்றஸ் இருக்கு இப்ப சுவிஸ் இலயே நிற்கிறார். 'ஓ அவர் யூறோப் முழுக்க புவியியல் ஆராய்ச்சி செய்கிறார்'.........

மேலே கதைக்கமுடியாத மாதிரி பதில் சொல்லிவிட்டாள் என்று நினைத்துக் கொண்டே 'நம்ம இனத்திற்கு பெருமைதான்.' என்று சொல்லிக்கொண்டே சைக்கிளை உருட்டினார்.

என்வலப்பில போட்டிருந்தால் விரைவாக உடைக்கிலாம். ஏறோ கிராம் இல்ப்போட்டதனால் அவள் உடைக்க எடுத்த பிரயத்தனம் தோல்வியுறவே குசினிக்குள்போய் கத்தியை எடுத்துப்பவ்வியமாகப் பிரித்துப் படித்தாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகள், சந்திப்புகள் ஐந்து வருடங்களாக நடந்து கொண்டேயிருக்கின்றன. இன்னும் வீட்டில் அணுவளவேனும் மாற்றமோ முன்னேற்றமோ இல்லை. வனிதாவின் மூத்த தமையன் ஆறுவருடங்களுக்கு முன் யேர்மனுக்கு வந்தவன், அடுத்த தமையன் கொழும்பில் கடையில் நிற்கிறான். அவள் தங்கை மைதிலி ஏ. எல். படிக்கிறாள். ஊராள்வோன் வாழ்வில் கிடையாத இன்பத்தை ஆளும் ஏராளும் குடும்பத்தவள்.

யேர்மனுக்கு வந்தவன் குறுணி சேர்த்து கம்பலுக்கனுப்புவது போல கொஞ்சம் கொஞ்சம் அனுப்பிக் கொண்டிருந்தான். பரிஸ், கொலண்ட, சுவிஸ் என்று குரங்கு மனமாக அங்கலாய்ப்போடு அலைந்து கொண்டேயிருந்தான். ஒரு நாட்டிலாவது ஸ்திரமாக வாழும் உறுதியற்ற மனதோடு ஐரோப்பாவை அளந்து கொண்டிருந்தான்.

வனிதாவிற்கு ஐந்து வருடங்களாக கலியாணப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. வனிதாவிற்கு நல்ல இடத்தில சம்மந்தம் செய்த பின் தான் தாங்கள் கலியாணம் செய்வதாக தமையன் மார் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றனர். திருமணம் இழுபடுவதற்குக் காரணம் சீதனம் சூழல்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்களின் மனங்களையும் அதன் நிறங்களையும் நடுவர்கள் இராஜதந்திரிகள், தரகர்கள், தூதுவர்கள் அவர்களின் மனோ நிலைகளையும் மனப்பான்மைகளையும் கிரகிக்கும்போது சமுதாயத்தின் கையாலாகாத் தனத்தையும் சுயகௌரவங்களையும், போலிகளையும் கியூவில் நிறுத்திப் பார்க்கும் போது சமுதாயத்தையே கடித்து சப்பித்துப்ப வேண்டும் போல் ஆவேசம் வரும். இந்த ஆவேசம் வனிதாவிற்கு மட்டுமல்ல எல்லா வனிதையருக்கும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி மகன இண்டைக்கும் கரண்ட் வரயில்லையா...?" நாட்டையும் ஆட்சியையும் வைதுக் கொண்டே தாய் குசினிக்குள் பிரவசிக்க, "அம்மா...ஐயா வரேக்க மண்வெட்டியையும் முள்ளு மண்வெட்டியையும் ஆமிக்காரன்கள் பறிச்சுப் போட்டு விட்டுட்டாங்களாம்" என்றாள் மகள்.

"போக்கறுந்து போவாங்களுக்கு ஏனாம் தோட்டம் செய்யப் போறாங்களாமா? இப்பஎங்க போயிட்டார்..."-

"கிணத்தடியில நிக்கிறார்."

"அப்பயப்பா நீங்கள் அவங்களின் ரதுவக்கவாங்கியின்ரு வந்தீங்களில்ல நல்லவேளை ஒண்டும் செய்யமால் விட்டுட்டாங்கள்"

பாக்கியம் கணவனை ஆசுவாசப்படுத்தினாள்.

"அண்ணன்ர கடிதம் கிடிதம் ஏதாவது வந்ததா பாக்கியம்" என்று ஆவலோடு கேட்க வனிதா கடிதத்தில்க் குறிப்பிட்ட அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்த பதிலை முகபாவனையில் வெளிப்படுத்தி "ம்...அந்தா வந்து கிடக்கு அப்பிடி ஒண்டும் எழுத இல்லை தான் இன்னும் கதைக்க இல்லையாம் கதைச்சுப் போட்டு அடுத்தகடிதத்தில் விபரம் எழுதுறதாம்" என்றாள்.

★ ★ ★

பொடியனுக்கு நல்ல விருப்பம் தாய் தகப்பனுக்கு விருப்பமில்லாமல் இருக்கு பொடியன் கொழும்பில கூட்டிக் கொண்டுபோய் வைச்சிருக்கிறதெண்டு சொல்லுது. அவையும் டாம்பீகம் இல்லாத ஆக்கள் பொம்பளையின்ர பின்னணி எல்லாம் பறுவாயில்ல நல்லாயிருக்கினம் எண்டு சொன்னான்."

முதலாவது அத்தியாயத்தில் தரகர் பாலசிங்கத்தார். கையளித்த மகஜர். இதைப் பெண்வீட்டார் ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டும் ஆடி ஆவணி மாதங்களில் தண்ணீர்ப்பஞ்சம் ஆகையினால் வீட்டிலிருந்து இரண்டுகிலோ மீட்டர் தூரத்துக்கு வயல்க்காணியை நிரப்பி அதில் வீடுகட்டித் தரும்படி மாப்பிள்ளையின் தாய்தகப்பன் கோரிக்கையை முன்வைத்தனர். இது முடியாத காரியமென்று பெண் வீட்டார் சொல்லவே இதன் காரணமாக இச்சம்பந்தம் தடைப்பட்டது.

வனிதாவிடத்திலும் அவள் குடும்பத்தினரிடத்திலும் அழகு, அறிவு, பண்பு, பாரம்பரியம், பழக்கவழக்கம், ஆளுமை, அந்தஸ்த்து, எல்லாம் இரவல் கொடுக்கக்கூடிய அளவிற்கு அதிகமாகவேயிருக்கின்றது; இருந்தும் ஒவ்வொரு ஒவ்வொரு காரணங்களுக்காக பேசிவரும் சம்மந்தங்கள் தடைப்படுகின்றன.

மோசமான சமூகத்திடமிருந்து வனிதாவிற்கு விமோசனம் கிடைக்குமா...? வனிதா போன்ற ஆயிரம் வனிதையருக்கு கிடைக்க வேண்டும்.

ரவுணில இருந்து ஒரு சம்மந்தம் இரண்டாவது அத்தி யாயமானது. மாப்பிள்ளை அரசாங்கஊழியர். தொலைத் தொடர்பு திணைக்களத்தில்ப் பணிபுரிகிறார். இந்தச் சம்மந்தம் சரிவரும் பட்சத்தில் அயலவர்களினதும் அக்கறையுள்ளவர்களினதும் அபிப்பிராயம் பேச்சு வார்த்தையில் நெருடல்களை ஏற்படுத்தி அதுவும் தவறிப் போகும் நிலையில்...

இரு பகுதியினருக்கும் மிகுந்த விருப்பம் இனசனம் அயல் அட்டம் முரண்பட்டது.

"ரவுனில இருக்கிற உத்தியோக மாப்பிளை இந்தக் காய்ஞ்ச ஊருக்கு வாறதெண்டால் யோசிக்க வேண்டிய விஷயமாத்தானிருக்கு... பொடியன் என்ன மாதிரியோ தெரியா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பழக்கவழக்கம் என்ன மாதிரியோ..."

"இல்லயெண்டால் ரவுணில பொம்பிள கிடையாம இந்த நாட்டுப்புறத்திற்கு வருகுதுகளா...?" விபரித்தனர், விசாரித்தனர்.

வெறும்வாய்க்கு சுவிங்கத்தைப் போட்டு மெல்லுவது போல் சனங்கள் வாய்க்குவந்த மாதிரி...சொல்லுவார் புத்திகேட்டு இந்தச் சம்மந்தத்திற்கு பெண்வீட்டார் மறுப்புத் தெரிவித்தனர். ரவுண் மாப்பிள்ளை கிராமத்திற்கு வருவதற்குக் காரணம் பாதுகாப்புக் கருதியோ இன்றி மனிதநேயங் கொண்டோ அல்லது புரட்சிகரமான முற்போக்குச் சிந்தனையோடோ, வழிகாட்டுதலோடோ, மாப்பிள்ளையின் உள்ளக்கிடக்கையை யாரறிவார். ஆனால் சனம் வாய்க்கு வந்த மாதிரி ...

சந்தையில பொருட்களின் விலை கூடவென்றாலும் காரணம் கேட்டுக் குழப்புங்கள். விலை குறைந்தாலும் காரணம் கேட்டுக் குழப்புங்கள். காரணிகளை புரிய முடியாதவைகளுக்கு விளக்கம் சொல்லப் போனால் குழப்பங்களும் விவாதங்களும் விதண்டாவாதங்களும், தர்க்கங்களும் முற்றி கடைசியில்க் காரியத்தையே கெடுத்துவிடும். குழப்பங்களுக்கு விளக்கங்கள் தேவை தான். அதற்காக கருங்கல்லில் ஆணி அடிக்கமுடியுமா? வெய்யிலுக்கு மைபூசமுடியுமா?

மூன்றாவது அத்தியாயமாக வெளியூரிலிருந்து ஒரு சம்மந்தம் பேசிவந்தது எல்லோருக்கும் பிடித்துவிட்டது. மாப்பிள்ளையின் பெற்றோர் ரவுணில வீடுவளவும் காசாக இரண்டு இலட்சம் ரூபாயும் கேட்டிருந்தனர். முக்கனிகளுடனே தென்னையும், சோலையாக மிளிர்கின்ற இந்தப் பெரிய கல்வீடும் வளவும் பிடிக்காமல் ரவுணில் வீடுகேட்டியிருந்தனர். அல்லது அதற்குச் சமமான ரொக்கம் தருமாறும் கேட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொழும்பில நிக்கிறவன் என்னத்த வெட்டியள்ளு றான் அவன ஊரில வைச்சிருக்கப் பயமாக்கிடக்குதெண்டு கொழும்புக்கு அனுப்பிக்கிடக்கு அவன் பெரியவன் குருவி குறுணி சேத்தமாதிரி அனுப்புறத்தால இது நடக்கக்கூடிய காரியமா...? ஒருவன் உழைப்பும் உழைப்போ ஒரு மாட்டுப்பாலும் பாலோ எண்ட மாதிரி " பாக்கியம் அன்று நச்சரிக்க ..மைதிலி "வெளிநாடெண்டால் சில பேர் வெட்டி அள்ளுறாங்கள்தான் அதுக்காக எல்லாரை யும் ஒரே மாதிரி நினைக்கிறதா அங்க உள்ள போய்ஸ் எல்லாம் கலியாணம் கலியாணம் எண்டு நிற்குதுகளாம் எல்லாத்தையும் எக்ஸ்போட் செய்துபோட்டு இங்க உள்ளதுகளுக்கு விலையைக்கூட்டி விற்கிறாங்கள் பதுக்கல் யாபாரம் மாதிரி..." ஆக்ரோசமாக அர்த்த மான வார்த்தைகளால் அளவாக அளந்தாள்.

★ ★ ★

குண்டுமழை பொழிவதற்கு முன் பீரங்கிகளின் இடி முழக்கம், மின்னல், தூரத்தே எரிகின்ற வீடுகளின் புகை வானத்தை இருட்டாக்கிக் கொண்டிருந்தது. சனங்க ளெல்லாம் பதறியடித்துக் கொண்டு அங்கலாய்ப்போடு ஓடினர். வடக்கேயுள்ளவர்கள் தெற்கேயும் தெற்கேயுள்ள வர்கள் வடக்கேயுமாக சிதறி ஓடினர். மூன்று மாதகங் களுக்கு முன் இப்படியொரு சம்பவம் நடந்ததால் சனங்களுக்கு இது இரண்டாவது பாடம்.

பள்ளிக்கூடங்களையும் கோவில்களையும் நோக்கி ஓடும்படி சிலரின் வழிநடத்தலுடன் சனங்கள் ஓடிக் கொண்டிருந்தனர்.

தீவிரவாதிகளைத் தேடி சுற்றி வளைப்பு தற்பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் மிருகத்தனமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக்கொண்டே வந்தனர். அந்த வேட்டுகளுக்குப் பலர் பலியாகிக் கொண்டிருந்தனர். அரை குறை உயிர் களோடும் காயங்களோடும் தவழ்ந்தும், உருண்டும், தத்தியும், சந்துகள், பொந்துகள், மறைவிடங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். நகரம் தீயவர்களின் தீக்குதீனியாகியது. கோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் பலர் தஞ்சமடைந்தனர்.

நிலமை மறுநாள் நீருள் அமிழ்த்திய பந்தாக வழமைக்குத் திரும்பியது. சிலர் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். சில வீடுகள் எரிந்து சாம்பர் மேடாயிருந்தன. பலவீடுகள் தகர்ந்து நகர்ந்து கிடந்தன வீடு வாசல்களை இழந்தவர்கள் ஓரளவு கெடுபிடிகள் குறைந்த வெளியூர்களிலுள்ள உறவினர்கள் வீடுகளுக்கு சென்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன் தன் மகனுக்கு சம்மந்தம் பேசிப்போன கிராமத்துப் பாக்கியம் வீட்டை வெளியூர் அறிமுகத்தில் ஞாபகம் வைத்திருந்த ஆறுமுகத்தாரின் மனைவி வசந்தமண்டப வாசலடியில் நின்று "எல்லாச்சனமும் தங்க தங்க சொந்தக்காரர் வீட்ட போதுகுகளப்பா நாம ஆருட்டபோறது எங்கபோறது"... என்றாள்.

"அதுதான் நானும் யோசிக்கிறேன்......இஞ்ச எத்தின நாளைக்கு இருக்கிறது வெக்கமாக்கிடக்கு..."

"பொடியனுக்கு சம்மந்தம் பேசிப் போன அறிமுகத்தை வைச்சாவது வேலணைக்குப் போவமா? ஒரு கொஞ்ச நாளைக்குப் போயிருக்கிறதுதான..."

"அப்ப ரவுணில வீடுவாங்கித் தரச் சொன்னனாமா இப்ப எந்த முகத்தோட போய் அவையிட்ட தஞ்சமடையிறது...?" ஆறுமுகத்தார், மனைவி மீது எரிந்து விழுந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த மரியாதை கௌரவம் இதுகள ஓரளவுக்கு விட்டுக் குடுத்தால்தானப்பா இந்தக் காலத்திலே வாழலாம்."

"ஆபத்துக்கு பாவமில்லை வெட்கமில்லை மனைவி சொன்ன மாதிரியே மகள்மார் இருவரையும் கூட்டிக் கொண்டு வேலணைக்குப் போனார்.

இரண்டு வருடங்களுக்கு முன் விருந்தாளிகளாக வர வேற்று உபசரித்தவர்கள் அகதிகளாக அண்டி ஒதுங்க இடங்கொடுத்து அனுசரித்தனர்.

பாக்கியம் வீட்டில் மைதிலி "என்ன மச்சாள்" சொறி...என்னக்கா ரவுணில சரியான பிரச்சினையே உங்க வீட்டிற்கும் செல்விழந்ததே..." என்றாள் கேலியான தோரணையில். அவள் கேள்விகளில் தொங்கி நிற்பது கேலி தான் என்று தெரிந்தும் முகத்தாரின் மகள் அணிந்திருந்த வெட்கத்தையும் வேதனையையும் விலக்கிவிட்டு பதில் சொல்லித் தானாக வேண்டுமென்பதற்காக யதார்த்த மாகப் பதில் சொன்னாள்.

"அண்ணனுக்குச் சம்மந்தம் செய்திருந்தால் அண்ணன் வீடு என்ற உரிமையோட இருக்கலாம் என்னக்கா."

"ஓமடி ஓ...பேசாமல் இரு தமக்கை அதட்டினாள். மகள் மாரின் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த முகத்தார் மனதிற்குள் ஆத்திரமுற்று கேளாதவாறு இருந்தார்.

ஒருவாரம் கழித்து அவர்கள் வீட்டிற்குத் திரும்பி விட்டனர். பாக்கியம்வீட்டு கவனிப்பையும் உபசாரத்தை யும் தமக்குள்ளே மெச்சிப் புகழ்ந்தனர்.

ரவுணில்ப் பேச்சு வார்த்தை, திம்புவில்ப் பேச்சு வார்த்தை வெளியூரில்ப் பேச்சுவார்த்தை, கொழும்பில்ப் பேச்சுவார்த்தை வெளிநாட்டில் பேச்சுவார்த்தை டெல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்ப் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்ற பழிச் சொல்லை தமிழ் அகராதியிலிருந்து அகற்றவேண்டும் உலகிலேயே மிகக்கொடுமையான பாவமான பழிச்சொல் பேச்சுவார்த்தை.

ஃ ஃ ஃ

அந்தக் கடிதத்தில் அனைவரினதும் அக்கறையையும் ஆர்வத்தையும் ஒத்திவைத்துக் கொண்டிருந்த அந்த விடயம் என்னவாயிருக்கும்!

ரவுணிலிருந்து பத்துக்கிலோ மீட்டர் தூரத்தில் விரும் தோம்பும் வேளாண்மைக் கிராமம். பாக்கியத்தின் கிராமத்திலும் பார்க்க ரவுணிலிருந்து அதிகதூரம். அங்கே வனிதாவிற்கு சம்மந்தம் பேசப்பட்டது. மாப்பிள்ளை டென்மார்க்கிலேயாம் தகப்பன் கொழும் பில் பிரபல வர்த்தகர் மாப்பிள்ளையின் முகவரியும் தொலைபேசி இலக்கமும் வனிதாவின் தமையனுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அவரோடு இதுபற்றிக் கதைப்ப தாகவும் கதைத்துவிட்டு கடிதம் போடுவதாகவும் முன்பு ஒரு கடிதத்தில்க் குறிப்பிட்டிருந்தான்.

ஒவ்வொரு கடிதத்திலும் தீர்மானத்தை எதிர்பார்த் துக் கொண்டேயிருந்தனர்.

முடிவுகள் தாமதமாகும் போது முறைகள் நெறிமாறு வதுடன் முடிவுகளின் தரமும் குறைகின்றது.

எந்தக்காரியங்களினதும் தீர்ப்பை, முடிவை, தாமதிப் பது தவிர்ப்பது நல்லது அதுவும் இயலுமானவரைதான்.

டென்மார்க் மாப்பிள்ளையின் தாய்தகப்பன் பேச்சு வார்த்தையின் போது சீதனமாக ஆதனம் எதையும் கேட்கவில்லை. ரொக்கமாக ஐந்து இலட்சம் ரூபாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே கேட்டிருந்தனர். வனிதாவை டென்மார்க்குக்கு போஸ்ட் செய்வதற்கு ஒத்துக்கொண்டும் ஐந்து இலட்சம் ரூபாய்...? இப்பொழுது பார்சல் போஸ்ட்க்கு ஒன்றரை இலட்சம் போஸ்ரேஜ் சார்ஜ் ஆகிறது. சில பார்சல்கள் விலாசம் மாறிப்போவது முண்டு. இவ்வளவு காலமும் வெளியே அனுப்புவதற்கு விருப்பமில்லாமல் இருந்த பாக்கியம் அனுப்பித்தான் ஆகவேணுமென்ற கட்டாயத்துக்கு வந்து விட்டா.

இந்த விடயத்தைத்தான் மகன் மாப்பிள்ளையோடு கதைத்துவிட்டு விபரம் எழுதுவதாக எழுதியிருந்தான்; முடிவைத்தாங்கமுடியாமல் கடிதம் முடிவைத் தாங்க மறுத்துவிட்டதோ என்னவோ.

பள்ளிக்கூட இடைவேளையின் போது மைதிலி வீட்டிற்கு வந்தவள் குசினிக்குள் நுழைந்து செம்புத் தண்ணியையும் எடுத்து மடமடவென குடித்து விட்டு 'அக்கா பெரியண்ணன்ர கடிதம் வந்ததா"? ஓ..அந்தா சீரகப் பேணிக்குக் கீழ இருக்கு...'

எடுத்துப் படிக்கலானாள் பாக்கியம் கொஞ்சம் விபரமா அறியவேண்டுமென்பதற்காக 'உரத்துவாசியடி மகன...' நடுப்பகுதியிலிருந்து வாசிக்கத் தொடங்கியவள்...இன்னும் கதைக்கவில்லை கதைத்துவிட்டு விபரம் அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்... என்று முடித்தாள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வுகள்

சி. உதயகுமார்

சில்வண்டின் இரைச்சல் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பெரும் ஓசையாகக் கேட்டுக் கொண்டிருந்தது. பௌர்ணமி கழிந்த மூன்றாம் நாளாகையால் பகுதி மறைந்த சந்திரன் முகிற் திரைகளைக் கிறிக் கொண்டு எதிர்த்திசையில் விரைவதாகப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தான். வேலியோரத்துத் தென்னை மரத்தைக் கிழித்துக் கொண்டியிறங்கிய சந்திரக் கதிர்கள் வீட்டு முற்றத்தில் தென்னோலை வடிவில் படிந்து மெலிதாக வீசிய காற்றில் சலசலத்துக் கொண்டிருந்தது.

சுப்பிரமணியத்தார் வீட்டின் முன்திண்ணையில் இரு கரங்களாலும் கால்களைச் சேர்த்தணைத்து முழங்காலில் நாடி புதைத்து சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தார். நேரம் நடுச்சாமத்தைக் நெருங்கிக் கொண்டிருந்த போதும் நித்திரையின்றி மனம் புழுங்கிக் கொண்டிருந்தது.

"என்ரை மகனே"

இதய ஆழத்தில் இருந்து பொங்கி எழுந்த பாசம் தீனமாக வெளிப்பட நெஞ்சு விம்மிதமுற்று ஏறித் தணிந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் காலடியில் நீட்டிய முன்னங்காலிற்கிடையில் தலைமண்ணில் அழுந்த படுத்திருந்த "சீசர்" இடை யிடையே தலைதூக்கி செவிபுடைக்க உர்ரென்று உறுமி விட்டு மீண்டும் தன்னிலையில் படுத்துக் கொண்டிருந்தது. திண்ணையின் ஓரத்தில் படுத்திருந்த பொன்னரம்மானின் இருமல் ஓசை இடையிடையே விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

வந்திருந்தவர்களெல்லாம் தேவை கருதியும் நிலமை யின் அழுத்தத்தாலும் ஒவ்வொருவராய் திரும்பி விட்ட பின்னும் கூடவே தங்கி விட்டவர் பொன்னரம்மான் ஒருவர் தான்.

"ஐயோ...என்ரை ராசா"

உள்ளிருந்து கேட்ட தங்கத்தின் கேவல் ஒலி இவர் நெஞ்சைக் கீறிப் பிளந்து கொண்டு சென்றது.

என்ன அறிவான அன்பான பிள்ளை அவன். எனது பிள்ளை என்று எத்தனை விதங்களில் பெருமைப்படக் கூடியவாறு அவன் இருந்தான்.

"ராஜா...ராஜா..."

என்று சுற்று வட்டாரம் முழுவதும் தேடிவந்து அன்பு செய்கையில் என்மனம் எவ்விதம் புளகாங்கிதமடைந்தது மக்கள் பற்றியும் மக்கள் வாழ்க்கை பற்றியும் இளம் தலை முறையைச் சேர்ந்த இவர்கள்எவ்வளவு தூரம்தெளிவாகச் சிந்திக்கிறார்கள். வர்க்க விடுதலையின் மூலம் இனவிடு தலையை வென்றெடுப்பது பற்றிஎவ்வளவு தெளிவுடனும் நம்பிக்கையுடனும் இருக்கிறார்கள்?

உயர்சாதி என்ற மமதையுடனும் காசு பணம் இருக் கிறது என்ற திமிருடன் நான் ஆடிய ஆட்டங்களையும் செய்த அவலங்களையும் எவ்வளவு தவறானவை என்று மெள்ள மெள்ள எடுத்துச் சொல்லி மனிதனாய் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கச் சொல்லித் தந்தது எனது பிள்ளை தான். சிவ பெருமானுக்கு முருகக் கடவுள் சொல்லிக் கொடுக்க வில்லையா? அது போல.

தன்னொத்தவர்களுடன் சேர்ந்து இயக்கம் போராட்டம் என்று போன பொழுது என்னாலும் தாங்கிக் கொள்ளத்தான் முடியவில்லை. இருக்கிற ஒரு பிள்ளையையும் தொலைத்துப் போட்டு என்ன செய்வதுஎன்ற தனிமனிதக் கவலைதான். ஆனால் எமது இலட்சியத்தைவென்றெடுக்க நாம் முன் செல்ல வேண்டிய வழி இதுதான் என்று அவன் விளக்கிச் சொன்னபோது, நான் என்ன செய்ய முடியும்?

அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிய தாய் தங்கத்தையும் நான் தான் சமாதானப் படுத்த வேண்டியிருந்தது. மக்களைக் காக்க வேண்டிய அரசாங்கமேமக்களை அழிக்க படைகளை ஏவிவிட்டுக் கொண்டிருக்கும் போது, இவர்கள் சொல்லும் நீதி நியாயங்களை அவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? என்பதை எண்ணி நான் மிகவும் கவலைப்பட்டாலும் என் மகனையும் அவனொத்தவர் களையும் நான் ஊக்குவிக்க மட்டும் தவறவில்லை.

இவை எல்லாவற்றையும் இன்று தேடுதல் என்ற பேரில் சுழல் போல் வந்த இராணுவம் அள்ளிக் கொண்டு போய்விட்டது.

ஓடினவர்களை சுட்டும் பிடிபட்டவர்களை 'ட்ரக்' கில் அள்ளிப் போட்டுக் கொண்டும் போய் விட்டார்கள்.

"ஊருக்குத் தெற்கால இருக்கிற ஆலமரத்தடியில் ஐந்தாறு இளந்தாரியள நிக்க விட்டு சுட்டுப் போட்டு அதிலேயே பெற்றோல் ஊத்திக் கொளுத்திப் போட்டார்கள்"

அட்டூழியம் செய்து இராணுவம் திரும்பிப் போன பிறகு பயந்து பயந்து ஒன்று கூடியவர்கள் கண்ட கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்கள் என்று மெள்ள மெள்ளச் சொல்லத் தலைப் பட்ட செய்திகள் இவை.

"உவன் சரவணன்ரை பெடியன் என்னோடைதான் ஓடி வந்தவன். திடீரென்று கேட்ட வெடிச்சத்தத்தில அவன் சுருண்டு விழ நான் ஓடித் தப்பியது அருந்தப்பு"

சொன்னவர் அதையே நினைத்தபடி மெள்ளச் சொன்னார். "இன்னும் அந்தப் பெடியன், "ஐயோ......அம்மா"" எண்டலறியது காதுக்கை கேட்குது"...

வந்தவர் போனவரிடம் எல்லாம் ராஜனைப் பற்றி விசாரித்து ஏமாந்து கடைசியாக ஆமிக்காரர் பிடித்து வைத்திருந்து வயசாளி என்று விடுபட்டுப் வந்த இரத்தினத்தை விசாரிக்க,

"ஆமிக்காரர் பிடிச்சு வைச்சிருந்த ஆட்களிலையும் ராசன் இல்லை"

என்ற பதிலால் ஆல மரத்தடியில் சுட்ட பெடியனில ராஜனும்......நெஞ்சதிர முடிவிற்கு வந்து ஏற்பட்ட இழப்பை தாங்கிக் கொள்ள முடியாத சோகத்துடன் தூக்கமிழந்து நடுச்சாமம் தாண்டிய இவ்வேளையிலும் விழித்துக் கொண்டிருக்க...

திடீரென்று தலைதூக்கிசெவி புடைக்க உறுமிய சீசர் எழுந்து நின்று ஏதோ அசைவைக் கண்டு பலமாகக் குரைக்க தொடங்கியது. விழிப்புக் கண்ட பொன்னரம்மான் எழும்பியிருந்து.

"என்ன மோனை" என்று என்னைக் கேட்டார்.

"என்னவெண்டு தெரியவில்லை அம்மான்.

பதில் கூறியபடியே தெருவைப் பார்க்கின்றேன்.

"ஆமிக்கார தலைவாங்களோ"

பொன்னரம்மான் அங்கலாய்ப்புடன் எழும்பி நின்று கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் உள்ளுக்கு வாங்கோப்பா" என்ற தங்கம் "என்ரை கடவுளே... கடவுளே" என்று பிரார்த்தனையில் கரைந்தாள்.

வீதியில் ஒரு ஆள் ஆடியாடி வருவது நிலவொளியில் இப்போது தெளிவாகத் தெரிந்தது. 'ஆரது இந்த நேரம்...இந்தப் பயங்கரத்துக்குள்ளை' நினைவோடிக் கொண்டிருக்கும்போதே சீசரை அதட்டி அடக்கினேன்.

படலையடியில் நின்று,

"ஐயா...ஐயா" என்று குரல் கொடுப்பது யார்...?

நாகன்.

எனது காலம் கடந்து அட்டூழிங்களின் காட்சிச் சின்னமாக இன்றும் நடமாடிக் கொண்டிருப்பவன்.

சாதி வெறி கொடி கட்டிப் பறந்த காலம்-தெற்குப் பக்கமுள்ள ஒருவரும் மேல்சட்டை அணிவது அனுமதிக் கப்படாத நேரம். இளமையின் துடிப்பில், அநியாயத்தைக் கண்டு அதை உடைக்க வேணுமென்ற ஆத்திரத்தில் முதல்முதல் சேட் போட்டுக் கொண்டுவர இதைப் பொறுக்க முடியாத நானும் என்னோடொத்தவர்களும் நடுவீதியில் வைத்து அவன் சேட்டைக்கிழித்து பழக்கக் காச்சிய இரும்புக் கம்பியால் முதுகில் குறியிழுக்க, அந்த வேதனை தாங்காது மயங்கி விழுந்தவனைப் பார்த்து,

'இனியும் ஒருவருக்கும் இந்த எண்ணம் வராமல் இருக்க வேணுமெண்டதற்கு அடையாளம் இது.'

என்று சொல்லி அட்டகாசமாகச் சிரித்தேன்.

இன்றும் இவனைக் காணும் போதெல்லாம் என்னுள்ளம் குமைந்து வெட்கத்தில் சாம்பிப் போய் நிற்பேன். எவ்வளவு கீழானவனாக நான் இருந்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா..."

நாகனின் அழைப்பில் நினைவு திரும்பிய நான்,

"இந்த ராவிருட்டில எங்கை வந்த நீ" கேள்வியோடு அவனைப் பார்த்தேன்.

"உங்கடை பிள்ளை செத்துப் போட்டுது எண்டு நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறியள் எண்டு கேள்விப் பட்டுத்தான் இப்ப ஓடி வந்தானான், இல்லாட்டி காலமைதான் வர எண்டு இருந்தனான். என்ரை வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வடலிக்காணிக்கை உங்கட மகனும் இன்னும் ரெண்டு மூண்டு பேரும் பத்திரமாய் இருக்கினம் நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதை யுங்கோ. விடிஞ்ச பிறகு அவை வருவினம்."

எனக்கு வந்த சந்தோஷத்துக்கு அவனைக் கட்டிப் பிடிச்சு ஆடவேணும் போல இருந்தது. நான் அவனுக்குச் செய்த அநியாயத்திற்கு என்ரை மகனைக் காட்டிக் கொடுத்து பழி தீர்த்திருக்கலாம் தானே......இவன் அதைச் செய்யாததுடன்...இந்த நடுச்சாமத்தில் எனது துக்கம் தீர்கவென்று வந்திருக்கும் இவன்...என்ன விதமானவன்...

என்ன சிந்தனையை ஊடறுத்தது தங்கத்தின் கேள்வி.

"நீ ஏன் இந்த தள்ளாத வயதில ராவிருட்டுக்குள்ளால வந்தனீ... உன்ரை மோனை அனுப்பிச் சொல்லியிருக்க லாம்தான"

அதீதமான வாஞ்சையுடன் அவனை ஆதரவுடன் பார்க்கிறாள்.

"என்ரை...பிள்ளை" முழுவதையும் முடிக்காமல் தோளில் தொங்கிய துண்டை எடுத்து வாயை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்திக் கொள்ளுகிறான். அவன் உடல் குலுங்கிக் கொண்டிருந்தது.

என்ன துன்பம் இவனுக்கு.

"என்ரை பிள்ளையை ஆமி பிடிச்சுக்கொண்டு போட்டுது" உடலதிர குலுங்கி அழும் இவனது துயரம் சில கணங்களிற்கு முன்வரை எனக்கு மிகவும் பரிச்சய மாக இருந்ததே.

"ஆண்டவனே"

பிரார்த்திருப்பதை விட இவனுக்கு எவ்வகையில் நான் ஆறுதலைக் கொடுக்க முடியும்.

"நான்.. நான்...போட்டு வாறன்" பொங்கியழுதபடி திரும்பி நடக்கும் அவனைப் பார்க்கிறேன். அவன் முதுகில் இருக்கும் தழும்பு என்னைப் பார்த்துச் சிரிக்கின்றது.

"நாகன்...நீ மனுஷனடா...நான்...நான்..."

என் இதயத்தில் ஏற்பட்ட அதிர்வுகளை அமைதிப் படுத்த முடியாது, அந்த உருவம் தள்ளாடித் தள்ளாடி சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டிருக் கின்றேன், கண்ணில் கண்ணீருடன்.

(Trance-இல் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'சிந்து' சஞ்சிகையில் ஆடி 1989 ஆம் ஆண்டில் வெளி வந்தது.)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அவர்கள்?

— நல்லைக் கண்ணன்

12.30 பி. ப.

பிதிய இடைவேளைக்காக மணி அடித்தது.

அந்தப் பெண்கள் கல்லூரியிலிருந்து மாணவிகள், வெண்புறாக் கூட்டங்கள் வெளியேறுவதுபோல் விரைந்து கொண்டிருந்தார்கள் இன்னும் ஒரு மணித்தியாலத் திற்குள் சாப்பாட்டை முடித்துவிட்டு மீண்டும் திரும்பி வரவேண்டும் அல்லவா.

ஏற்கனவே சொல்லி வைத்தபடி கல்லூரி வாசலின் இடது புறத்தில் வீதியைக் கடந்து சற்று தூரத்தில் சைக்கிளின் மீது அமர்ந்திருந் வண்ணம் தாரணியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் நிரஞ்சன். வெண்ணிலவு போன்ற முகத்தில் விளையாடும் புன்னகையோடு தாரணி யும் வந்து சேர்ந்தாள்.

வாரத்தில் இரண்டோ அல்ல மூன்றோ தரம் இவர்கள் இப்படித்தான் சந்தித்து இதயங்களைப்பகிர்ந்து கொள்வார்கள். இந்தக் கல்லூரி வாசல்தான் இவர்களின் காதற் கோயில் உதய வாசல். உதயமான உறவிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரமிட்டு உறுதிவேரை ஊன்றியதே இந்த இடம்தான். இருவருக்கும் இடையில் உள்ள காதல் பற்றி இவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. தாரணியின் தமக்கையும் நிரஞ்சனும் ஒரே நிரையில் படிப்பவர்கள் அதனால் தாரணியின் வீடு சென்று வருவதால் அவளுடன் பழகநிரஞ்சனுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஆரம்பத்தில் தோன்றிய ஓர் பாச உணர்வு பின் காதலாக மலர்ந்தது. என்னதான் அவள் வீடு ஒன்று வந்தாலும் காதலில் கருத்துப் பரிமாறும் இடமோ இந்தக் கல்லூரி வாசல்தான்.

வந்த தாரணியிடம் அந்த விடயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தான் அவன்.

"என்ன வரச் சொல்லிப் போட்டு பேசாம நிக்கிறீங்க. இப்படியே நின்றால் 'இன்ரவலும்' முடிஞ்சிடும், நானும் போயிடுவன். சாப்பாடு கொண்டு வந்தும் எறிஞ்சு போட்டு வெளியிலை சாப்பிடப்போறன் எண்டு சொல்லிப் போட்டு வந்திருக்கிறன் நீங்க என்னெண்டா ஒன்றும் கதைக்காமல் நிக்கிறீங்க..."

தொடர்ந்து கொண்டு போன அவளை இடைமறித்தான் நிரஞ்.

"இல்லைத் தாரி... ஒரு விசயம்...நான் நேரடியாயே சொல்லுறன் தயவுசெய்து என்னைக் கோவிக்கப்பிடாது.",

என்றும் இல்லாதவாறு நிரஞ் இப்படிப் பேசறது அவளிற்கு ஆச்சரியத்தையளித்தது. சொல்ல வருவதை எதிர்பார்த்த முகம் கண்களை அகல விரித்து அவளை அவதானித்தது.

"என்னவெண்டா: நாளையின்னைடைக்கு நான் வெளி நாடு......போகப் போறன் அதுதான்......உன்னட்டை சொல்லிப்போட்டு......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரஞ் சொல்லும்போதே அவள் முகம் பொலிவிழந்து கண்கள் கலங்கி குழமாயின. அந்த பேரதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தாரணி மௌனமானாள்.

"என்ன நான் என்ரபாட்டுக்குச் சொல்லிக்கொண்டு போறன் நீ பேசாம நிக்கிறாய்''

அவளைப் பிடித்து சற்று உலுப்பியவாறு கேட்டான்:

"நிரஞ்... நீங்க... வெளிநாடு''

தடுமாறினாள் தாரணி.

"ஆமா தாரி இந்த நிலமையில இஞ்சையிருந்து ஒண்டுமே செய்ய முடியாது. நாடு பயங்கரச் சூழ் நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்க பெடியங்கள் சுதந்திரமாய் நடமாட முடியாமலிருக்கு அப்படி மோசமான நிலமை அதனாலை வீட்டிலையும் பயப் படுகினம்...அதுதான் வெளிநாடு போயிட்டு ஒண்டோ அல்ல ரெண்டோ வருசத்தில திரும்பி வந்திடுவம் எண்டு யோசிச்சன் அதோட வசதியும் வந்தது... நேற்றுத்தான் முடிவு தெரிஞ்சது..."

அவன் முடிக்கும் முன்பே,

"அப்படி என்றால் இந்த அபலையை இங்கை தனிய விட்டிட்டு...... நான் தனிய இருந்து என்ன செய்யிறது இந்தப் பேதையையும் கொஞ்சம் எண்ணிப் பார்தீங் களா?''

கண்கள் சொரிய கேட்டாள்.

"தாரி... இஞ்சை பார் நான் என்ன நிரந்தரமாயே அங்கை தங்கப் போறனா? வாற வருசமோ இல்லை அடுத்த வருசமோ நாட்டு நிலைமை சரியாப்போம். உடனை நான் திருப்பி வந்திடுவன் வந்ததும் என்ன கால் கட்டுத்தான்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தில் சொல்ல முடியாத கவலை இருப்பினும் முகத்தில் தெண்டித்து சிரிப்பை வரவழைத்து அவன் சொன்னாலும் அவள் மனம் படும் வேதனை கொஞ்சமல்ல. நிரஞ்சினாலும் அவள் வேதனையை அறிய முடிந்தும் வேறு வழியில்லாத காரணத்தால் அவளை சமாதானப் படுத்த அவன் எப்படி எல்லாமோ கதைக்க வேண்டி இருந்தது.

வீட்டில் பலதரப்பட்ட கஸ்டங்களையெல்லாம் நிரஞ்சனுக்கென்று வாழ்வதினால் சகித்துக் கொண்டிருப்பவள் தாரணி. நிரஞ்சன் தான் தன் உயிர் என்று மதித்து வாழ்பவள். அவனைக் காணபதிலும், அவனுடன் பேசுவதிலும்தான் அவள் அறிந்து கொண்ட இன்பங்கள். அந்த இன்பத்தில்தான் அவள் நிம்மதி அப்படியான அவனைவிட்டு பிரிந்து இருப்பதென்றால் மனம் எப்படியான வேதனையை அனுபவிக்கக்கூடும்.

நிரஞ்கூட தாரணிமீது உயிரையே வைத்திருந்தான். அவளது தயாள குணமும் பெருஞ்சிந்தையும் அவனை மிகவும் கவர்ந்திருந்தது. அவனுக்கும் அவளைப்பிரிந்திருப்பது பெரும் வேதனைதான். அப்படி அவன் பிரிந்திருக்காவிடில் அவனைவிட்டு உயிர் பிரிந்துவிடும் என்பதற்காகவே அவனும் அந்த முடிவை எடுத்தான். தனக்காக அல்ல, தன்னை நம்பியிருக்கும் தாரணிக்காக.

"தாரி எனக்கு உன்னோட நிலமை புரியாமலில்லை, ஆனால் இருந்தும் இது தவிர்க்கமுடியாமலிருக்கு. அது மட்டுமில்லை வெளிநாடு போயிட்டன் என்றால் கொஞ்சம் பணமும் உழைக்கலாம். அதற்குப் பின்னர் எங்கட வாழ்க்கையை நாங்கள்வளமாக்கிக் கொள்ளலாம் தானே."

"இஞ்ச பாருங்கோ நிரஞ் நான் என்னை முற்று முழுக்க உங்களுக்கே அர்ப்பணிச்சிட்டன். உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு என்னாலபிரிந்திருப்பதென்பது என்னால இயலாத ஒன்று நாங்கள் ஒவ்வொருநாளும் சந்திக்காட்டியும் எனக்கு பக்கத்தில நீங்கள் இருக்கிறீங்க என்ற ஒரு நிம்மதியில இருக்கிறன். ஆனால் இப்போ நீங்களும் எங்கோ போகப்போறன் என்று சொல்லுறீங்கள். இதை என்னால தாங்கமுடியாமலிருக்கு. இருந்தும் இந்த ஒரு சிறு பிரிவில்தான் உங்கட முன்னேற்றமே இருக்கு என்று நினைக்கும்போது என்னால மறுக்கவும் முடியேல்லை..."

கனத்த மனது கண்ணீரை தந்தாலும், காலத்தின் கோலம் என்று எண்ணி விதியை நொந்து கொண்டு தாரணி கதைத்துக் கொண்டாள். அன்பு என்ற ஒரு புனிதமான உறவை அவன் சொல்லித்தான் தெரிய வந்த அவள் சற்று நேரத்தின்பின் நிரஞ்சனுக்கு விடை கொடுத்தாள்.

பிரியாத மனதுடன் இருவரும் திசை பிரிந்து சென்றார்கள். நிரஞ்சன் சென்று மறையும் வரையும் பார்த்துக் கொண்டிருந்த தாரணி கல்லூரிக்குள் நுளைந்தாள்.

மதிய இடைவேளை முடிந்து மீண்டும் தொடங்கி வெகு நேரமாயிருந்தது.

ஃ ஃ ஃ

வெளிநாடு சென்றுவிட்டால் பிறகென்ன ராசா தான்; எப்படி எப்படியெல்லாம் வாழலாம் என்றும் எத்தனை இலட்சியங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றலாம் என்ற அபிலாசையுடன் தான் பிறந்த பொன்னாட்டை விட்டு வெளியேறினான் நிரஞ்:

எத்தனையோ சிரமங்கள் மத்தியில் பெரிதும் கஸ்டப்பட்டு இறுதியில் பிரான்ஸ் நாட்டிற்குள் நுளைந்தான். பிரயாணத்தின்போது ஏற்பட்ட சிரமங்கள் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் சலிப்பை ஏற்படுத்தி வெளிநாட்டைப்பற்றி நினைத்திருந்த கனவில் ஒரு பாதி தேய்ந்து போனது. நவநாகரீகத்திற்கு பெயர்போன பாரிஸ் வந்த நிரஞ் வெளிநாடு என்பது சொர்க்கமா நரகமா என்று நன்கு அறிந்து கொண்டான். எந்த ஆசைகளை எல்லாம் நிறைவேற்றலாம் எண்ணியிருந்தானோ, அவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்ற முடியவில்லை. வேலைக்காக அவன் அலையாத வீதிகளே இல்லை என்றே சொல்லலாம். அவனது கால்கள்தான் பல படிகளை தாண்டியதே தவிர அவன் வாழ்க்கை ஒரு படிகூட தாண்டவில்லை. அவனது உயிர் நண்பர்கள் என்று இருந்தவர்கள்கூட, அவன் தமக்கு செய்த உதவிகளை எல்லாம் மறந்து அவனைவிட்டு ஒதுங்கி நின்றனர். சிலர் அவனை ஒரு அடிமை என்ற கண்ணோக்கில் பார்த்தனர். சிலர் அவனை அவன் நிலையறிந்தும்கூட ஏமாற்ற வலையில் வீழ்த்தினர்.

எந்த ஒரு துணையுமின்றி அன்னிய தேசத்தில் அனாதைபோல் நிற்கும் நிரஞ்சிற்கு அரசாங்கத்திடமிருந்தும் உதவிகளை, அவனது விசா நிரந்தரமின்மை என்ற காரணத்தால் மறுத்துவிட்டனர். அவனது இனத்தார் நண்பர்கள் என்று இருந்தவர்கள் கூட எல்லாரும் வசதியான வாழ்க்கை நடத்துவதை கண்டு நிரஞ்சிற்கு பொறாமை அவன் மீதுதான் பிறந்தது.

பலமுறை முயன்றும் இறுதியில் பூக்கள் விற்கும் ஒருவன் நிரஞ்சனை தன்னுடன் சேர்த்துக்கொண்டான். வண்டில் ஒன்றில் பூக்களை சுமந்து சென்று ஜனநடமாட்டம் உள்ள ஓரிடத்தில் நின்று விற்பான். காலை முதல் மாலை வரை விற்றுவரும் பணத்தில் அன்றைய சாப்பாட்டிற்கு போதுமானதுதான் அவனுக்கு கிடைக்கும். இரவில் அந்த பூக்கள் வைப்பதற்கென போட்டிருக்கும் கொட்டகையில்தான் அவன் உறங்கும் மாளிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் வாட்டும் நேரங்களில் எப்படி அவனால் குறட்டை விட்டு தூங்க முடியும்.

இந்த மலர்கள் மீது, இந்த பிரான்சிய மங்கையருக்கு எவ்வளவு அலாதி பிரியம். அலங்காரத்தில் இருக்கின்ற கவனத்தை அவசியத்தில் ஈடுபடுத்துகின்றார்களா? ஒரு மலருக்கு இருக்கும் மதிப்பை,ஒருமனிதனுக்கு கொடுக்கின்றார்களா?

தாரணியின் முகத்தினை தான் விற்கும் ஒவ்வொரு மலர்களிலும் கண்டு தன் சலிப்பை தீர்த்துக் கொள்வான் நிரஞ். இருந்தும் மனது சிந்திப்பதை எதைக் கொண்டு தடுத்துவிட முடியும். அவனது இலட்சியங்கள் நிறைவேறாத நேரத்தில் வாழ்க்கை விரக்தி எனும் கோட்டைக்குள் தள்ளப்பட்டது.

தன் சிரமங்கள், கஷ்டங்கள் எதையும் வெளிக்காட்டாமல் கடிதங்களில் தான்வசதியாக வாழ்வதாக தனது வீட்டிற்கும், தாரணிக்கும் எழுதிவந்தான்.

ஃ ஃ ஃ

அன்னிய நாட்டிலிருந்து, மனது அழுது அழுது மதி இழந்து சாவதைவிட எமது பண்ணிலே எப்படி என்றாலும் சாவதே மேல் என்று எண்ணியவன் தாயகம் திரும்புவதே நன்று என முடிவெடுத்தான்.

வெளிநாட்டில் கிட்டத்தட்ட ஒரு வருத்திற்குமேல் இருந்தும் அவனுக்கென ஒரு பொருட்களும் இல்லை. ஏன் கையில் சில சில்லறைகளைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஏதோ ஒரு முடிவெடுத்தவன் தான் பிறந்த பொன்னாட்டிற்கு திரும்பினான்.

நாட்டில் அப்போது நிலமை பயங்கரத்தின் உச்ச நிலைக்கு தள்ளப்பட்டியிருந்தது.

நிரஞ்சன் தனது உறவினர்களுக்கெல்லாம் என்னென்ன கொண்டுவரவேண்டும் எனஎண்ணியிருந்தானோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை மனதின் ஒரு மூலையில் இன்னமும் சுமையாக கிடக்கின்றது. தன் உயிருக்குயிரான தாரணிக்காவது சிறு பொருளாவது கொண்டு போகவேண்டும் என் எண்ணி அங்கேயே ஒரு சாறி வாங்கி கொண்டான். மறுநாள் தாரணியை பூங்காவிற்கு சந்திக்க வருவதாக அவளின் சினேகிதி மூலம் சொல்லிவிட்டான்.

நீண்ட நாள் பிரிவு. ஒருத்தரை ஒருவர் காணாத ஏக்கம் என்னென்னவெல்லாம் பேசவேண்டும் என்ற தாகம் எப்படி எப்படி இருப்பார்களோ என்ற மோகம் இருவர் மனதிலும் கரை புரண்டு கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

விடிந்தது.......

இன்று மாலை நிரஞ்சனைச்சந்திக்கப் போகின்றோம் என்ற இன்ப வெள்ளத்தில் உள்ளம் மிதக்க மலர்ந்த முகத்துடன் கல்லூரியை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தாள் தாரணி.

கல்லூரி வாசலின் இடது புறத்தில் வீதியைக்கடந்து சற்றுதூரத்தில் ஒரே சனக்கூட்டம். என்னவென அறியும் ஆவலில் அந்த இடத்திற்கு விரைந்தவள் கூட்டத்தை விலத்திப்பார்த்தாள்.

''நிரஞ்...ஞ்...ஞ்...''

தன்னிலையை மறந்து கத்திக்கொண்டு மயங்கி வீழ்ந்தாள்.

கற்பனைகளை இப்படி இப்படி என்று வளர்த்து, தினமும் இன்பக் கனவில் மிதந்த கண்கள் இரண்டிலிருந்தும் இரத்தம் வடிந்த நிலையில் நிரஞ்சனின் உடல் கிடக்கின்றது. உயிர் உடலை விட்டுப் பிரிந்து வெகு நேரமாயிருந்தது. அந்த உடல் கிடக்கும் மண்ணில் ரயரின் அடையாளங்கள் அகலமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கத்தை தெளிவிக்க தண்ணீரை தெளித்து தாரணியை தூக்குவதற்கு, நிரஞ்சனின் கைகளைப்பிடித்திருந்த அவள் கையை விடுவிக்க முயன்றவர்கள் தோற்றனர்.

விறைத்துப்போயிருந்த குளிர்ந்த அவள் கையில் துடிப்பு இல்லை. அவள் விழிகளும் இனிமேல் விரியப் போவதுமில்லை.

ஆம் நிரஞ்சனின் உயிரினைத்தேடி தாரணியின் ஆத்மா சென்று கொண்டிருக்கின்றது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் வாடை வீசாத பிரமச்சாரிகள்

K.S.T. சபாஸ்

கடும் வேலையினால் ஏற்பட்ட உடல் களைப்பு மயூரனுக்கு அதிகமாக இருந்த போதும் மனதில் உண்டான மகிழ்ச்சியானது உடல் களைப்பை மாத்திர மல்ல வயிற்றில் உண்டான கடும் பசியையும் அறவே இல்லாமல் செய்தது. நிசியின் பின்னிரவிலும் கூட மயூரனின் முகத்தில் தூக்கத்தின் அரிச்சுவடிகூட தென்பட வில்லை. இத்தனைக்கும் அன்றுமாலை மயூரனுக்கு தன் தாயிடம் இருந்து வந்த கடிதமே இந்த மன மகிழ்ச்சிக்குக் காரணமாகும்.

கால் நூற்றாண்டு வயதைத்தாண்டி கட்டிளம் காளையாய் சிவந்தமேனியும் களை கொட்டும் முகமும் கொண்ட மயூரன் பேசும் தமிழ் இனிமையாகவும் அருமை யாகவும் இருந்த போதும் அவன் தன் வாழ்க்கையில் சில மிக உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டிருந்தான். அதற்கு ஒத்துப் போகத் தக்கதாக ஒரு சில நண்பர் களைக் கூட சுவிற்சலாந்தில் ஒரு வருடமாகத் தேடியும் பெற முடியாமல் இருந்தது. தாயிடம் இருந்துவரும் கடிதங்களும் இந்தியாவில் இருந்து அதன் எடுப்பித்த புத்தகங்களுமே அவனது உள்ளத்தோடு உறவாடிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீசரிக்கப்பட்ட அகதியாக மயூரனுக்கு மட்டுமல்ல அவனது அண்ணன் கோபிநாதனுக்கும் சுவிஸ் அரசாங்கம் அனுமதி அளித்திருந்தது. மயூரனின் அண்ணன் 7வருடங்களுக்கு முன் சுவிஸ் வந்திருந்தாலும் இருவரும் வேறு வேறு மாவட்டங்களிலேயே வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஆகிவிட்டது. கோபிநாதன் பொதுவாக தமிழர்களிடம் காணும் மது, மாது, புகை போன்ற கெட்ட பழக்கங்களில் இருந்து விடுபட்ட நல்லமனிதராக புகழுடன் வாழ்ந்து வந்தார். பெண்கள் தொடர்புகள் அற்ற பல ஐரோப்பிய நண்பர்களை கோபிநாதன் கொண்டிருந்ததால் மயூரனுக்கு தன் அண்ணன் மீது அளவு கடந்த மதிப்பும் கௌரவமும் பாசமும் ஏற்பட்டது. ஆனாலும் 36 வயதை அடைந்த தனது அண்ணன் இன்னும் திருமணமாகாமல் இருப்பது மயூரனின் அடிமனதில் ஆழ்ந்த கவலையை கொடுக்காமல் இல்லை. இரு ஆண்பிள்ளைகளைக் கொண்ட இவர்களது குடும்பம் பொருளாதார தாக்கங்களுக்கு அப்பாற்பட்டதாக இருந்ததனால் பொறுப்புகள் கடமைகள் ஒன்றும் இவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால் ஒரு நல்ல நிலைமைக்கு வந்தபின்பே மூத்த மகனாகிய கோபிநாதனுக்கு திருமணம் செய்ய வேண்டுமென மயூரனின் பெற்றோர்கள் மனநிலை கொண்டிருந்ததால் 29 வயதுவரை கோபிநாதனுக்கு இலங்கையில் திருமணம் நடக்காமலே போய்விட்டது.

கோபிநாதனுக்கு கடந்த 5 வருடங்களாக திருமணப் பேச்சுக்கள் நடைபெற்று எல்லா முக்கிய விடையங்கள் எல்லாம் சரிவந்தாலும் கோபிநாதன் கூறும் அற்ப காரணங்களால் கல்யாணங்கள் தடைப்பட்டு கட்டைப் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வருகின்றார். மயூரன் இலங்கையில் இருக்கும்போது கோபிநாதனிடம் இருந்து வரும் கடிதங்களில் திருமண விடையமாகக்கூறப்படும் இக் காரணங்கள் தேவையற்றவையாக இருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் அண்ணனின் விருப்பம் என்று பேசாமல் இருந்தான் மயூரன்.

மயூரன் ஏழு ஆண்டுகளுக்குமுன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் A/L படித்துக் கொண்டிருந்தான். காதலற்ற வாழ்வை மணமற்ற மலர் என்று கூறிக்கொள்ளும் அவன் சிந்து என்ற பெண்ணை காதலிக்க ஆரம்பித்தான். இருவர் மனமும் ஒருநிலைப்பட்டிருந்தபோதும் மனதில் ஒருபதட்ட நிலை. ஆனாலும் இள இரத்தங்கள் என்றபடியால் பயம் என்பது அவர்களுக்கு இருக்கவில்லை. சுண்டினால் ரத்தம் துள்ளிச் சிவந்திடும் அவளது மேனி எல்லா நிற ஆடைகளுக்கும் அழகாகவே இருந்தது. நாலுகுணங்களுக்கு அப்பாலும் பல பண்புகளைத் தேடி நின்றது சிந்துவின் ஒழுக்கம். இத்தனைக்கும் மத்தியில் சிந்து மயூரனின் மாமன் மகள் என்றபடியால் சிறு ஓடையாக ஆரம்பித்த காதல் அதில் ஓடம் நடத்தும் அளவிற்கு வளந்துவிட்டது.

ஆறுவருடங்களுக்குமுன் தனது அண்ணன் கோபி நாதனுக்கு ஏற்பட்ட பிரச்சினையால் இலங்கையில் இருக்க முடியாமல் வந்தது போலவே மயூரனுக்கும் கடந்த ஒரு வருடத்திற்கு முன் ஏற்பட்டது. வெளிநாடு வருவது வேம்பாகக் கசப்பதற்கு உள்ளத்தில் இருந்த சிந்துவே உதாரணம் அண்ணனின் திருமணம் முடிந்ததும் உம்மை எப்படியும் என்னிடம் கூப்பிட்டுக் கொள்வேன் என்ற உறுதி கூறி நாட்டை விட்டுப் புறப்பட்டான். பல வருடங்களாக காதலர்களாக இருந்தும் களவியலின் இலக்கணங்கள் இவர்கள் பயின்றதில்லை. கடைசி நேரத்தில் வெளிநாடு போகும் மயூரனுக்கு விடைபிரியும் நேரத்தில் சிந்து கொடுத்த முத்தத்தில் பித்தம் தலைக்கேறிய பிரமையுடன் சுவிஸ் வந்து இறங்கினான் மயூரன்.

முற்றிலும் மாறுபட்ட இந்தப் பிரதேசச் சூழல் மயூரனுக்கு மன அமைதியைக் கொடுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துவினது பாரமான கடிதங்கள் அவனது மனத்தி லுள்ள பாரங்களை வாரம்தோறும் இறக்கிக் கொண் டிருந்தது. தெளிந்த ஓடையில் ஓர் கல் விழுந்தது போல் கடைசியாக தாயிடம் இருந்துவந்த கடிதம் அமைந் திருந்தது.

"அன்பு மயூரனுக்கு உனது அம்மாவின் வணக்கங்கள். சிலர் நமது சிந்துவை கடத்தி கட்டாய திருமணம் செய்யவேண்டும்என்று நிர்பந்திக்கப்பட்டுவிட்டதை நாங் கள் அறிந்து கொண்டோம். அதனால்கொழும்பில் உள்ள நமது உறவினர் வீட்டில் சிந்துவைப் பாதுகாப்பாக கொண்டுவந்து வைத்துள்ளோம். கூடிய கெதியில் சிந்துவை கூப்பிட்டு திருமணம் செய்து கொள்ள முயற்சி எடுக்கவும். இக்கடிதத்தில் வேறு ஒன்றையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. பதட்டப்படாமல் சிந்தித்து செயல்படவும்"

என எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தை முதல் முறைவாசித்த மயூரனுக்கு குழப்பமாக இருந்தாலும் பல முறை வாசிக்க பாற்குடத்தில் குளித்தஒருஉவகையை உள்ளம் எய்தியது. சிந்துவை இங்கு கூப்பிட்டாலும் அண்ணன் கோபிநாதனுடைய திருமணம் முடிந்த பின்பே தான் திருமணம் செய்ய வேண்டுமென்ற முடிவை உறுதியாகக் கொண்டிருந்தான்.

மயூரன் தனது அண்ணனின் திருமணத்தை நடத்த வேண்டும் என்பதற்காக விவேகானந்தரை நாடி புறப் பட்டான். விவேகானந்தர் பெயருக்கு ஏற்றதுபோல் விவேகமும் நல்ல சிந்தனையும் கொண்டவர். அண்மையில் திருமணமாகி மனம்போல் வாழ்ந்து கொண்டிருக்கும் பல இலட்சியங்களைக் கொண்ட ஈழத்து தமிழன். சுவிசிலேயே மயூரனுக் பிடித்த ஒரு நல்ல மனிதர். கோபிநாதனின் திருமணத்தைப் பற்றி இரண்டுமணிநேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடலுக்குப் பின் விவேகானந்தர் ஒரு முடிவுக்கு வந்தார். தனக்குத் தெரித்த இடத்தில் ஒரு பெண் இருப்பதாகவும் ஒரு கிழமையின் பின் முடிவு கூறுவதாக வும் மயூரனுக்கு உறுதியளித்தார். மதிய உணவை அங்கேயே அருந்திய மயூரன் roomல் இன்று சமைக்கத் தேவையில்லை என்ற நினைப்பில் விவேகானந்தரிடம் விடைபெற்றான்.

அண்ணனின் திருமணம் முடிந்ததும் சிந்துவுடன் அமைதியான வாழ்க்கையை அமைக்க ஆசைப்பட்ட மயூரன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான். அவனது சிந்தனையை தொலைபேசியின் அலறல் திசை திருப்பியது. தொலைபேசியை எடுத்து "கலோ" என்றவன் மறுபக்க முனையில் விவேகானந்தர் நிற்பதை உணர்ந்தான். விவேகானந்தருக்கு வேலைக்குப்போக நேரமாகிவிட்ட பொழுதிலும் இந்த சந்தோஷமான செய்தியை மயூரனுக்கு சொல்லிவிட வேண்டும் என்பதே அவருடைய எண்ணமாகும்.

"பெண்வீட்டாருக்கு உங்களைத் தெரியுமாம். ஏதோ ஒருவகையில் நீங்கள் தூரத்து சொந்தமாம். கோபிநாத னுக்கும் அவர்கள் மத்தியில் நல்ல மதிப்பாம். எனவே பெண்வீட்டுக்காரர் பூரண சம்மதம் தெரிவித்துவிட்டார் கள். இருந்தாலும் கடிதமூலமாக ஊருக்கு அறிவித்து பெண்ணின்வீட்டார் சம்பிரதாயப்படி உங்கள் வீட்டுக்குச் சென்று பேச்சுவார்த்தை முடித்து பதில்வர ஒருமாதம் வரை பொறுத்திருக்கவேண்டுமெனக் கூறினார். மயூர னுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தந்த இந்த வசனங்களை வேதவாக்காக எண்ணி சந்தோஷப்பட்டான். அண்ணரின் திருமணத்தினால் மயூரனுக்கு ஏற்படும் சந்தோஷத்தை விட சிந்துவை காணப்போகிறோம் என்ற களிப்பில் கவலைகளை எல்லாம் மறந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலா கம்பனி ஒன்றில் வெற்றுப்போத்தல்களைக் கழுவும் பகுதியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த மயூர னுக்கு வெற்றுப்போத்தில்களைக் காணும்போதெல்லாம் ஈழத்தில் வெறும் வயிற்றுடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் ஏழைமக்களின் நினைவுகள் தினம்தோறும் அலைமோதும் இனவது மனவருத்தத்தை அறிந்தது போல் அந்தக் கம்பனி முதலாளி மயூரனுக்கு அடுத்த மாதத்தில் இருந்து வேறு வேலைக்கு மாற்ற இருப்ப தாகக் கூறியதும் மயூரனின் முகம் அகத்திலுள்ள ஆனந் தத்தைக் காட்டியது. முதலாளிக்கு நன்றி சொல்லி மீண்டும் வெற்றுப்போத்தல்களை உற்றுப்பார்த்தான்.

மயூரனின் தாயிடம் இருந்து வந்த கடிதம் ஒருமாதம் ஓடிவிட்டதை உணர்த்தி நின்றது. இதுவரைவந்த திருமணங்களைவிட இத்திருமணம் எல்லாவகையிலும் பொருத்தமாக இருப்பதாலும் பெண் சுவிசிலேயே இருப்பதாலும் கோபிநாதனுக்கு பெண்ணைப் பிடித்திருந் தால் உடனே திருமணத்தை செய்யவும் என்று எழுதப் பட்டிருந்தது. இதுபோல கோபிநாதனுக்கும் தாயிடம் இருந்து வந்த கடிதம் விடையங்களை அவனுக்கு விளக்கியது. அண்ணரும் பெண்ணை தனக்குப் பிடித்திருக் கென சொன்னது மயூரனுக்கு பழம் நழுவி பாலில் விழுந்து இரண்டும் நழுவி வாயில் விழுந்ததுபோல் இருந்தது.

"ஈழத்தில் ஓர் திருமணம் என்றால் எல்லாப் பொறுப்புக்களையும் பெற்றோர்கள் கவனிப்பது போல் கோபிநாதன் பேசாமல் இருக்க மயூரனே இங்கு எல்லா வற்றிற்கும் முன் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. விவேகானந்தருடன் கல்யாணத் திகதியைக் குறித்துக் கொண்டு மயூரன் பேணிலிருந்து சூறிச் (zurich)க்கு கோபிநாதனிடம் சென்றான். புகையிரதத்தினுள் இருந்தவாறே உருப்பெடுத்தல், ஊருக்குச் சொல்லுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோட்டீஸ் அடித்தல் மண்டப ஒழுங்கு என்று பலவித பொறுப்புக்களையும் அண்ணனுடன் கலந்து பேசி முடிவெடுத்துத் திரும்ப எண்ணம் கொண்டான்.

மயூரனைக் கண்ட கோபிநாதன் வழக்கம் போல் இல்லாமல் சற்று மாறுபட்ட சூழ்நிலையில் இருப்பது போல் இருந்தான். தனது திருமண விடையமாக இவளவு பொறுப்புக்களையும் சுமந்து வந்த மயூரனின் மன நிலையைப் புரிந்து கொள்ளாதபடி கோபிநாதன் அலட்சியமாக இருந்தான்.

"தம்பி மயூரன் எனக்கெண்டால் இப்ப திருமணம் செய்ய விருப்பமில்ல. அம்மாட விருப்பத்த ஏன் கெடுப்பானெண்டுதான் எவ்வளவு திருமணங்களை கட்டி கழித்தனான். இந்த திருமணத்திலும் விவேகானந்தரால் ஒழுங்கு செய்யப்பட்ட தெண்ட படியால்தான் பெண்ணை பிடித்திருக் கெண்டது. பெண்ணில ஒரு குறையுமில்லை. எனக்கு இப்போ 36 வயது தானே ஆகுது. கொஞ்சம் பிந்தி செய்யலாம் என்றுதான் நான் இருக்கிறன். கலியாணத்தை முடித்து பிள்ளைகளைப் பெற்று சுதந்திரத்தை இழந்து வாழ்வதைவிட கலியாணமே செய்யாமல் வாழவும் நான் தயாராகத் தான் இருக்கிறன். நானே இதை குழப்புறன் என்று நீ நினைக்காத எனக்குத் தெரிந்த பல ஐரோப்பியர்கள் கூட எனக்கு மூத்த வயதிலும் திருமணம் செய்யாமல் இருக்கினம். எங்கட சமுதாயத்திலதான் திருமண மென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனக்காக வேண்டி நீ காத்துக் கொண்டிருக்க வேண்டாம். இதை அம்மாவுக்கும் ஆறுதலா நான் எழுதிப் போடுறன். வேறென்ன வேலை எல்லாம் எப்படி போகுது" என்று கதையை வேறு பக்கமாகத் திருப்பினான் கோபிநாதன்.

விடையம் அறிந்த விவேகானந்தர் தனது முயற்சி விழலுக்கிறைத்த நீராகிவிட்டதை உணர்ந்தார், பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களாக ஐரோப்பாவில் வாழும் விவேகானந்தருக்கு இங்குள்ள கலாச்சாரத்தின் ஒழுக்குகள் தெரியாமல் இல்லை. அது மயூரனுக்குத் தெரியாமல் இருப்பதிலும் தப்பில்லை. கோபிநாதனும் அந்த வர்க்கம்தான் என்பதை விவேகானந்தர் மயூரனுக்கு விளக்கினார். விளக்கமின்மையால் விழிகளை நிமிர்த்திய மயூரனுக்கு கோபிநாதனும் பெண் வாடை வீசாத பிரமச்சாரிகளில் ஒருவர் என்பதை விளக்கினார்.

தற்சமயம் கணிசமான தொகையினராகிய ஐரோப்பியர் பிறந்து இறக்கும்வரை எந்தப் பெண்ணையும் தொடாமலே வாழ்கின்றார்கள். பிரம்மச்சரியர்களாக வாழ்கிறார்களா என்று குறிக்கிட்டான் மயூரன். அம் பிரமச்சாரிகள் தான். ஆனால் ஒரு சிறு திருத்தம் இவர்கள் ஆண் வாடைகளுக்காக ஏங்கும் பெண் வாடை வீசாத பிரமச்சாரிகள். விடையத்தை விளங்கிக்கொண்ட மயூரன் தனது அண்ணனின் திருமணத்தைப் பற்றிச் சிந்திப்பதைவிட்டு தனது திருமண ஒழுங்குகளைக் கவனிக்கும் உறுதியுடன் வீதியில் இறங்கி நடந்தான்.

வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் தமக்குத் திருமணங்கள் வரும் சந்தர்ப்பங்களில் அதை செய்து ஒழுக்கமான குடும்ப வாழ்க்கை நடத்துவதே தமிழ் இனத்துக்கும் எங்கள் கலாச்சாரத்திற்கும் செய்யும் பெரும் தியாகமாகுமென விவேகானந்தர் கூறியது மயூரனின் காதுகளில் ஒலித்தது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்தாத உள்ளங்கள்

கிறீ-(BERN)

வெய்யிலின் கதிர்கள் அங்குள்ள மக்களின் முகத்தில் ஆனந்தமாக பிரகாசித்தன.

பருவகால மாறுதல்களின் தாக்கங்களின் சிதைபட்டவர்களுக்குகார்காலம்என்ற ஸம்மரில்ஏற்படும் சந்தோஷம் தன்னிகரற்றது. வீதி ஓரத்தில் போடப்பட்ட "நெருஸ்" இல் அமர்ந்திருந்த கார்த்திக் சுவிசுக்கு வந்து இன்னும் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. கோலா ஒன்றை அருந்தி தனது தாகத்தைப் போக்கிக் கொள்ள நினைத்த போது "குட்டின் ராக்" என்று வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு ஒரு பெண் வந்து உனக்கு என்ன வேண்டும் என்றபாணியில் உற்று நோக்கினாள். கார்த்திக் தனது ஆட்காட்டி விரலைக்காட்டி கோலா என்று சொன்னான். வந்தவள் இவனை ஏற இறங்கப்பார்த்துச் சென்றதை இவன் அறிந்தும் ஆட்காட்டிவிரல் இங்கு வேறு அரத்தத்துக்குப் பாவிப்பது என்பதை கார்த்திக் அறியாமல் இருந்தான்.

அப்பொழுது மணி நாலைத்தாண்டிக் கொண்டிருந்தது. கதிரவனின் ஒளி வெள்ளைக்காரர்களின் முகங்களை "பிறவுண்" ஆக்கிக்கொள்ள முனைந்தது. வெறிச்சோடிக் கிடந்த தெருக்களெல்லாம் ஜன நடமாட்டம் மிகுந்து வரத் தொடங்கியது. உறங்கிக் கொண்டிருந்த மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்து விட்டதுபோல் நகரமெங்கும் சுறுசுறுப்பு கோலாவை குடித்து முடித்த கார்த்திக் செந்றகாலன் என்ற இடத்தில் இருக்கும் தனது நண்பனைப் பார்க்க புகையிரத நிலையம் நோக்கி விரைந்தான். சமர்காலத்தில் நாகரீகத்தின் உச்சக்கட்டத்தில் இருக்கும் வெள்ளையப் பெண்களின் உடைகள் அப்பாலும்ஓர் புதிய நாகரீகத்தை உருவாக்க முனைவதை கார்த்திக் உணர்ந்தான். யாழ்ப்பாணத்து வெய்யிலும் நிலம்தேய சேலை உடுத்து சீதனமாகத் தங்கள் மானத்தை மூடிவாழும் தமிழர் கலாச்சாரங்கள் முன் இவை எல்லாம் அநாகரீகம் என்பதை உணர்ந்த கார்த்திக்கை "சாலூய்" என்ற உரத்தகுரல் உற்றுப்பார்க்க வைத்தது.

நெற்றியில் குங்குமத்தையும் நெஞ்சிலே கணவனையும் சுமந்து கொண்ட ஒரு தமிழ்பெண் 'வேலை முடித்துவர இவளவு நேரமாப்பா' என்று கூறி கணவனுக்கு முத்தங்கள் கொடுத்ததும் கார்த்திக்கிற்கு குடித்தகோலா வாந்தியாக வந்தது போல் ஒரு பிரமை. வாழிடங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளும் விலங்கினங்கள் எங்கள் சமுதாயத்திலும் உருவாவதை உணர்ந்தான். ஆட்டிற்கு மட்டையைக்கட்டி வேடிக்கை பார்க்கும் எங்கள் சமுதாயம் வேலியை அறுக்கையாக்க இன்னும் முன்வரவில்லை.

அழகிய அந்தப் பெண் புகையிரத நிலையத்தினுள் பிரவேசிக்க ஓடுகின்ற படிகளிலே இயந்திரமயப்படுத்தப் பட்ட வேலைகளை முடித்து விட்டு ஓய்வு காண ஓடுகின்ற மனிதர்களுடன் கார்த்திக்கும் ஒருவனாக "செந்றகாலன்" புகையிரத மேடையை அடைந்தான். ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கு ஒரு புகையிரதம் புறப்படுவதாக இருந்தாலும் கடைசி நேரத்தில் வந்து ஏறுபவர்கள் ஏராளமாக இருந்தார்கள். ஒவ்வொரு நிமிடத்தையும் மிச்சப்படுத்திப் பழக்கப் பட்ட சுவிஸ்

மக்களின் வழக்கமான வாழ்க்கைமுறை இது. கார்த்திக் இருந்த இடத்தில் இன்னும் மூன்று இருக்கைகள் வெறுமையாக இருந்தாலும் புகையிரதத்தினுள் இட நெருக்கடி ஏற்பட்டும் இவை வெறிச்சோடியே கிடந்தன. முன்பின் தெரியாத இலங்கை உருவம் நிற்பவர்களை ஏளனம் செய்வதுபோல் கார்த்திக்ன் பக்கத்தில் வந்து அமர்ந்தது. "கலோ" ஐ, ஆம் குமார் என்று கார்த்திக்கு டன் கைகுலுக்கி தானும் தமிழன் என்பதை நிலை நாட்டியது. இது இரண்டுபேர் சந்திக்கும்போது ஆங்கிலத் தில் கதைப்பது தமிழரின் ஐரோப்பிய பண்பாடு.

போராளிகளை ஒழிப்போம் என்ற போர்வையில் பொதுமக்களை வேட்டையாடும் கூட்டு முயற்சிக் கும்பலிடம் தப்பிவந்த குமார் "செல்" விழுந்து தன் குடும்பத்தையே இழந்த சோகக் கதைகக்குச் சொந்தக் காரன். யாழ்ப்பானப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற பத்துமைல் சைக்கிளில் வந்து படித்த குமார் ஏழை விவசாயியின் எஞ்சியுள்ள வாரிசு. இலங்கை அரசாங்கத் தால் அனாதை ஆக்கப்பட்ட குமாருக்கு சுவிஸ் அரசாங்கம் இன்னும் மட்டைவழங்கவில்லை. ஏனென்றால் முட்டாள்களைத்தான் தங்களுக்குத் தேவை என்று பிற நாடுகளில் இருந்து எடுப்பதனால் ஏ/எல். வரைபடித்த தனது மாமன் மகளை நிர்ப்பந்தத்தின் மூலம் நிரந்தர மாக்கி வாழும் சொத்துக்கள் இல்லாத சுத்துமாத்து அற்ற சுதந்திர மனிதன்தான் குமார்.

போத்தலினுள் இருக்கும்போது தங்கள் நிறங்களை மட்டும் காட்டி நிற்கும் மதுக்கள் வயிற்றினுள்போனதும் தங்கள் குணங்களைக் காட்டத் தவறுவதில்லை. வேலை அலுப்புத்தீர மூன்று "ஸ்டாங்க" அடித்த குமாருக்கும் இதன் அனர்த்தங்கள் வெளிப்படத் தொடங்கின. குமாரின் மௌனம் மெல்ல மெல்ல கலைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தம்பி கார்த்திக் என்ன கடுமையாய் யோசிக்கிறீர்...'

'இந்த வெள்ளை களைக்கண்டு பயப்படப்படாது. நாம ஆரம்ப காலத்தில் வெள்ளையர்களுக்கு இடம் கொடுத்த படியால்தான் நமக்குநாடு நாடாக சென்று கை உயத்திற நிலைமை வந்துவிட்டது. வெள்ளைக்காரன் முதல்ல வந்து வையினை குடிக்க இரத்தத்தைக் குடிக்கிறான் எண்டு புத்தகங்களில் எழுதி நம்ம, பயப்பிட வைத்து விட்டார்கள். முந்தி ஒரு காலத்தில ஐரோப்பிய நாடுகள் கஸ்டத்தில இருந்த போது நம்மட நாடுகளுக்கு வந்து நகமுள்ளவரை நமது பொருளாதாரத்தைச் சுரண்டி தங்கள் நாடுகளை கட்டி எழுப்பி விட்டார்கள். போதாக் குறைக்கு பின்னடிக்கு பிரச்சினை வரட்டும் எண்டுவிட்டு தீர்வற்ற முறையில தீவைவிட்டு வெளிக்கிட்டு விட்டார்கள். இப்ப என்னடாவெண்டால், அகதிகளாக வந்து முதலாளித்துவப் பொருளாதாரம் வளர நம்மை கூலிகளாகப் பாவிக்கிறார்கள். முந்தி இவர்கள் வந்து சுரண்டினார்கள். இப்போ இங்கிருந்தே சுரண்டுகிறார்கள். இது தான் வித்தியாசம். மொத்தத்தில இரண்டாலும் இவர்களுக்குத் தான் லாபம். நான் இந்த றெயினிலதான் வேலை முடிந்து போறது. இண்டைக்கு நான் சூறிச் வரையும் உம்புடன் வருவன். நான் தம்பி இந்த றெயினில ஏறினா ஒரு தமிழருக்குப் பக்கத்திலயும் இறக்கிறதில்ல. ஏறின உடனே முன்பின் தெரியாதவர் கூட நாம சும்மா இருந்தாலும் அண்ணே இலங்கையில் எவடம் என்பது ஆயத்தப்படுத்திய முதலாவது கேள்வி. எவடம் எண்டு கேட்டவர் சும்மா இருந்தாலும் பரவாயில்லை. அப்பிடியெண்டா அவரை தெரியுமா இவரை தெரியுமா எண்டு கேட்டார்கள். இதெல்லாம் இவர் என்ன சாதி எண்டு அறியியதுக்கான கேள்விகள் பலன் இல்லாத பழக்கவழக்கங்கள்தான் எங்களைப் பாழாக்குது.

வெள்ளைக்காரனுக்குத் தமிழ் விளங்காமல் இருப்பது எவ்வளவோ வகையில நமக்கு நல்லது. கட்டுப்பாடில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுக்கடைகள் இருக்கும் ஐரோப்பாவில ஒரு வெள்ளைக் காரனாவது வெறியில போறானே. எங்கட சிலசனங்கள் அரையில துண்டில்ல யெண்ட துணிவில வாந்தியெடுக்கும் வரை குடிப்பது வாடிக்கையாப் போட்டுது. என்ர கருத் தென்னெண்டா தம்பி குளிருக்கு குடிக்காமல் இருக்க இயலாதெண்டு சொல்லுறவர்களது மனைவிமாரும் குடிக்க வெளிக்கிட்டால்தான் இவையற் திருந்துவினம். அல்லது வசதியாப் போச்செண்டு வாங்கிகுடுப்பீனுமோ தெரியாது. சரி வந்தது தான் வந்தமெண்டு வெள்ளைக் காரனிடம் இருக்கும் நல்ல பழக்கங்களைப் பழகவும் பல பேருக்கு மனசு வருகுதில்ல.இவர்களைப் பற்றி கதைக்கத் தொடங்கினால் தம்பி இந்த றெயின் மொஸ்கோவரை போனாலும் முடியாது.'

இவ்வளவு கதையையும் கேட்டுக் கொண்டிருந்த கார்த்திக்கிற்கு குமாரை நன்றாகப் பிடித்துவிட்டது. கார்த்திக் வந்து இரண்டு மாதத்தில் குமாரைப்போல் ஒருவரையும் சந்திக்கவில்லை. சாடையாக மது அருந்தி யிருந்தாலும் எங்கள் கலாச்சாரத்தில் விழுந்து விட்ட ஓட்டைகளைப்பற்றிக் கூறியது கார்த்திகை அவர்பால் இழுத்தது. பார்ப்பதற்கு நாசூக்காக உடை அணிந்திருந் தாலும் நாகரீகமானவராகவே குமார் காணப்பட்டார். சுவிசில் வாழும் எத்தனையோ தமிழ் இளைஞர்களைத் திருத்த முற்பட்டும் தோல்விகண்ட தொனி குமாரதுகதை களில் இழையோடி இருந்தது. இலங்கை தமிழர்கள்பலர் இங்குவந்து கெட்டுவிட்டார்களா? அல்லது கெடுக்கப் பட்டு விட்டார்களா? என்பது கார்த்திக்கின் கேள்விக்குறி யாக இருந்தது. இலக்கணம் இல்லாதமொழி எவ்வாறு அழிந்து விடுமோ அதேபோல் கட்டுப்பாடில்லாத எங்கள் தமிழ் சமுதாயமும் அழிந்துவிடும் என்பதை கார்த்திக் உணர்ந்தான். கற்பூரவாசனை தெரியாத இடத்தில் கற்பூரம் விற்கப் போன கதையாக எமது வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலித்தனத்துள் புகுந்து விட்டதை குமாரது கருத்துக்கள் பறைசாற்றின.

குமார் மீண்டும் தொடர்ந்தான். "என்ன கார்த்திக் ஒன்றுமே பேசாமல் இருக்கிறீர் வந்திருந்து அறுக்கிறானோ?"

"இல்லையண்ணே உங்களைப் போன்ற சில முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் இங்கிருப்பதால் தான் எங்கள் சமுதாயம் இந்தளவிலாவது இருக்கின்றது. நீங்கள் சொல்லுங்கள் நான் கேட்டுக் கொண்டே இருக்கிறன்" என்று கார்த்திக் சொன்னதும் அவனது வார்த்தைகளுக்குக் குமார் கட்டுப்பட்டார். தனது மனக் கஷ்டங்களை, தனது இலட்சியங்களை ஒரு தமிழனுக்காவது புரியவைக்க முற்பட்ட குமார் தொடர்ந்தான்.

"காட்டுக்குத் தவம் செய்யப்போன முனிவர் கண்ணில கண்ட பெண்ணை கற்பழித்த கதை மாதிரி இங்க அகதியா வாழுற நாம அடக்க ஒடுக்கமா இருப்பமெண்டதில்லை. இலங்கை தமிழ் பெண்கள் இங்கையும் தனியாக வெளியே போக எங்கள் தமிழ் பொடியளுக்கே பயப்படுகிறார்கள். பெண்ணைக்கண்டால் கையெடுத்துக் கும்பிடும் கலாச்சாரத்தில் வளர்ந்தவர்கள் கைதட்டிக் கூப்பிடும் கலாச்சாரத்துக்குள் தள்ளப்பட்டு விட்டார்கள். யாழ் பஸ் நிலையங்களில் பெண்களைக்கேலி செய்து திரிந்த நக்கல் பூக்களின் வாரிசுகளின் தோட்டிவேலை இது. எப்போ வீட்டுக்குள் பத்தினியாக இருக்கும் ஒரு தமிழ் பெண் வெளியில் வந்து பத்திரகாளியாக மாறி பகல் வேசக்காரர்களை சமுதாயத்திற்குக் காட்டிக் கொடுக்கிறாளோ அப்போதான் இதற்கொரு முடிவுவரும். திருந்தாத சில உள்ளங்கள் இருக்கும் போது அவர்களுக்காக வருந்துகின்ற உள்ளங்கள் இருந்தென்ன இலாபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி? எந்த நாட்டில் இருந்தாலும் அந்த நாட்டிற்கு விசுவாசமாக இருக்கவேண்டுமென்பதுதான் எனது கொள்கை."

21ம் நூற்றாண்டில் எப்படி வாழலாமென கம்பியூட்டரைக் கேள்வி கேட்கும் மனிதர்கள் வாழும் இந்த நாடுகளில் 24 மணித் தியாலத்தில் சுற்றும் பூமியை 12 மணித் தியாலத்தில் சுற்ற முயற்சிக்கிறார்கள். விஞ்ஞானத்தில் பல விந்தைகளைக்காணும் மனிதர்களுடன் வாழ்ந்து கொண்டு நாங்க என்னடா வெண்டால் எத்தனை பவுணில தாலி செய்தா மொத்தமாக இருக்குமென தங்க வியாபாரிகளிடம் தரகுபேசிறம்.

ஐரோப்பிய வளர்ச்சி என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எங்கள் நாட்டுடன் ஒப்பிடும்போது 150 வருடங்கள் முன்னோக்கியது. நாங்கள் என்டா வென்றால் வந்த மூன்று வருடத்தில் அவர்களது நாகரீகத்தை பின்பற்ற நினைப்பது நீச்சல் தெரியாமல் சமுத்திரத்தில் குளிக்கப் புறப்படுவது போல என்க்குப் படுகுது தம்பி. முடங்கப்பாய் இல்லாவிட்டாலும் சடங்கை நிறுத்தாத சம்பிரதாயங்களைக் கொண்டது எங்கள் கலாச்சாரம். இங்கு எங்கள் சடங்குகள் எல்லாம் அல்லோலகல்லோலம் தம்பி. கலியாண வீடென்றால் முறையென்ன உரிமையென்ன உரித்தென்ன பார்க்கிறார்கள்? கையில் கொண்டு வந்திருக்கும் வெள்ளை கவரின் கனத்தில்தான் அவர்களது கவனம் இருக்கிறது. உண்மை தான் இவர்கள் நிறைய மாறிவிட்டார்கள். ஆனால் திருந்தவில்லை. இப்போ வரவர தமிழர்களுக்குத் தமிழ் கூட சரிவர விளங்காத நிலைமை. மாற்றமென்றால் என்ன? முன்னேற்றமென்றால் என்ன? கேட்டுப்பாரும். வேட்டியைவிட்டு லோங்ஸ் போட்டதைச் சொல்லுவார்கள். வரவர ஒன்றையுமே சரியாக விளங்கிக் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் மரத்துப் போகிறார்கள். இவைகளைக் கதைத்துத்தான் என்ன பயன்? செவிடன் காதில் ஊதிய சங்குதான்' என்று கூறி மனக்கஸ்டத்துடன் நிறுத்தினான்.

வேகமாக ஓடிக்கொண்டிருந்த புகையிரதம் "ஒல்றனை" தாண்டி இடையிடையே மூலைக்குகைகளின் வழியாக ஓடிக்கொண்டிருந்தது. குமார் கலைந்திருந்த உடுப்புகளை சரிசெய்து "ரொயிலற்" போய்வருவதாக கூறி நடந்தான். குமாரின் கதைகளின் மூலம் வந்து இரண்டு மாதத்தில் 5 வருடம் சுவிசில் வாழ்ந்த எண்ண அனுபவங்களை கார்த்திக் பெற்றுக்கொண்டதால் அவன் மனச்சுமை அதிகரிப்பதை அவனால் உணரமுடிந்தது. எதிர்காலத் திட்டங்களை வகுக்க வேண்டிய கார்த்திக் தனது இறந்த கால நினைவுகளை மீட்கத் தொடங்கினான்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திக் சிறிமா அரசாங்கத்தில் தனது தகப்பனாருக்கு இராமநாதபுரம் .10ம் வாய்க்காலில் குடியேற்றத்திட்ட காணி கிடைத்ததால் எட்டு வயதிலேயே பெற்றோர்களுடன் அங்கு சென்று விட்டான். படித்து முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் இருந்தாலும் அவர்களது வருவாய் உள்ளூர் பாடசாலைக்கு அப்பால் செல்ல முடியவில்லை. ஓ/எல் வரை படித்த கார்த்திக் வயோதிபப் பருவத்தில் இருக்கும் தனது தந்தைக்காகவும் இரண்டு தங்கைகளை வாழ வைப்பதற்காகவும் ஏர்பிடிப்பது எளிமை அல்ல என்று எல்லாக் குடும்பப் பொறுப்புகளையும் சுமந்து கொண்டான். வானம் பார்த்த பூமியாக இருந்த இவர்களது வயல்கள் வானம் பொய்த்து விடும்போது கார்த்திக்கின் முகத்தைப் பாரக்காமலே இருந்து விட்டன.

கூட்டுறவுச் சங்கக் கடன், வட்டி கடன் என்றெல்லாம் வயலுக்கு இறைத்து போட்ட காசை எடுக்க முடியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு கார்த்திக்கைக் கடன்காரனாக்கி விட்டது. இந்த நிலைமையில் கார்த்திக் இருந்தபோது பட்ட கடனை அடைப்பதற்காக அந்த ஊர் மணியகாரரின் மகனது மிளகாய்த் தோட்டத்தில் முழுநேர கூலி வேலையாகச் சேர்ந்தான். முழுநேர கூலியாக வேலை செய்யும் கார்த்திக்கிற்கு தனது சொந்த வயலிலும் விதைப்புகள் வேலைகள் என்று இருப்பதால் களைப்பிலும் கனவிலும் உழைப்பைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். மணியகாரரின் மகன மூர்த்தியுடன் வேலை செய்வதில் கார்த்திக்கிற்கு ஒரு சந்தோஷம். அவர் படிப்பிற்கு மட்டம் தட்டி இருந்தாலும் நேர்மை நிஜாயத்துக்காக வாழ்பவர். ஆனால் தனக்கென்று ஒன்று வரும்போது கொலையும் செய்யத் தயங்காதவர். தோட்டத்தில் வேலை செய்ய வந்த கார்த்திக் மூர்த்தியின் மனதில் இடம் பிடித்து விட்டதால் கணக்கு வழக்குகள் வரை பார்க்கத் தொடங்கி வீட்டில் ஒரு பிள்ளைபோல் ஆகிவிட்டான். கார்த்திக்கின் கடன்களும் மெல்ல மெல்ல குறையத் தொடங்கின.

இந்த வேளையில்தான் மூர்த்தியின் மகள் அமுதா தண்டிக்குளியில் ஏ/எல் எடுத்து விட்டு வீட்டுக்கு வந்தாள். இதுவரையும் கார்த்திக்கிற்கு அவளைத் தெரியாது. மூர்த்திக்கு ஒரு பிள்ளையுண்டு என்பது தெரிந்த கார்த்திக் இந்தளவு பிள்ளை என்பதை தெரியாமல் இருந்தான். கார்த்திக்கிற்கு தங்கள் வீட்டில் இருக்கும் செல்வாக்கும் கௌரவமும் வேறு ஒருவருக்கும் இதுவரையில் தன் அப்பா கொடுக்கவில்லை என்பது அமுதாவின் முடிந்த முடிவாயிற்று. கார்த்திக்குக்கு மூர்த்தி கொடுத்த மரியாதையைப் பார்த்த மற்றவர்கள் கிண்டலாக மூர்த்தியின் மருமகன் என்று சொன்னதும் காதில் விழாமல் இல்லை. இரண்டு இள உள்ளங்களின் மனதிலே ஓயாத அலைகளாகப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண வேடிக்கைகள் சில வெடிக்கின்றன; சில பூக்களாகக் கொட்டுகிறது இலக்கியக் காதல்கள் எல்லா வரம்புகளையும் மீது நிற்பதை நினைவு படுத்திய கார்த்திக் இந்த விடையத்தில் தன் முதலாளியை பின்னுக்கே வைக்க வேண்டியதாயிற்று. ஒருநாள் தன் முடிவைத் தெரிவிப்பதற்காகக் கார்த்திக் பூவொன்றை அமுதா வரும் பாதையை நோக்கிக் கொண்டு சென்றான். மனத்தில் துணிவை வரவழைத்த கார்த்திக் பூவை அமுதா கையில் கொடுக்க, அவளும் ஒரு பூவை கொடுத்தாள். இருவருக்கும் உடம்பு புல்லரித்தது. ஒரு போதுமே பேசிக் கதைக்காத இவர்களது செயலைக் கண்டு தேவர்கள் பூமாரிபொழியவில்லை. ஆனால் காதல் தெய்வீகமானது என்பதைக் காட்டி நின்றது. பல சினிமாப் படங்களைப் பார்த்த அமுதாவுக்கு ஆயிரம் பெண்கள் வெள்ளை சேலை அணிந்து சிலோமோசனில் தங்களை நோக்கி தந்தன தந்தன... என்று ஓடி வருவதுபோல் இருந்தது.

புயலுக்குப் பின் ஏற்பட்ட அமைதி இருவர் மனதிலும் கார்த்திக்கிற்கு முதலாளி வீட்டில்தான் சாப்பாடு. ஆனாலும் காதலியின் காப்புக்கை சமையலும் பறிமாறலும், சங்க காலத்துத் தோழி அமுதாவுக்கு இல்லாததால் நேருக்கு நேரே பேச வெட்கப்படும் இக்கட்டான நிலை. மண் வெட்டி பிடித்து மரத்த கை அமுதா வீட்டுத் தோட்டத்தில் இப்போ சொந்தம் கொண்டாடுகிறது. முன்பிலும் பார்க்க கார்த்திக் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பது மூர்த்திக்கு சந்தோஷமாக இருந்தது. ஆண் வாரிசு இல்லாத மூர்த்திக்கு கார்த்திக் சொந்தக்காரனாகவே இருப்பது போல் ஓர் உவகை.

அன்று மாலை 4 மணியிருக்கும் பொங்கலுக்கு கார்த்திக்கின் தாய் தந்தை உட்பட எல்லோரும் நெடுந்தீவுக்குப் போவதாக இருந்தார்கள். அதனால் கார்த்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாக முதலாளி வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து 2 மணியுடனே வீடு திரும்புவதாக இருந்தான். அமுதாவுடன் கதைத்துக் கதைத்து கற்பனை வலுவிழந்த கார்த்திக் ஒரு கடிதத்தை தனது சட்டைப் பொக்கற்றுள் வைத்திருந்தான். பரீட்சை முடிவு பார்க்க பாடசாலை சென்ற அமுதா இன்னும் வீடு திரும்பாததால் கடிதம் அவனது இதயத்துடன் இறுக்கமாக இருந்தது. அன்ன ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தான் மூர்த்தி.

"தம்பி கார்த்திக் கட்டாடிவாரும் எல்லா உடுப்புகளும் கொண்டுவாறான் போல இருக்கு போட்டிருக்கிற உடுப்பையும் கழற்றி போட்டுவிட்டு வெளுத்த உடுப்புகளைப் போட்டு கொள்" என்றார். மூர்த்தியின் குரலை வேத வாக்காகக் கொண்ட கார்த்திக் "கொக்கற்றுள்" இருந்த கடிதத்தை மறந்துவிட்டான்.

மீண்டும் மூர்த்தியின் குரல்.

தம்பி கார்த்திக் நேரமாகுதுபோல நீ போயிற்று கெதியாவா. நீ இல்லாவிட்டால் இந்த "ரைக்ரருக்கும்" வேலை இல்ல இதை கொண்டு போய் உன்ர வீட்டில விட்டுவிட்டு வரும்போது எடுத்துக் கொண்டு வா" என்றார்.

ரைக்ரரை எடுத்துக் கொண்டுபோன வழியில் இராணுவத்தால் மறிக்கப்பட்டு, மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு அறிவற்ற நிலையில் "றக்"கில் ஏற்றப் பட்டதை பாடசாலை சென்றுவந்த அமுதா கண்டாள். அப்போது ஆயிரம் குதிரைகள் அவள்மேல் ஓடுவது போலிருந்தது. சிறகிழந்த பறவையாக வீடுதிரும்பிய அமுதா அழுது கரைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமறிந்த மூர்த்தி பாதாளம் வரை பணத்தைப் பாயவிட்டும் கார்த்திக் பிணமாக்கப்பட்டுவிட்டான். என்பதையே முடிவாகப் பெற்றார். கார்த்திக்கை இழந்த பெற்றோர்கள் கவலையை மறப்பதற்காக இராமநாத புரத்தை விட்டு பிறந்த மண்ணுக்கே திரும்பி விட்டார் கள். கார்த்திக்கின் நினைவுகள் மெல்ல மெல்ல அகலத் தொடங்கியபோது கட்டாடி மூர்த்தியின் வீட்டுக்கு வந்து கார்த்திக்கின் பொற்கற்றினுள் இருந்த கடிதத்தை மூர்த்தியிடம் கொடுத்தான்.

அன்பே அமுதா

என் தேன் சொட்டத் தமிழ் பேசும் திரு விளக்கே எங்கே உன் வரவு காணாமல் போய் விடுவேனோ என பயப்படுகிறேன். உன்னோடு இருக்கும் கற்பு என் உயிரை என்னாளும் காப் பாற்றும் பொன் காட்டும் நிறத்தையும் பூக் காட்டும் அழகையும் அன்னத்தின் நடையையும் கொண்ட நீ எனக்குப் பிரமனால் வடிக்கப்பட்ட ஓர் தெய்வச் சிலை. ஓடிவருதல் கண்டு ஆவி தழுவும் நிலையை எனக்குக் கொடுத்துவிட்டாய். படுத்தை நொந்து உள்ளம் வெந்து உனக்காக ஏங்குகிறேன். பொங்கல் முடித்து தங்கள் முகம் காண விழைகின்றேன். என் முதலாளி நல்லவர் உத்தமர். உனது அப்பா எப்படியோ (பகிடி)

இப்படிக்கு
உன் உயிரோடு உறவாடும்
கார்த்திக்.

கடிதத்தை வாசித்து முடித்த மூர்த்தியின் கண்கள் ஓர் மருமகனை இழந்துவிட்ட அளவுக்கு கண்ணீரைக் கொட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தால் பிடிக்கப்பட்ட கார்த்திக் 4 வருடங்களாக மணி அடித்தால் சோறும் மயிர்முளைத்தால் சேவும் என்று காலி பூஸாமுகாமில் பூட்டிவைக்கப்பட்டான். சிறையை விட்டு வெளி வந்தவன் கொழும்பிற்கு தனது பெற்றோரை அழைத்து பார்த்தான். இறந்து விட்டதாகத் திவசம் கொண்டாடியவர்கள் மனதில் ஓர் சூரிய உதயம்.

கற்பனையில் கூட தாங்க முடியாத சோகங்களைத் தனது நிஷ வாழ்க்கையில் பெற்ற கார்த்திக் புகையிரதம் கூறி அடையப்போவதை அறிவித்தல் மூலம் அறிந்தான்.

"ரொயிலற்றுக்குள்" இருந்து வந்த குமார் "தம்பி கார்த்திக் இனி நான் இறங்கப் போறேன். இண்டைக்கும் உங்க ஒரு தண்ணிவார்ப்பு வீடு. நான் வேலையால் இங்கே வாறதெண்டு மனைவிக்குச் சொன்னனான். மனிசிவந்து இதில நிற்பா. இன்னுமொரு நாளைக்கு வீட்டுக்கு ஆறுதலா வாரும் இந்த விசிற்றிங்காட்டில ரெலிபோன் நம்பர் விலாசம் எல்லாம் இருக்கு" என்றுசொல்லி விட்டு குமார் இறங்கி நடந்தான்.

குமாருக்குக் கைகாட்டிக் கொண்டேயிருந்த கார்த்திக் குமாரின் மனைவியைக் கண்டான். உற்றுப் பார்த்ததில் தனது அமுதாவே குமாரின் மனைவி என்பதை அறிந்தான். தன்னை நோக்கி வருகிற கணவர் றெயினுக்குளிருக்கும் யாருக்கோ கையசைத்துக் கொண்டிருப்பதைக்கண்ட அமுதா அது யாரென்று பார்க்க முற்படுகையில் நகரத் தொடங்கிய அந்தப் புகையிரதத்தை வேகமாக வந்து நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு புகையிரதம் மறைத்தது. பாறாங்கல்லாய் கனத்துவிட்ட தலையைக் குனிந்த கார்த்திக் குமாரின் பிளாஸ்ரிக் விசிற்றிங்காட் விரல்களின் வியர்வையில் ஒட்டு வதை உணர்ந்தான். வியர்வையில் ஒட்டிய விசிற்றிங் காட்டைத் தொடர்ந்து தன் நினைவுகளிலும் ஒட்டவிட விரும்பாமல், கார்த்திக் பிறர்மானத்தையும் காக்க விரும்பியதால் எதிரேயிருந்த குப்பைத் தொட்டிக்குள் போட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AETE ATWE

ஐதஎஒ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org